தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை.

புதன்கிழமை, 1982 மார்ச், 3.

மாசி 19, துன்மதி, திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்

திட்டங்களைச் செயல்படுத்தும் முறைகளை அறிந்து இருந்தாலும், இன்றைய உலகப் போக்கினைப் புரிந்துகொண்டு அதற்கேற்ற வகையில் செயல்படுவதே நல்லது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

வியாபாரக் கடைகளில் விலைப் பட்டியல்களை வைக்கும் திட்டம்.

*வினா எண். 321—திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள வியாபாரக் கடைகளில் விலைப் பட்டியல் வைப்பது இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) விலைப்பட்டியல் வைத்து வியாபாரிகள் அரசு குறிப் பிட்ட விலையில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ;

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தமிழ்நாடு அட்டவணைப் பொருட்கள் (இருப்பு பற்றிய அறிவிப்பு, விலைகள் மற்றும் கணக்குகள் பராமரித்தல்) ஆணை, 1977-ன் படி இன்றி

யமையாப் பண்டங்களின் விலைப்பட்டியல்களை வணிகர்கள் தங்கள் கடைகளில் வைக்க வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இந்த ஆணையைத்தீவிரமாக அமல்படுத்த வேண்டும் என்று அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) கோதுமைப் பொருட்களான மைதா, ரவை, மண்ணெண்ணெய் மற்றும் சிமென்ட் ஆகியவற்றுக்கு மட்டும்தான் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதர இன்றியமையாப் பொருட்களுக்கு விலைக்கட்டுப்பாடு கிடையாது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, பல இடங்களிலே இன்று அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் எழுதி வைக்கப்படாமல் இருக்கிறதே, அப்படிப்பட்ட கடைக்காரர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து இருக்கிறதா? அப்படி எடுத்து இருந்தால், இதுவரையில் எத்தனை கடைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, வட்ட வழங்கு அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இதற்கான நடவடிக்கைகளை அவ்வப்போது எடுத்து வருகிறார்கள். 1980 ஆம் ஆண்டில் 465 வழக்குகள் போடப்பட்டன. அவற்றில் 225 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டன. 67 வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன. ஒருவர் இறந்து விட்டார். மீதி வழக்குகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. 1981 ஆம் ஆண்டில் 179 வழக்குகள் தொடரப்பட்டன. 57 வழக்குகளில் தண்டனை கொடுக்கப்பட்டன. 27 வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன. 95 வழக்குகள் நீதிமன்றங்களில் உள்ளன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விலைப் பட்டியல் வைக்க வேண்டும் என்று விதி இருந்தாலும் கூட அது பல இடங்களில் முறையாகப் பின்பற்றப்படுவது இல்லை. அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது. விலைப் பட்டியல் போடுகின்ற நேரத்தில் கூட அந்த விலைகள் நியாயமான லாபத்திற்கு உட்பட்டு இருக்கிறதா என்று பார்க்கப்படுகிறதா? ஸ்டாக் வைத்திருப்பது சரியாக இருக்கிறதா என்று பார்க்கப்படுகிறதா? அரசால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஆங்காங்கு இருக்கின்ற அதிகாரிகள் கடைகளிலே இந்த விலைப் பட்டியல்கள் வைக்கின்றார்களா என்பதைப் பார்த்து வருகிறார்கள். 37 அத்தியாவசியப்பண்டங்களுக்கு

1982 மார்ச் 3]

விலைப் பட்டியல் வைக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். இருப்புக் கணக்குகளும் அவர்கள் பட்டியலில் எழுதி வைக்க வேண்டும். விலைப்பட்டியலில் விலைகளும் குறிக்கப்பட வேண்டும். விலை அதிகமாக இருக்கிறதா அல்லது இருப்பு நிலைமையைச்சரியாகப் புலப்படுத்தியிருக்கிறார்களா என்பதைப் பார்த்து, அந்த வகையில் தவறு இருந்தால் வழக்குத் தொடரலாம். அந்த வகையில்தான் அவர்கள் வழக்குகளை நான் முன்பு தெரிவித்த மாதிரி தொடர்ந்து இருக்கிறார்கள். மேலும், வட்ட வழங்கல் அதிகாரிகள் அதைப் பற்றி ஆராய்ந்து பார்த்து, அவ்வப்போது நடவடிக்கை எடுக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் கண்காணித்து வருகிறார்கள். அதைப் பற்றி குடிமைப் பொருள் வழங்கல் புலனாய்வுத் துறை இவற்றைக் கண்காணித்து வருகிறார்கள். மாதம் ஒரு முறை இது பற்றிய தகவல்களையும், தன்மீது எடுத்த நடவடிக்கைகள் பற்றியும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வட்ட வழங்கல் அதிகாரி அறிக்கை அனுப்பிவைக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டு இருக்கிறது.

திரு. செ. செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அத்தியாவசியப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்துள்ளதாகச் சொன்னார்கள். அப்படிப்பட்ட முறையில் அத்தியாவசியப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டு இருந்தாலும், கொள்ளை லாபம் அடிக்க நினைக்கும் வியாபாரிகள் அப்படிப்பட்ட பொருள்களை விற்பனை செய்கின்ற நேரத்தில் அளவு குறைவாகக் கொடுத்து வியாபாரம் செய்வதாக அரசுக்கு ஏதேனும் புகார்கள் வந்துள்ளதா? அதைத் தவிர்க்க பாலிதின் போன்ற பைகளில் அந்த அத்தியாவசியப் பொருள்கள் பேக் செய்து விற்கப்பட வேண்டும் என்று அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அளவுகள் சரியாக இருக்கின்றனவா என்று கண்காணிக்கப்பட்டு வருகின்றன. கடைகளில் பயன்படுத்தப்படுகிற அளவுகள், படிகள் மற்றும் அளவைக் கருவிகள் ஆகியவற்றை அவ்வப்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பரிசோதிக்கின்றனர். அதிலே ஏதாவது மோசடியோ அல்லது ஏமாற்றமோ செய்யப்பட்டு இருக்குமானால், அது குறித்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. சில கடைகளில் பாலிதின் பைகளில் குறிப்பிட்ட பொருள்களைப் பேக் செய்து விற்கின்றனர். ஆகவே, எல்லோரும் பாலிதின் பைகளில் போட்டு விற்க வேண்டும் என்று உத்தரவிடுவதற்கு இல்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்த விலைப் பட்டியல் வைக்காமல் அல்லது அதிக விலைக்கு விற்கக் கூடியவர்களை, 'பிளாக் மார்க்கெட்டில்' விற்கக்கூடியவர்களை,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அந்த வியாபாரிகளை 'பிளாக் லிஸ்டில்' போட்டு, அவர்களைப் பற்றி பத்திரிகைகளிலும் ரேடியோவிலும் அம்பலப்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 'பிளாக் லிஸ்ட்' என்று கொண்டுவந்து பட்டியல்போட்டு பத்திரிகைகளில் அறிவிக்கும் நடைமுறை கையாளப்படவில்லை. ஆனால், இது சம்பந்தமான வழக்குகள் நடைபெறும்போதும் தண்டனை அளிக்கும்போதும் அந்த விவரங்கள் பத்திரிகைகளில் வருகின்றன. யார், யார் என்னென்ன குற்றங்கள் செய்தார்கள் என்றும், என்னென்ன தண்டனைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன என்றும் மக்கள் அறிந்து கொள்வதற்காகவும் அவர்களைப்பற்றி மக்கள் புரிந்துகொள்வதற்காகவும் பத்திரிகைகளில் வெளியிடுகிறார்கள்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : தலைவரவர்களே, இப்போது கடைகளிலே விலைப்பட்டியல் வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஓட்டல்களிலும் ஒவ்வொரு ஓட்டலிலும் ஒரே பலகாரத்திற்கு ஒவ்வொருமாதிரியான விலை வைத்து விற்கிறார்கள்; ஓட்டல்களில் விலைப்பட்டியல் வைக்காததுதான் இதற்குக் காரணம். ஆகவே, எல்லா ஓட்டல்களிலும் பலகாரங்களின் விலைப் பட்டியலை வைக்க வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஓட்டல்களிலே கட்டாயமாக விலைப்பட்டியல் வைக்க வேண்டுமா என்பது பற்றிய குறிப்பு தற்போது என்னிடம் இல்லை. அப்படி இருக்குமானால் அதைக் கண்காணிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இராஜபாளையத்தில் கைப்பற்றப்பட்ட மண்ணெண்ணெய்.

* வினா எண் 322—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 27—12—1980 தேதி இராஜபாளையத்தில் பதுக்கி வைக்கப்பட்டு இருந்த சுமார் 38,000 லிட்டர் மண்ணெண்ணெய் தனியார் கடைகளிலிருந்து சிவில் சப்ளை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் சம்பந்தப்பட்டவர்களின் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

1982 மார்ச் 3]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ) இராசபாளையத்தில் 20—12—1980 அன்று மூன்று தனியார் கடைகளிலிருந்து 20,750 லிட்டர் மண்ணெண்ணெய் சரிவர கணக்கு வைக்கவில்லை என்ற காரணமாக உணவுத்துறை குற்றப் புலனாய்வு காவல் துறையால் கைப்பற்றப்பட்டது. அவற்றில் இரண்டு வியாபாரிகளின் கணக்குகள் சரியானவை யென்று கண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் கைப்பற்றப்பட்ட மண்ணெண்ணெய் முழுதும் திருப்பிக் கொடுக்க ஆணையிட்டு திருப்பிக் கொடுக்கப்பட்டது. மற்றொரு வியாபாரியைப் பொறுத்தவரை அவர் பில்களில் குடும்பக்கார்டு எண்கள் குறிப்பிடவில்லையென்ற குற்றத்திற்காக விசாரணை செய்யப்பட்டு இக்குற்றத்தை மீண்டும் செய்யக்கூடாது என்று எச்சரிக்கப்பட்டார். கைப்பற்றிய மண்ணெண்ணெயும் திருப்பிக் கொடுக்கப் பட்டது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, குடும்பக் கார்டுகள் மூலம் பொதுமக்களுக்கு கொடுக்க வேண்டிய மண்ணெண்ணெயை இப்படிப் பதுக்கியவர்களை அரசாங்கம் எச்சரிக்கை செய்து விட்டுவிட்டால் மீண்டும் அந்தப் பதுக்கல் பேர் வழிகளுக்கு அரசாங்கம் எச்சரித்து விட்டுவிடும் என்ற எண்ணத்தில் உற்சாகம் வந்துவிடும். தவறு செய்வதற்கு ஊக்கம் ஏற்பட்டுவிடும். ஆகையால் அப்படிப் பதுக்கியவர்களையும், அரசுக்குத் தவறான தகவல் கொடுத்து, எச்சரித்து விட்டுவிட்ட மாவட்ட ஆட்சித் தலைவரையும் பாதுகாப்புச் சட்டப்படி கைதுசெய்து விசாரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட குற்றங்கள் நடைபெறுவதாகத் தெரியும் போது மாவட்ட ஆட்சித் தலைவர் விசாரணை செய்கிறார். அப்போது கிடைக்கின்ற தகவல்கள் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கிறார். முதல் தடவை செய்த தவறாக இருந்தால் குற்றவாளி மன்னிக்கப்படுகிறார். இரண்டாவது தடவை அதே குற்றத்தைச் செய்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தொடர்ந்து இப்படிப்பட்ட குற்றங்களை ஒருவர் செய்துவருகிறார் என்று தெரிய வந்தால் மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க போதுமான சட்டங்கள் இருக்கின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, சென்னை மாநகரில் வீதிகளில் எல்லாம் கைவண்டிகள் மூலம் மண்ணெண்ணெய் தெருத் தெருவாக விற்கப்படுகிறது. ஆனால் கிராமங்களில் விவசாயச் சங்கங்கள் மூலமாகத்தான் விற்பனை செய்யப்படுகிறது. 10 கிராமங்களுக்கு ஒரு விவசாயச் சங்கம்தான் இருக்கிறது. அதனால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே கிராமங்களிலும் கைவண்டிகளில் மண்ணெண்ணெயை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிய விவரம் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

Centre's assistance towards Drought Relief.

* *Q*. No. 323—THIRU. R. UMANATH: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) The total assistance to this Government has received from the Central Government towards drought relief and ;

(*b*) The details thereof?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) : வறட்சி நிவாரணப் பணிகளுக்காக பல்வேறு இனங்களில் செலவிட உச்சவரம்பாக ரூ. 49.77 கோடி என்று மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது. இதுவரை மாநில அரசு 56 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, வறட்சி நிவாரணப் பணிகளுக்காக நம்முடைய அரசு 56 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறது. ஆனால் மத்திய அரசு 47 கோடியே சொச்சம்தான் தந்திருக்கிறது. இப்படிக்கடுமையான வறட்சி போன்ற நிலைமை ஏற்பட்டு மாநில அரசுகள் நிதி இல்லாமல் கஷ்டப்படும்போது என்ன அளவுகோலைக் கொண்டு மத்திய அரசு உதவிப்பணத்தை நிர்ணயிக்கிறது ? எந்தவகையில் கொடுக்க வேண்டுமென்று ஏதாவது நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா ? 'நார்ம்ஸ்' ஏதாவது இருக்கிறதா ? அல்லது அவர்கள் இஷ்டம்போல் கொடுக்கலாமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.10)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, மாநிலங்களில் ஏற்படுகின்ற வறட்சி, வெள்ளம், புயல் போன்ற இயற்கை இடர்பாடுகளுக்காக நிவாரணத்தைப் பொறுத்தவரையில் அந்தந்த மாநில அரசுகள் அவர்களுடைய தொகையில் சில பகுதிகளை ஒதுக்கவேண்டும் என்று சொல்லப்படுகின்றது. அதன்படி நம்முடைய மாநிலமும் 8.59 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டி உள்ளது. மாநில பட்ஜெட்டில் நிவாரணப் பணிகளுக்

1982 மார்ச் 3]

மத்திய அரசு உதவி கொடுக்கின்றபோது அதிலே 70 சதவீதம் கடனாகவும் 30 சதவீதம் மானியமாகவும் கொடுக்கிறார்கள்.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, வறட்சிப் பணிகள் என்று சொல்லக்கூடியவற்றில் அரசாங்கம் நிர்வகித்த அத்தனை பணிகளும் முடிந்துவிட்டனவா? இந்த வறட்சிப் பணிகளைக் கண்காணிப்பதற்கு உறுப்பினர்கள் குழு இருக்கின்றதா? அதிலே அமைச்சரவர்களும் கலந்துகொள்வது உண்டா? இந்த வறட்சிப் பணிகளில் எவ்வளவு முடிக்கப்பட்டிருக்கின்றது? இந்த வறட்சி நிவாரணப் பணிகள் குறித்து அரசியல் கட்சிகளைச் சேர்ந்த அந்த கண்காணிப்புக்குழுவின் உறுப்பினர்கள் என்னென்ன கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிகமான கேள்விகளை மொத்தமாகக் கேட்டால அவை அனைத்திற்கும் நினைவு வைத்து பதில் சொல்ல இயலாது. ஆகவே சுருக்கமாக ஒன்றிரண்டு கேள்விகளை மட்டும்தான் கேட்கவேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, தாங்கள் சொன்னபடி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல கேள்விகளை ஒன்றாக இணைத்துக் கேட்டிருக்கிறார்கள். அதிலே எவ்வளவு என்னுடைய ஞாபகத்திற்கு வருகிறதோ அவற்றுக்குப் பதில் சொலகிறேன். இந்த அரசுதான் முதன்முதலில் வறட்சி நிவாரணப் பணிக்காக பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்ட குழுவினை அமைந்தது. இந்த மன்றத்தில் இருக்கின்ற அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் இதிலே இடம் பெற்றிருக்கிறார்கள். மாவட்ட வாரியாக அப்படி குழுககள கூடுகின்றபோது அவர்கள் கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். பெரும்பாலாக எல்லா உறுப்பினர்களுமே பாராட்டி இருக்கிறாகள். அப்படிப் பாராட்டி இருப்பதற்கான கணக்கும் இஙகே இருககின்றது. பல இடங்களில் நடந்த குழுக்கூட்டங்களில் வருவாய்த்துறை அமைச்சரும் மற்றும் பலவேறு கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டு இருக்கிறோம். அதிலே அவரவர்களுடைய கருத்துக்கள் எல்லாம் கேட்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று இருக்கின்றது. அந்த உறுப்பினர்கள் எலலாம் மிகவும் பாராட்டுகின்ற கருத்துக்களைத் தான் சொலலி இருக்கிறார்கள். அவற்றிலே ஒன்றைக் குறிப்பிடுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு பெ. சு. திருவேங்கடம் அவர்கள் 21—7—1981 அன்று பேசிய போது வறட்சி நிவாரணப் பணிகள் மிக நன்றாக நடந்திருக்கின்றன என்று சொல்லி இருக்கிறார்கள்...

[1982 மார்ச் 3

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்படி ஒவ்வொரு உறுப்பினருடைய பெயர்களையும் சொல்லி அவர்கள் எல்லாம் இப்படி, இப்படிப்பாராட்டி இருக்கிறார்கள் என்று சொன்னால் நேரம் போதாது. ஆகவே கேள்விக்குச் சுருக்கமாகப் பதில் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் எல்லோருடைய பாராட்டுக்களையும் படிக்கப் போவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்னைப்பற்றி சொல்லி இருக்கிறார்கள். ஆகவே

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்கக் கூடாது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; தலைவரவர்களே, அதுமட்டுமல்ல 11—8—1981-லே அவர்கள் பேசுகின்றபோது வேலைவாய்ப்பு நிவாரணப்பணிகள் மிகவும் மனநிறைவு அளிக்கின்றது என்று தெரிந்து இருக்கிறார்கள். அதேபோன்று திரு. துரைமுருகன் அவர்கள் இவ்வளவு சிறப்பான வேலைகள் இதுவரை நடந்ததில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். அதேபோன்று திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்களும திருச்சி மாவட்டத்தில் இதுபோன்ற நிவாரணப் பணிகள் நடந்தது இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் கேட்ட மற்றொரு கேள்விக்கு நான் பதில் சொல்கிறேன். வறட்சி நிவாரணப் பணி எல்லா மாவட்டங்களிலும் சிறப்பாக நடந்து முடிந்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, வறட்சி நிவாரணப்பணி நடந்து முடிந்துவிட்டதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். நெல்லை மாவட்டத்திலே தாமிரபரணி ஆற்றுப்பாசனப் பகுதியைத் தவிர மற்ற பகுதிகளில் கடுமையான வறட்சி ஏற்பட்டு குடிநீருக்குக் கூட மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய நிலமை ஏற்பட்டிருக்கின்றது. நெல்லை மாவட்டத்தில் ஓட்டப்பிடாரம், கோவில்பட்டி, விளாத்திக்குளம், சங்கரன்கோயில் போன்ற பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி என்னவென்றால் வறட்சி நிவாரணப் பணியிலே மத்திய அரசு மாநில அரசுக்கு உதவி செய்வது பற்றியது. ஆகவே மற்ற கேள்விகளை எல்லாம கேட்டால் அதற்குப்பதில் இருக்காது.

1982 மார்ச் 31]

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, இது மத்திய அரசு சம்பந்தப்பட்ட கேள்வியாக இருப்பதால் எங்களுக்கு வாய்ப்பு தரப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் பிரச்சனைகளைப் பற்றி, திரு ரமணி அவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார். நம்முடைய மாநிலத்தில் அநேகமாக எல்லா ஊர்களிலும், தமிழ்நாடு பூராவும் வறட்சி ஏற்பட்டது. ஒவ்வொன்றையும் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தால் கேள்வி நேரத்திற்கென்று ஒதுக்கப்பட்டிருக்கிற நேரம் போதாது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மத்திய அரசாங்கத்தைப்பற்றி அவர் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அதற்குப்பதில் கூற எங்களுக்கு அனுமதிக்கப்படவில்லை. அத்தோடு பிரதான எதிர்க் கட்சிக்கும் ஒரு கேள்வி கூட அனுமதிக்கவில்லை. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மத்திய அரசைப் பற்றி அவர் எதுவும் தப்பாகச்சொல்லிவிடவில்லை. துணைக் கேள்விகள் கேட்பதற்கு நானாக அனுமதித்தால்தான் கேட்க முடியும். அமகர்சாமி, ரமணி போன்றவர்கள் எதிர்க்கட்சியினர்தான், அவர்களுக்கு அனுமதித்திருக்கிறேன். எல்லாக் கட்சிகளுக்கும் அனுமதிக்கவேண்டும் என்பது முடியாத ஒன்று. அமைச்சர் அவர்கள் சுருக்கமாக திரு. அழகர்சாமி அவர்களின் கேள்விகளுக்குப்பதில் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டிலே ஏற்பட்ட வறட்சிக்கு, நடைபெற்ற வறட்சி நிவாரணம் பற்றித்தான் தெரிவித்தேன். இப்பொழுது மாவட்டந்தோறும் எல்லா இடங்களிலும் நல்ல மழை பெய்திருப்பதாக தெரிகிறது. ஆனாலும் இன்றைக்கு எந்தெந்த மாவட்டங்களில் எப்படி எப்படி, எந்த அளவு மழை பெய்திருக்கிறது, சென்ற ஆண்டின் நிலை என்ன? அதற்கு முந்தைய ஆண்டின் நிலை என்ன? இந்த ஆண்டின் நிலை என்ன, என்பதைப் பற்றிக் கணக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம். எங்கே வறட்சியால் பாதிக்கப்படக் கூடும் என்ற நிலை இருக்கிறதோ, அங்கே முன்கூட்டியே நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வறட்சி நிவாரணப் பணிகளுக்காக மாநில அரசுக்கு ஒதுக்கிய தொகை முழுமையாக செலவழிக்கப்படவில்லை என்று சொல்லி, மத்திய அரசுக்குப்புகார்கள் வந்து, அதைப்பற்றி மாநில அரசுக்கு அனுப்பியிருக்கிறதா? அங்குப்பணிகள் நடைபெற்று முடிந்த பிறகு, முறையாக நடைபெற்றதா இல்லையா என்பதைப் பார்க்க, மத்திய அரசின் அதிகாரிகள் வந்து கண்

காணித்தார்களா? அமைச்சர் அவர்களில் பாராட்டியவர்களின் பட்டியலைப் படித்தார். புகார்கள் செய்தவர்களின் பட்டியலையும் படிப்பாரா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பாராட்டுகிற உள்ளம் உள்ளோர் எல்லாம் உயர்வுள்ளோர். பாராட்டியவர்களைப் படித்தேன். (குறுக்கீடு) மன்னிக்க வேண்டும். நான் இதைப்பற்றி பேசுகிறபோது, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மக்கள் வாக்களித்திருக்கிறார்கள் என்றால், நீங்கள் இந்தப் பேரவையிலே வந்து பேசுவதற்கு என்று மட்டுமே வாக்களிக்கவில்லை. தொகுதியில் நடைபெறுகிற பணிகளில் பங்கு கொண்டு, அதற்காக வேலை செய்து அந்தப் பணிகள் செம்மையாக நடைபெற வேண்டும் என்பதற்காக உதவி செய்வதற்காகவும் கூட உங்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள். ஆகையினால் ஆங்காங்கே நடைபெறுகிற குழுக்களின் கூட்டத்தில் கலந்து கொண்டு, குறைகள் இருப்பின் சொல்லலாம். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கட்டாயம் அதைக் கேட்பார்கள். அப்படிக் கேட்காவிட்டால் எப்பொழுது வேண்டுமானாலும் தொலைபேசி மூலமாகவோ, கடிதம் மூலமாகவோ அல்லது நேரிலோ என்னிடத்தில் தெரிவிக்கலாம். என்று இந்த அவையிலேயே முன்பே சொல்லியிருக்கிறேன். அப்படிப் புகார் தெரிவித்தவர்களின் பட்டியலில் மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களின் பெயர் இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். எங்கேயாவது தவறு அப்படி நேர்ந்திருந்தால், அவர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் என்னிடம் சொல்லலாம். இப்பொழுதும் கூடச்சொல்லலாம், நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய அரசு கொடுத்த தொகையிலே 70 சதவிகிதம் கடனாகவும் 30 சதவீதம் மானியமாகவும் கொடுக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது வறட்சி நிவாரணப் பணிகளுக்காக செலவழிக்கப்பட்ட தொகை என்பதால். இதில் ரிட்டர்ன் ரிசோர்ஸ்ஸஸ் எங்கே வர இடமிருக்கிறது? ஆகையினால் ஜனங்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்தைப் போக்குகிற முறையில் செலவழிக்கப்பட்ட தொகை என்கிற காரணத்தால் அந்த 70 சதவீத கடன் தொகையையும், கடன் என்று வைத்துக் கொள்ளாமல், 5 ஆண்டுத் திட்டத்தில் சேர்த்து கணக்கிட்டுவிடாமல், மானியமாகவே கொடுப்பதற்கு, மத்திய அரசாங்கத்திற்கு மாநில அரசு ஃபோர்ஸ் பண்ணி கேட்டு பெற முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு: எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கொடுக்க வேண்டும் என்று வருகிறபோது, அதை நிச்சயமாக மாநில அரசு ஏற்றுக் கொள்ளும். ஆனால் இதுவரைக்கும் அவர்கள் கொடுத்ததில்

மானியமாக கொடுத்தது ரூ.7-50 கோடிதான். இன்னும் கொடுக்க வேண்டிய 5 கோடியில் 1½ கோடி ரூபாய் மானியம் ஆக 9 கோடி ரூபாய் மானியமாக கொடுக்கிறார்கள். வறட்சி நிவாரணத்திற்காக 56.81 கோடி ரூபாய் செலவழித்ததோடு வறட்சிக்காக தக்காவி கடன் கொடுத்ததையும் சேர்த்து, 61.81 கோடி ரூபாய் மொத்தமாக மாநில அரசு செலவு செய்திருக்கிறது. ஆனால் இதுவரையில் கொடுக்கப்பட்டதில் 17 50 கோடி கடனாகவும், 7 50 கோடி மானியமாகவும், ஆக மொத்தம் 20 கோடி தான் மத்திய அரசு கொடுத்திருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.20)

திரு. ரா. உமாநாத் : நான் கேட்ட கேள்வி வேறு, அமைச்சர் அவர்கள் சொல்லுகிற பதில் வேறாக இருக்கிறது. நான் கேட்ட கேள்விக்கு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மத்திய அரசு மானியமாக எவ்வளவு பணம் கொடுத்தாலும், மாநில அரசு ஏற்றுக் கொள்ளும். (குறுக்கீடு) மத்திய அரசை மாநில அரசு கேட்கத் தயாராயிருக்கிறது. கடிதம் எழுதவும் தயாராக இருக்கிறது. அவர்கள் கொடுப்பதற்குத் தயாரா, இல்லையா என்பது தான் தெரியவில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : சென்ற ஆண்டு நிலை பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சென்ற ஆண்டு வறட்சிப் பணிக்குத் தாமதமாகக் கொடுக்கப்பட்டது. இப்போது பல்வேறு பகுதிகளில் வறட்சி நிலை நிலவுகிறது. அது பற்றி மத்திய அரசுக்கு எழுதப்பட்டிருக்கிறதா? மத்திய அரசிடம் உதவி கோரப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : சென்ற ஆண்டு வறட்சிப் பணி தாமதமாக எடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். தாமதமாக எடுக்கப்பட்டது என்று சொன்னாலும் சிறப்பாக நடைபெற்றிருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்களே மூன்று கூட்டங்களில் பேசியிருக்கிறார்கள். சிறப்பாக திருப்தியாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன் மத்திய அரசுக்குப் போவதற்கு முன்னால் வறட்சி நிலை எந்தெந்த மாவட்டங்களில் இருக்கின்றன, எங்கே எப்படி, எவ்வளவு மழை பெய்திருக்கிறது என்ற கணக்கையெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் சேகரித்துக் கொண்டிருக்கிறோம் அதேபோல் மத்திய அரசு வந்து பார்ப்பதற்கு. முன்னால் இந்த அரசு காரியங்களில் ஈடுபடத் தயாராயிருக்கிறது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1982 மார்ச் 3

1980-81 ஆம் ஆண்டில் வணிக வரிச் சோதனைகளால் அரசுக்குக் கிடைத்த தொகை.

* வினா எண். 324.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1980–81 ஆம் ஆண்டில் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட வணிக வரிச் சோதனைகளில் அரசுக்குக் கிடைத்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : 1980–81 ஆம் ஆண்டில் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட சோதனைகள் மூலமாக அரசாங்கத்திற்கு கிடைத்தது ரூ. 1,539 இலட்சமாகும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது ரூ. 1,539 இலட்சம் அரசுக்குக் கிடைத்திருக்கிறது என்று சொன்னார்கள். இது இதற்கு முந்திய அண்டு கிடைத்ததைவிட அதிகமா? இம் மாநிலத்தில் எவ்வளவு இடங்களில் சோதனைச் சாவடிகள் இருக்கின்றன? இதை அதிகப் படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இப்படி சோதனைச் சாவடிகள் மூலமாக பரிசோதனைகள் செய்வது ஆண்டுக் காண்டு ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கிறது. சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு அதிகரித்திருக்கிறது. 1981–82 இன்னும் முடியவில்லை. அதிலும் அதிகரித்துக் கொண்டுதான் வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : நான் பல்வேறு இடங்களுக்குப் போகும் போது வழியில் பார்க்கிறேன் இந்தச் சோதனைச் சாவடிகளில் சரிபார்ப்பது என்பது ஒரு சடங்காகத்தான் நடைபெற்று வருகிறது. லாரிக்காரர்கள் பில்களைக் கொடுக்கிறார்கள். அலுவலர்கள் முத்திரை போடுகிறார்கள். என்றில்லாமல் லாரிகளுக்கு உள்ளே சென்று சரிபார்ப்பதற்குப் போதுமான அலுவலர்கள் நியமிக்கப்படுவார்களா? சோதனைச் சாவடிகளில் இருப்பவர்கள் முறையாக சரிபார்க்கிறார்களா என்பதைப் பார்ப்பதற்கு ''பறக்கும் படை'' அமைக்கும் உத்தேசம் உண்டா!

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பறக்கும் படை அரசிடம் இல்லை. ஏனென்றால் அது பறந்துவிடும் என்பதால். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் சொல்வது முற்றிலும் உண்மையல்ல என்றாலும் ஆயிரக்கணக்கான லாரிக

1982 மார்ச் 3]

போகிறபோது எல்லா லாரிகளின் சரக்குகளையும் கீழே இறக்கி பரிசோதனை செய்து அனுப்புவது என்பது சங்கடமாக இருக்கும். நம் மாநிலத்தில் இருக்கிற லாரிகளில் எந்தெந்த லாரிகள் தவறான வழியில் கொண்டு போகிற லாரிகள் என்ற கணக்கு இருக்கிறது. அந்த லாரிகள் வருகிறபோது கண்டிப்பாக சாமான்களை சரக்கு களைக் கீழே இறக்குகிறார்கள். எந்தெந்த வியாபாரிகள் அப்படிச் செய்கிறார்கள் என்பதற்கும் கணக்கு இருக்கிறது. அவைகள் வருகிறபோது கொஞ்சம் அதிகமாகக் கவனிக்கிறார்கள். ஆயிரக் கணக்கான லாரிகள் போகும் போது எல்லா லாரிகளையும் நிறுத்தினால் போக்குவரத்து நிச்சயமாக ஓடாது.

திரு. மா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற சோதனைச் சாவடிகளில் லாரிகளை நிறுத்தும் போது போக்குவரத்துக்கு மிக இடைஞ்சல் ஏற்படுகிறது. ஆகவே, நீண்ட நேரம் சில நேரங்களில் நிற்க வேண்டியதாகிவிடுகிறது. ஆகவே, எல்லா லாரிகளையும் சோதனைச் சாவடிகளில் நிறுத் துவதற்கு, அந்த சாலை ஓரங்களில் அதற்கென்று ஒரு இடத்தை எடுத்து ஒதுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் முதலிலேயே இதைத்தான் சொன் னேன். அதேபோல் தேவைப்படுகின்ற லாரிகளில் நிச்சயமாக தவறாக சாமான்கள் போவது, முறையற்ற முறையில் போவது தெரிந்தால் நிச்சயமாக அவைகளைத் தடுத்து நிறுத்த வேண்டி யிருக்கிறது. அப்போது கூடிய மட்டும் போக்குவரத்துக்கு இடைஞ் சல் இல்லாமல்தான் காரியங்கள் நடக்கின்றன. எங்கே அப்படி இடைஞ்சல் ஏற்படுகிறது என்று சொன்னால், அதை அரசு கவனிக்கும்.

திரு. நா. சுந்தரராஜ் :—பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு இடங்களில் நடத்தப் பட்ட சோதனைகளின் விளைவாக சுமார் 15 கோடி ரூபாய் அரசுக்கு வருமானம் கிடைத்திருப்பதாக கூறினார்கள். ஆனால், பல இடங்களில் சோதனை சரியாக நடக்க வில்லை. என்பதை குற்றச்சாட்டாக மட்டுமல்ல, உண்மை என்பதைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். புதுக்கோட்டை ஆலங்குடி யில் இன்றைக்குக் கூட பல லட்சக்கணக்கான ரூபாய்கள் அளவிலே அங்கே வரி மோசடி நடைபெறுகிறது. அரசாங்கத்துக்கு வர வேண்டிய வரியைக் கொடுக்காமல், அங்கே லாரி லாரியாக எண் ணெயைக் கடத்திக் கொண்டு போகப்படுகிறது. இதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட குறிப்பு முதலிலேயே அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. கடுமையான நடவடிக்கை

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

எடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் இதிலே கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உதவி செய்தால், அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது. அங்கே தவறு நடக்கிறது என்ற குறிப்பு, விவரங்கள் அரசுக்கு வந்திருக்கிறது.

நிதி உதவி பெறும் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான ஊதியம்.

* வினா எண். 325 திரு. செ. செம்மலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிதி உதவி பெற்று நடந்துவரும் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்குவதில் முறைகேடுகள் இருப்பதாக அரசுக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசே நேரிடையாக ஊதியம் வழங்க நடவடிக்கை எடுப்பதை பரிசிலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) அரசு நிதியுதவி பெறும் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்குவதில் முறைகேடுகள் இருப்பதாக அவ்வப்போது அரசின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

(ஆ) தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அரசே நேரிடையாக ஊதியம் வழங்குவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள நடைமுறையில் ஆசிரியர்களுக்கு பல்வேறு சங்கடங்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருந்து வருகிறது. என்றாலும், அப்பேர்ப்பட்ட முறையீடுகளைத் தவிற்கவும், அதிலே ஏற்படக்கூடிய முறைகேடுகளைப் போக்குவதற்கும், அரசு அவர்களுக்கு சம்பளத்தை பாங்கு சிஸ்டம் மூலம் செக்கை அவர்களுக்கு நேரடியாகக் கொடுத்து, சம்பளம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு நாம் நேரடியாக ஊதியம் தந்து வருகிறோம். தங்களு

டைய சம்பளத்தை பாங்கியிலே அவர்களுடைய கணக்கிலே மாதாமாதம் வரவு வைக்கப்பட்டு வருகிறது. எனவே அவர்கள் சம்பளத்தை நேரிடையாகச் சென்றுகூட வாங்க வேண்டியதில்லை. அவர்களுடைய கணக்கில் வரவு வைக்கப்படுகின்ற அளவிலே ஒரே செக்காக கல்லூரியிலிருந்து பாங்கிக்கு அனுப்பப்பட்டு, அந்தந்த ஆசிரியர்கள் கணக்கில் வைக்கப்படும். ஆசிரியர்கள் ஒரு இடத்திற்குச் சென்று, நின்று அவர்கள் சம்பளத்தை வாங்க வேண்டிய நிலை இப்போது கல்லூரிகளிலே இல்லை. கல்லூரிகள் குறைந்த அளவிலே இருக்கின்ற காரணத்தால், சுலபமான முறையிலே, நிர்வாக அடிப்படையிலே நாம் அதை அமுல் நடத்தி வருகிறோம். இதையே உயர்நிலைப் பள்ளி, மற்றப் பள்ளிகள் என்று வருகின்ற போது, பெருமளவில் இதிலே நிர்வாக சிக்கல்கள் ஏற்படும். அதையும் பரிசீலித்தமாகச் செய்து வருகிறோம். இப்போது அதற்கான நடவடிக்கைகயைப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசு எடுத்துக் கொண்டிருக்கிற ஒன்றியப் பள்ளிகளில் இதுபோன்று ஊதியம் வழகுவதற்கென்று சில ஆசிரியர்கள் ஒதுக்கப்பட்டு, பே தினத்தன்று இரண்டு நாட்களும், அந்த பேயை டிஸ்பர்ஸ் செய்வதற்கு என்று இரண்டு நாட்களும் எடுத்துக் கொள்வதால், கல்வியில் ஒழுங்காக கவனம் செலுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, இதுபோன்ற அரசு பள்ளிகளிலே வேறு வகையிலே நேரடியாக ஊதியம் வழங்குவதற்கு உரிய முறையை அரசு பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்கப்பட்ட கேள்வி தனியார் பள்ளிகளைப் பொறுத்தது. தனியார் பள்ளிகளில் சம்பளம்கொடுப்பதில் சில முறைகேடுகள் இருக்கின்றது என்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த அளவில், சம்பளம் தருகின்ற போது குறைத்துத் தருவதும், கொஞ்சம் எடுத்துக் கொண்டு தருவதும் போன்ற முறைகேடுகள் இருக்கின்ற காரணத்தால், இந்த நேரடி உதவி செய்யும் பிரச்சினை வந்தது. சர்க்கார் பள்ளிகளில் இந்த நிலை இருக்க நியாயமில்லை. சர்க்கார் பள்ளிகளில் ஒரு ஆசிரியர் போய் பணம் வாங்கிக் கொண்டு வருவதும், தருவதும் இருக்கத்த தான் செய்யும். நேரடி உதவி செய்து தர வேண்டுமென்று சொன்னால், அந்தப் பள்ளிகள் இருக்கும் இடங்களில் பாங்கிகள் இருக்க வேண்டும். தொடக்கப் பள்ளி உள்ள இடங்களில் எல்லாம் பாங்கு இல்லை என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அவைகளையெல்லாம் வைத்துத்தான் இதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

[1982 மார்ச் 3

(முற்பகல் 9—30)

திரு. எல். இளையபெருமாள்:—மாண்புமிகு தலைவர் அவர்களே, சில தனியார் பள்ளிகளில் பணிபுரிகின்ற ஆசிரியர்கள் சம்பளத்தினால் ஏற்பட்ட தகராறு காரணமாக நிறுவனங்களிலிருந்து நீக்கப்பட்டு அவர்கள் அரசாங்கத்திற்கு அப்பீல் செய்திருக்கிறார்கள். அரசாங்கமும் அவர்களது கோரிக்கை நியாயமானது அவர்களை மீண்டும் வேலையில் அமர்த்த வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறது. இருந்தும் வேலை கொடுக்காமல் அவர்களுக்கு சம்பளத்தையும் கொடுக்காத நிலை இருக்கிறது. மைனாரிட்டி இன்ஸ்டிடியூஷன் என்ற பெயராலே இப்படிப்பட்ட தவறுகளைச் செய்கிறார்கள். வருங்காலத்தில் இவ்வாறு நடக்காமல், அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தும்அவர்களை வேலையில் அமர்த்தாவிட்டால் அரசாங்கமே வேறு பள்ளிகளில் அவர்களுக்கு வேலை கொடுத்து ஆதரவு காட்ட அரசு யோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நாங்கள் போட்ட உத்தரவை அமுல் படுத்துவதற்கு தான் முதலிலே முயற்சி எடுத்துக் கொள்வோம். பிறகு மாற்று ஏற்பாடுகளைப் பற்றிப் பேசலாம்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளிலே நேரடியாக சம்பளம் கொடுப்பதற்கான நிர்வாகப் பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் பரிசீலித்து முடிவு செய்வோம் என்று அமைச்சர் சொன்னார். அது சிறிது காலம் பிடிக்கும் என்பதாலே உடனடியாக அவர்களுக்கு இருக்கக் கூடிய சம்பளம் முழுமையாக கிடைப்பதற்கு இடைக்கால ஏற்பாடு ஏதாவது செய்வார்களா? அவர்களுக்கு குறைச்சலாக சம்பளம் கொடுத்து அதிகமாக கொடுத்ததாக ரசீது பெற்றிருக்கிறார்கள். கிரிமினல் பிராசிகியூஷன் நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கிரிமினல் பிராசிகியூஷன் என்று நாம் போகிற போது ஆசிரியர்கள் கையெழுத்துப் போடாமல் இருக்க வேண்டும். கையெழுத்துப் போட்டு வாங்கியிருக்கிறார் அதிலே வேறு பல சங்கடங்கள் வருகின்றன. இப்போது எங்களுக்கு ஏதாவது புகார் வருமானால் அதை உடனடியாக விசாரித்து

1982 மார்ச் 3]

அப்படிப்பட்ட பள்ளிகளிலே நேரடியாக ஊதியம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். அப்படிப்பட்ட நிறுவனங்களை தவறு செய்கிற நிறுவனங்கள் என்று கணக்கில் எடுத்துக் கொண்டு அந்த ஆசிரியர்களுக்கு நேரடியாக சம்பளம் கொடுக்கிற முறை இப்போது இருக்கிறது. நான் சொல்ல விரும்புவது முழுச் சம்பளம் நாமே தருகிற காரணத்தால் எல்லா பள்ளிகளிலும் புகார் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நேரடியாக தருவதற்கு இப்போது பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். முதலிலே ஒரு மாவட்டத்திலே பரிசீலித்துப் பார்க்கலாம் என்று ஒரு கருத்து இருக்கிறது. செங்கல்பட்டு மாவட்டத்தை எடுத்து அந்தத் திட்டத்தை அமுல் நடத்தி, அந்த அனுபவத்தை வைத்துக் கொண்டு மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கலாம் என்ற யோசனை இப்போது அரசின் கவனத்தில் இருந்து வருகிறது

திரு. டி. மணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் சம்பளம் நேரடியாக அரசாங்கம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தும் தெற்கு பாலவிளை என்ற இடத்தில் ஆசிரியர்கள் ஆறு மாத காலமாக சம்பளம் கிடைக்காமல் நீதிமன்றங்களுக்குச் சென்று தடையுத்தரவு வாங்கியிருக்கிறார்கள். அந்த ஆசிரியர்கள் புகார்கள் எல்லாம் தந்திருக்கின்றார்கள். அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆறுமாத சம்பளம் கிடைக்க என்ன நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசுகிற போதே நீதிமன்ற தடையுத்தரவு இருக்கிறது என்று சொன்னார்கள். அதை மீறி ஏதாவது செய்தால் நாம்தான் பதில் சொல்லவேண்டி வரும்.

காரைக்குடியில் பல்கலைக் கழகம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 326.—**திரு. து. புருஷோத்தமன்** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

காரைக்குடியில் ஒரு பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறதா!

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆம்.

திரு. த. புருஷோத்தமன்: தலைவர் அவர்களே, எப்போது அந்த பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்படும். அதற்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்காக அமைக்கப்பட்ட குழுவினுடைய அறிக்கையை நாம் பரிசீலிக்கிறோம். பரிசீலித்து முடிவு எடுத்த பிறகு இறுதியான நடவடிக்கையைப் பற்றிச்சொல்ல விரும்புகிறேன்.

திரு. த. புருஷோத்தமன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, உத்தேசமாக எந்த ஆண்டு அந்தப்பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்படும் என்பதை அறிவிக்க இயலுமா!

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்—மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது நமக்கு இருக்கிற அதிகாரத்தை வைத்துக் கொண்டு ஒரு மாதத்திலேயே கூட நாம் ஆரம்பித்து விடலாம். எப்போது ஆரம்பிப்பது என்பதல்ல இப்போது இருக்கிறபிரச்சினை எப்படி ஆரம்பிப்பது என்பதைத்தான் நாம் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். அதை முடிவு செய்ததற்கு பிறகு நாம் எப்போது வேண்டுமானாலும் ஆரம்பித்துக் கொள்ளலாம். ஆக ஆரம்பிப்பதிலே எந்த விதமான தடையும் இல்லை. ஆனால் இப்போது மத்திய அரசு என்ன கேட்டிருக்கிறது என்றால் புதிய பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக்கப்படுகிறபோது அவர்களைக் கலந்து ஆலோசிக்க வேண்டுமென்ற ஒரு யோசனையைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நமக்கும் அதிகாரம் இருக்கிறது.

திரு. சி. த. சிதம்பரம் : தலைவர் அவர்களே, இரண்டாண்டுக் காலமாக இப்படியே சொல்லப்பட்டு வருகிறது. வருகிற ஆண்டிலாவது ஆரம்பிக்கப்படுமா மத்திய அரசாங்கத்தைக் கேட்டு வருகிற ஆண்டிலாவது தொடங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்· இப்படியே சொல்லிக் கொண்டு, பேசிக்கொண்டு வருவது எல்லாம் இதற்கு முன்னால் இருந்த அரசின் நடவடிக்கையாக இருக்கலாம். எங்களைப் பொறுத்தவரை பல்கலைக் கழகங்களை அதிகமாகத் தொடங்கி வருகிற புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களின் அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : காரைக்குடியிலே மத்திய எலக்ட்ரோகெமிக்கல் ரிசர்ச் இன்ஸ்டிடியூட் இருக்கிறது. அங்கே ஆரம்பிக்கப்பட இருக்கின்ற பல்கலைக் கழகத்திலே அது சம்பந்தப்பட்ட பாடத் திட்டங்கள் எலக்ட்ரானிகல் போன்ற பாடங்கள் கற்பிப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்க அரசு முன்வருமா?

1982 மார்ச் 31]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: காரைக்குடியிலே பல்கலைக் கழகம் தொடங்குவதற்குக் காரணமே இராமநாதபுரம் ஒரு பின்தங்கிய மாவட்டம், அந்த மாவட்டத்திலே இருக்கின்ற பிரச்சினைகளை நன்கு ஆராய்ந்து அந்த ஆராய்ச்சியின் முடிவின் காரணமாக அந்த மாவட்டத்தை முன்னுக்குக் கொண்டுவரக்கூடிய அளவுக்கு அந்தப் பல்கலைக் கழகம் அமைய வேண்டுமென்று விரும்புகிறோம். அங்கே நடைபெறக் கூடிய ஆராய்ச்சிகள் விஞ்ஞான ரீதியாகவும் சமூக பொருளாதார ரீதியாகவும் சமுதாயத்திற்கு நன்மை பயக்கக்கூடிய முறையிலே நடைபெறும்.

கல்விக் கூடங்களில் உடல் ஊனமுற்றவர்களுக்காக இட ஒதுக்கீடு.

*வினா எண் 327 திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள கலைக்கல்லூரிகள், தொழில் பயிற்சி பள்ளிகள், பொறியியல் கல்லூரிகள் ஆகியவைகளில் உடல் ஊனமுற்றோர்களுக்கு என இடங்கள் ஒதுக்கப்படுகிறதா?

(ஆ) இல்லையெனில் ஒதுக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றோர்களுக்கு கல்வி நிறுனங்களிலே பொறியியல் கல்லூரிகளிலே இடம் ஒரு குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த இட ஒதுக்கீட்டை தனியார் கல்வி நிறுவனங்களிலும் அமல்படுத்தச் சொல்லி அரசு உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இட ஒதுக்கீடு என்பது பிற்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் உடல் ஊனமுற்றோர் ஆகியவர்களுக்கு தனியார் கல்வி நிறுவனங்களிலும் செய்யப்படவேண்டுமென்று சொல்லி நாம் அந்த நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், தனியார் நிறுவனங்கள் ஒரு சங்கத்தைச் சேர்த்துக்கொண்டு ஒரு கூட்டத்தைக் கூட்டி அந்த முறையில் கட்டாயப்படுத்தக் கூடாது என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றி இருப்பதாகப் பத்திரிகையிலே பார்த்தேன், அப்படிப்பட்டவர்கள் அரசாங்கம்

சமுதாய நலன் குறித்து செய்கின்ற இத்தகைய காரியங்களுக்கு ஒத்துழைப்புத் தரவேண்டுமே தவிர அதை எதிர்த்து போகிற போக்கைத் தவிர்க்க வேண்டுமென்று இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதன் வாயிலாக நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம் : ஜப்பான் நாட்டிலே நடைபெறுவதைப்போல் உடல் ஊனமுற்றோர்களுக்கு என்று தனியாக பயிற்சிப் பள்ளிகளைத் துவக்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது தனியாகக் கேட்கப்பட வேண்டிய கேள்வி.

வழக்கறிஞர்கள் சங்க உறுப்பினர்களை குற்றவியல் நீதிபதிகள் பதவிக்கு நியமனம் செய்யும் திட்டம்.

*வினா எண். 328—**திரு. மே. அ. இராஜ்குமார் :** மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நீதித்துறையில் இரண்டாம் நிலை குற்ற இயல் நீதிபதிகள் பதவிக்கு வழக்கறிஞர்கள் சங்க உறுப்பினர்களை நியமனம் செய்யவிருக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அம்முறை எப்பொழுது செயலபடுத்தப் படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஒருங்கிணைப்புத் திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது. அப்படி செயல்படுத்தப்பட்டவுடன், வழக்கறிஞர்கள் சங்க உறுப்பினர்கள் அந்த ஒருங்கிணைக்கப்பட இருக்கும் மாவட்ட முன்சீப் மற்றும்—மாஜிஸ்டிரேட்டு பதவிக்கு நியமிக்கப்படுவர்.

ஆற்காட்டில் குற்றவுயல் நீதிமன்றம் அமைக்கும் திட்டம்

*வினா எண் 329, **திரு. ஏ. எம். சேதுராமன் :** மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காட்டில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் கொண்டுவர செயல்குறிப்பு அரசிடமுள்ளதா?

1982 மார்ச் 3]

(ஆ) ஆம் எனில் விரைவில் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) ஆம். ஆற்காட்டில் ஒரு நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவர் அவர்களே, ஆற்காடில் இரண்டாவது குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்கு பரிசீலனை செய்யப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மிக்க சந்தோஷம். அது எந்த மாதத்தில் தொடங்கப்படுகிறது என்பதையும், அதற்கு ஆகக்கூடிய செலவு எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–40)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எந்த மாதத்தில் என்றும், என்ன செலவு என்றும் கேட்கிறார்கள். செலவைப் பொறுத்தவரைக்கும் சொந்தமாக இடம் கட்டுவதாக இருந்தால் அதிகச் செலவு ஏற்படும். வாடகை இடத்தில் அமைக்கப்பட்டால் செலவு குறைந்துவிடும். கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு இருக்கிறது. உயர்நீதி மன்றமும் பரிந்துரை செய்துள்ளது. அரசு அதை நடைமுறைப்படுத்தும்.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குற்றவியல் நீதிமன்றத்தை நிறுவும்பொழுது எந்தெந்த காவல் நிலையங்களிலிருந்து குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்வதற்கு இணைக்கப்படும் என்பதையும், சப்-டிரஷரி, தாலுக்கா ஆபீஸ், சப்-ரிஜிஸ்தார் ஆபீஸ் ஆகியவை கோர்ட் நிறுவப்படும் இடத்தில் இருப்பதால தாலுக்கா அளவில் காவல் நிலையத்தை அங்கே துவங்குவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தக் காவல் நிலையங்கள் அதோடு இணைக்கப்படும் என்ற குறிப்பு இல்லை. உயர்நீதிமன்றத்திலிருந்து பெற்றுத்தான் தர முடியும். காவல் நிலையம் அமைக்கப்படுவது பற்றித் தனியாக அந்தத் துறை கவனிக்க வேண்டும். உறுப்பினரின் கருத்தை அரசு பரிசீலனை செய்யும்.

[1982 மார்ச் 3

சோழவந்தான் குடிநீர் திட்டம்.

வினா எண். 330. திரு. ஏ. சந்திரசேகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சா கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா!—

(அ) சோழவந்தானில் 19—11—1979-ல் வைகை வெள்ளத்தில் குடிநீர் பம்பிங் ஸ்டேஷன் குழாய் பழுது அடைந்து அதை மத்திய அரசு நிவாரண பணிக்குழுவும் மாநில நிவாரண பணிக்குழுவும் பார்வையிட்ட வெள்ள நிவாரண பணியில் சேர்த்து பழுது பார்த்து கொடுக்கப்படும் என்று அரசு உறுதி மொழி அளித்தது உண்மையா?

(ஆ) ஆம் என்றால் உடனடியாக சோழவந்தான் குடிநீர் திட்டத்தை செயல்படுத்தி மக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடில்லாமல் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) சோழவந்தானில் 19—11—1979-ம் தேதி வைகை நதியில் ஏற்பட்ட வெள்ளத்தில் குடிநீர் பைப்லைன் மற்றும் அதைத் தாங்கிச் சென்ற பாலம் முதலியன அடித்துச் செல்லப்பட்டுப் பழுதடைந்துவிட்டது. அதற்குப்பிறகு மாநில மற்றும் மத்திய நிவாரணக் குழு வந்து பார்வையிட்டனர். ஆனால், மேற்படி பணிகளை வெள்ள நிவாரணத் திட்டத்தின் கீழ் சேர்த்து செய்வதற்காக எந்தவிதமான எழுத்து மூல உத்தரவுகள் உறுதிகள் ஏதும் வழங்கபடவில்லை. மேலும் பணிகள் வெள்ள நிவாரண திட்டத்தில் இதுவரை செய்யப்படவில்லை.

(ஆ) சோழவந்தான் பேரூராட்சியின் தலைமைப் பணியிடத்தில போடப்பட்டிருந்த 10 அங்குலம் விட்டமுள்ள இரும்புக் குழாய்கள் 1979ம் வருடம் நவம்பர் 19ம்தேதி வைகை ஆற்றில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. எனவே, உடனடியாக குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக, தற்காலிகமாக 4'' விட்டமுள்ள இரும்புக் குழாய்கள் மூலமாக சோழவந்தான் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குழாய்களை மாற்றி 10'' குழாய்கள் பதித்துக் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்குமாம்பலம் பகுதிக்கான சாக்கடை மற்றும் குடிநீர் வசதிகள்.

*வினா எண். 331—திரு. செ. சிவசாமி: திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்குமாம்பலம் தெற்கு கோதண்டராமசாமி கோவில் தெரு மக்களுக்கு சாக்கடை வசதி, குடிதண்ணீர் வசதி இல்லாமலிருப்பதை அரசு அறியுமா?

1982 மார்ச் 3]

(ஆ) ஆமெனில் அவர்கள் குறையைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) ஏப்ரல், 1981 முதல் அக்டோபர், 1981 வரை சென்னை மாநகரம் வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தது. இவ் வறட்சி நிலையை சமாளிக்க சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியம் இந்தப் பகுதியில் எஃகு தொட்டிகள் வைத்து லாரிகள் மூலமாக தண்ணீர் வழங்கச் செய்தது. இப்போது குடிநீர் வழங்கலில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நிரந்தர நிவாரணமாக ரெட்டிக்குப்பம் சாலையிலுள்ள குடிநீர், கழிவு நீர் குழாய்களுடன் இத்தெருவில் குடிநீர், கழிவு நீர் குழாய்களைச் சேர்க்க வேண்டும். இதற்கு தேவையான இணைப்பு கொடுக்கத் தேவைப்படும் பகுதி தனியார் ஒருவருக்குச் சொந்தமானது. இதன் உரிமையாளருக்கு நோட்டீஸ் கொடுக்க வாரியம் ஆவன செய்து வருகிறது. தொடர்ந்து சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுத்து மேற்கூறிய குழாய்களை இணைப்பினைக்கொடுத்து இப்பிரச்சினையைத் தீர்க்க ஆவன செய்யப்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, மேற்கு மாம்பலம், தெற்கு கோதண்டராமசாமி கோயில் தெருவில் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிக அளவில் வாழ்வதால் அந்தச் சாக்கடையினால் பெரும் வியாதிகள் பரவும் நிலையும், அதன் காரணமாகச் சென்னை மாநகரம் முழுவதும் அந்த நோய் பரவும் நிலையும் உள்ளது. அங்கே சாக்கடை அதிகமாக இருப்பதால் அவசரச் சட்டத்தின் மூலம் அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்து சாக்கடை வசதி செய்து கொடுக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுமாதிரிப் பிரச்னைகளில் அங்கிருப்பவர்கள் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று பார்ப்பதில்லை. யாராக இருந்தாலும் மனிதர்கள் என்ற உணர்வில்தான் கவனிக்கப்படுகிறது. அந்த நிலத்தை விரைவில் ஆர்ஜிதம் செய்ய ஆவன செய்ய இந்த அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, மேற்கு மாம்பலம் மாநகராட்சியின் ஒரு பகுதி; தலைநகரத்தில் உள்ள ஒரு பகுதி. ஏப்ரல் மாதம் முதல் அக்டோபர் மாதம்

வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். ஏறக்குறைய ஏழுமாத காலமாகியும் நடவடிக்கை எடுக்க ஆலோசனைகள் நடக்கிறது என்று சொல்லிக்கொண்டிருந்தால் அந்தப் பகுதியிலுள்ளவர்கள் எவ்வளவு பாதிக்கப்படுவார்கள்? மாநகராட்சி துரிதமாக கவனிக்க வேண்டிய இப்படிப்பட்ட குடிதண்ணீர், சாக்கடை போன்ற விஷயங்களில் துரித நடவடிக்கை எடுக்க அமைச்சரவர்கள் விசேஷமாக முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கோயில்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நினைப்பதைப் போல், அங்கே தண்ணீருக்குத் தட்டுப்பாடு இல்லாமல் இடைக்கால நிவாரணம் ஏற்பாடாகிவிட்டது. நிலையான நிவாரணமும் கிடைப்பதற்கு வேண்டிய திட்டத்தைச் சொல்லியிருக்கிறோம். அதன் பிரகாரம் நிலத்தை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. விரைவிலே அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்து நடவடிக்கை எடுப்பதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படும் என்று நான் இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினருக்கு உறுதி கூறிக் கொள்கிறேன்.

உதகமண்டலம் பார்சன்ஸ்வாலி குடிநீர் திட்டம்.

* வினா எண். 332—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் குடிநீர் பற்றாக்குறையைத் தீர்க்க பார்சன்ஸ்வாலி குடிநீர் திட்டத்தை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆமெனில், அது குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ): உதகமண்டலத்தை நான்கு பிரிவுகளாக பிரித்து ஒவ்வொரு பகுதியிலும், ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து பகிர்மானக் குழாய்கள் மூலம் நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 110 லிட்டர் குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் குடிநீர் பற்றாக்குறையைத் தீர்க்க பார்சன்ஸ் வாலி குடிநீர் திட்டத்தை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதா

1982 மார்ச் 3]

என்பதுதான் என்னுடைய கேள்வி. அந்த பார்சன்ஸ்வாலி திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு சில வருடங்களாகவே நடவடிக்கை எடுக்க முடியாமல் இருப்பதுதான் உதகமண்டலத்தில் இருக்கும்படியான குடிநீர்த் தட்டுப்பாட்டிற்குப் பிரதான காரணம் என்று சொல்லப்படுவது உண்மையா? அந்தத் திட்டம் எப்படி நடைபெறுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1965 ஆம் ஆண்டு முதல் மழைக் குறைவின் காரணமாக கோடை மாதங்களில் உதகமண்டலம் நகரில் தண்ணீர் பற்றாக்குறை இருந்து வருகிறது. எனவே பார்சன்ஸ் பள்ளத்தாக்கு திட்டம் 1969 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப் பெற்று 1975 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 4.5 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்குமளவிற்கு நிறைவேற்றப்பட்டது. இத்திட்டம் கோடை மாதங்களில் குடிநீர் வழங்குவதில் யாதொரு தடையும் ஏற்படக் கூடாது என்பதற்காக நிறைவேற்றப்பட்ட அவசர கால நடவடிக்கையாகும். எனினும் வெலிங்டனில் உள்ள பாதுகாப்பு நிறுவனத்தாரின் வேண்டுகோளுக்கிணங்க, அரசு பார்சன் பள்ளத்தாக்குத் திட்டத்தினின்று நாளொன்றுக்கு 2,275 மில்லியன் லிட்டர் குடிநீரைப் பாதுகாப்பு நிறுவனத்திற்கு வழங்க முடிவு செய்தது. இதன் காரணமாக பார்சன் பள்ளத்தாக்கு திட்டத்தினின்று உதகை நகரத்திற்குக் கிடைக்கக்கூடிய குடிநீரின் அளவு வெகுவாக குறைந்து விட்டது. மேலும் கடந்த சில ஆண்டுகளாக நிலவி வரும் வறட்சி நிலைமையினால் வழங்குவதற்குரிய குடிநீரின் அளவு மிகவும் குறைந்ததின் காரணமாக தற்போதுள்ள குடிநீர் வழங்கு திட்டத்தினை மேம்பாடு செய்வதாக இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கேட்டதற்குத்தான், தற்போதுள்ள குடிநீர் வழங்கு திட்டத்தினை மேம்பாடு செய்வதாக இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, அதற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆய்வுப் பணிகள் நடைபெற்ற பின்னர், அரசு நிர்வாக ஒப்புதல் அளித்த பின்னர் திட்டம் செயலாக்கப்படும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்த பார்சன்ஸ் வாலி திட்டத்தை, ஆரம்பத்தில் போட்டபடி முழுவதும் உதகமண்டலம் நகரத்திற்குக் கிடைத்திருக்கும் பட்சத்தில், அதிலும் குறிப்பாக, இந்தியா முழுவதும் கோடைக்காலத்தில், ஏராளமான ஜனங்கள் வந்து சேரக்கூடிய அந்த இடத்தில் தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் இருந்திருக்கும். இன்றைக்கு மோசமான நிலைமை இருக்கிறது என்று அமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டு சொன்னார். இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் காலையில் வேறு இடத்திற்கு அந்தத் தண்ணீரை டைவர்ட் பண்ணி

[திரு. கு. ரமணி] [1982 மார்ச் 3

கொடுத்ததன் விளைவுதான் இப்பொழுது தண்ணீர் கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்த்து அங்கே முழுவதும் அந்தத் தண்ணீர் கிடைக்க, பார்சன்ஸ்வாலி திட்டத்தை அங்கேயே பயன்படுத்தி, மாற்றுத் திட்டத்தை வேறு ஒரு இடத்திற்குக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்து ஒருவகையில் சரியானது. ஆனால், அரசு பார்சன் பள்ளத்தாக்கு திட்டத்தில் நாள் ஒன்றுக்கு 2,275 மில்லியன் லிட்டர் குடிநீர் கொடுக்கது, பாதுகாப்பு நிறுவனத்திற்குத்தான் எனவே, பாதுகாப்பு நிறுவனத்திற்குத் தண்ணீர் கொடுக்க வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வார்கள் என்று கருதவில்லை. ஆனால், நீர் கொடுக்கும் திட்டத்தை மேலும் மேம்படுத்த வேண்டுமென்பது மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையாகும். அதை இந்த அரசு கவனிக்கிறது. மேம்பாடு திட்டத்தைப் பற்றி பரிசீலனை செய்கிறது, ஆவன செய்யப்படும்.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, வெலிங்டனில் உள்ள பாதுகாப்பு படையினருக்குத் தண்ணீர் கொடுப்பதில் யாருக்கும் ஆட்சேபனை கிடையாது. ஆனால், அதற்குத் தனி திட்டம் தயாரித்து, உதகை மக்கள் குடிதண்ணீருக்குப் படும் அவஸ்தையை நீக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இது ஏற்கனவே கேட்கப்பட்ட கேள்வி. இதற்கான பதிலும் ஏற்கனவே சொல்லிவிட்டேன்.

சென்னம்பட்டியில் தீர்த்தேக்கம் கட்டும் திட்டம்.

* வினா எண். 333—திரு. எம். பிச்சை : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் அருப்புக்கோட்டை தொகுதி சென்னம்பட்டி என்னும் இடத்தில் நீர்த்தேக்கம் கட்டி குண்டாற்றின் இரு கரைகளிலும் கால்வாய் ஏற்படுத்தி பாசன வசதி பெற அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், இத் திட்டம் எப்பொழுது துவங்கப்படும்

1982 மார்ச் 3]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ), (ஆ) : மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், சென்னம்பட்டி கிராமத்தின் அருகே மேல்குண்டார் என்னும் கௌண்டன் நதிக்கு குறுக்கே ஒரு அணைக்கட்டுவதற்கான திட்ட அறிக்கை தலைமைப் பொறியாளர் (ஆய்வு)-ன் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 9.50)

திரு. எம். பிச்சை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலே உள்ள சென்னம்பட்டி என்னும் இடத்தில் ஒரு அணையைக் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த சென்னம்பட்டி அணைக்கட்டு கட்டுவதால் அதற்குக் கீழே உள்ள என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பல கண்மாய்கள்—ஏறத்தாழ 20 ஆயிரம் ஏக்கர் நஞ்சை நிலங்கள் பாசன வசதி பெறுகிற அளவுக்கு இருக்கின்றன. அந்தத் தண்ணீர் முழுவதும் மழை வெள்ளம் வருகின்றபோது அந்த குண்டாற்றின் வழியாக தண்ணீர் கடலிலே கலந்து வீணாகிக் கொண்டு போவதைத் தடுக்கின்ற வகையில் இருபுறமும் சிறு நீர்த் தேக்கத்தைக் கட்டி, அந்தப் பகுதி மக்களுக்கு உதவ அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது ; தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக இராமநாதபுரம் வட்டம், அருப்புக்கோட்டை வட்டம் மற்றும் மதுரையில் திருமங்கலத்தில் உள்ள 21 கண்மாய்களுக்கு பாசன வசதி கொடுப்பதற்கு சாத்தியக் கூறுகள் இருப்பதாக அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது குறித்து இந்த அரசு இப்போது ஆய்வு செய்து கொண்டிருக்கின்றது.

திரு. வ. சத்தியமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, குண்டாற்றின் மூலம் முதுகுளத்தூர், கமுதி, இராமநாதபுரம், திருப்புளானி ஆகிய பகுதிகள் பாசன வசதி பெற்று வருகின்றன. உற்பத்தியாகும் இடத்திலே ஒரு அணையைக் கட்டி தடுத்தால், முதுகுளத்தூர் பகுதி மக்களுக்கும், கமுதிப் பகுதி மக்களுக்கும் தண்ணீர் கிடைக்காமல் செய்கின்ற பெரும் துரோகமாக ஆகி விடும். அவர்கள் விவசாயத்தையே கைவிட்டு ஓட வேண்டிய அவசியம் ஏற்படும். எனவே அரசு இந்தத் திட்டத்தை மறு பரிசீலனை செய்து கைவிட நடவடிக்கை எடுக்குமா ?

மாண்மிகு பேரவைத் தலைவர் : ஒரு தொகுதியில் அணை கட்டவேண்டும் என்றும், இன்னொரு தொகுதியில் அந்த அணையைக் கட்டக்கூடாது என்றும் சொல்லுகிறார்கள்.

TRUTH ALONE TRIUMPHS

1982 மார்ச் 3

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் சென்னம்பட்டி என்னும் இடத்தில் அணைக் கட்டுவதன் காரணமாக, மாண்புமிகு உறுப்பினர் சத்தியமூர்த்தி அவர்கள் சொல்லக் கூடிய அந்த மலட்டாறு திட்டம் பாதிக்கப்படாது. ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் பிச்சை அவர்கள் குறிப்பிட்டதைப் போல இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்வதன் மூலமாக அவர்கள் கருதுகிறபடி 20 ஆயிரம் ஏக்கர் அருப்புக்கோட்டைக்கோ திருமங்கலம் பகுதிக்கோ பயன் அடையப்போவதில்லை. 21 கண்மாய்களுக்குத் தண்ணீர் கொடுத்து 1,205·10 ஏக்கர் நிலத்திற்குத்தான் பாசன உறுதியை நாம் தருகிறோம். 171·41 ஏக்கர் நிலத்திற்கு பாசன பற்றாக் குறையைப் போக்கவும் 995·4 ஏக்கர் புதிய நிலம் பாசன வசதி பெறுவதற்கு திருமங்கலம் வட்டம் அருப்புக்கோட்டை வட்டத் திற்கும் கொடுத்து, எஞ்சியுள்ள நீரை மலட்டாறுக்குத் திருப்பு முடியும் என்று ஓரளவு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இருந்தாலும், 3 தொகுதிகளும் பாதிக்கப்படாத அளவுக்கு அரசு கவனமாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதியிலே சென்னம்பட்டி அருகில் கட்டப்படுகின்ற அணை சீப் இன்ஜீனியர் அவர்களின் ஆய்விலே இருக்கின்றது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டம் எப்போது அரசுக்கு வந்தது ? ஏன் இவ்வளவு காலம் தாமதம் ஆயிற்று ? பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு வரப்பிரசாதமாக அமையக்கூடிய இந்த அணை எப்போது கட்டப்படும், எப்போது இந்தத் திட்டம் தொடங்கப்படும் என்பதை இந்த மன்றத்தின் மூலமாக அந்தப் பகுதி மக்களுக்கு அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, 6-வது ஐந்தண்டுத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்ற திட்டங்கள் என்கின்ற வரிசையில் இந்தத் திட்டமும் இடம் பெற்று வருகின்றது. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்து, மானியக் கோரிக்கையிலே பேசுகின்றபோது இதற்காக 170 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருப்பதையும் இந்த அரசு அறிவித்திருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சத்தியமூர்த்தி அவர்கள் தெரிவித்த அந்த அச்சத்தையும் கவனத்தில் கொண்டு அங்கே எவ்வளவு நீரை நாம் தேக்குகிறோம். கூடுதலாக எவ்வளவு நீர் அங்கே வழங்கப்படுகின்றது என்பதைத் தான் திரும்பவும் ஒரு ஆய்வு செய்திருக்கிறோம். எனக்கு கிடைத்த முதல் நிலை அறிக்கையின் தகவல்படி 3 தொகுதிகளும் பாதிக்கப்படாது. திட்டமிட்டபடி இதை எடுத்து நடத்த வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1982 மார்ச் 3]

வரட்டாறு மற்றும் அடவிநயினார் கோயில் அணைத்திட்டங்கள்.

* *வினா எண். 334*—**திரு. ஏ. சாகுல் ஹமீது :** *மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—*

(அ) கடையநல்லூர் தொகுதியில் கடையநல்லூர் ஊராட்சியைச் சார்ந்த பகுதியில் வரட்டாறு அணைத் திட்டத்தை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுமா ?

(ஆ) மேக்கரை பகுதியில் ஆய்வு முடிந்துள்ள அடவிநயினார் கோவில் அணைத் திட்டப்பணி எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : *(அ) ஆம். வரட்டாறு நீர்த் தேக்கத்திட்டம் மறுபரிசீலனைக்காக தலைமைப் பொறியாளரால் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.*

(ஆ) இத்திட்டம் தலைமைப் பொறியாளரின் (ஆய்வு) பரிசீலனையில் உள்ளது.

திரு. ஏ. சாகுல் ஹமீது : தலைவர் அவர்களே, வரட்டாறு திட்டத்தை மறுபரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேக்கரைப் பகுதியில் இருக்கின்ற அடவிநயினார் கோயில் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும் ? அதனால் முன் பகுதிக்காரர்களுக்கு இடையூறு இல்லாத வகையில் அந்தத்திட்டம் நிறைவேற்றித் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் தென்காசி வட்டத்தில் வரட்டாற்றின் குறுக்கே அணைகட்ட 1975-76-ஆம் ஆண்டிலே உள்ள விலைவாசிகளின் அடிப்படையில் இந்தத் திட்டத்திற்கு 77 இலட்ச ரூபாய் செலவாகும் என்று ஒரு கருத்துரு வந்தது. ஆனால் அப்போது அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. பொருளாதார ரீதியில் அது கட்டுப்படியாகவில்லை என்று சொல்லி அது அப்போது கைவிடப்பட்டது. ஆனால் பின்தங்கிய பகுதிகளில் லாப நஷ்டக் கணக்குப் பார்க்கக்கூடாது என்று இந்த அரசு எடுத்த முடிவுக்கு இணங்க திரும்பவும் மறுபரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. இது முதல் பகுதிக்கான விடை.

இரண்டாவது பகுதிக்கான விடை : அடவிநயினார் கோயில் அணைத்திட்டம். இது செங்கோட்டை வட்டம் மேக்கரை கிராமத்தில் அனுமான் நதியின் குறுக்கே அமைக்கப்படுகிற நீர்த் தேக்கம். இது ஏற்கெனவே பயன்பெறுகின்ற 2,139·08 ஏக்கர் இருபோக நிலங்களுக்கு பாசன வசதியை உறுதி செய்யும்,

மேலும், 237·87 ஏக்கர் இருபோக நிலங்களுக்குள்ள பாசனப் பற்றாக்குறையைப் போக்க வாய்ப்பு ஏற்படுத்தும். மேலும், 250 ஏக்கர் நிலங்களுக்கு—புதிய புஞ்சை நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கும். இதனுடைய மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 887·40 இலட்சமாகும்.

திரு. ஏ. சாகுல் ஹமீது : பேரவைத் தலைவர் அவர்களே, புள்ளி விவரங்கள் திருப்தியாகத் தந்து இருக்கிறார்கள். அந்த மேக்கரை கிராமத்தில் அமைக்கப்படும் அடவிநயினார் கோயில் அணைத் திட்டத்தின் காரணமாக முன் பாசனதாரர்களுக்குப் பாதிப்பு ஏற்படுமா ? அப்படி பாதிப்பு ஏற்படாமல் அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, மேல் பகுதியில் தற்போது பாசனத்தில் உள்ள 2,139·08 ஏக்கர் நிலங்களுக்கு இருபோக சாகுபடிக்கு நீர் உறுதி செய்யப் பட்ட பின்னர் தான் மற்ற பகுதிகளுக்குத் தரப்படும். ஆகவே நிச்சயமாக பாதிப்பு இருக்காது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, வேளாண்மை அபிவிருத்திக்கு மூல தேவை, முக்கிய தேவை நீர்ப்பாசனம்தான். அந்த நீர்ப்பாசனத்திற்கான திட்டங்களைத் தீட்டுகின்ற நேரத்தில் கட்டுப்படியாகாத திட்டம் என்று சொல்லி பல திட்டங்கள் கைவிடப்பட்டு இருக்கின்றன. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட தெரிவித்திருக்கிறார்கள். இப்படி கட்டுப்படியாகாத திட்டம் என்று சொன்னதால், பல திட்டங்களை அவசியமானவைகளாக இருந்தும் நிறைவேற்றாமல் விட்டு விட்டார்கள். அதனால் பல அபிவிருத்தி வேலைகள் நின்றுவிட்டன ஆகவே, இப்படி கட்டுப்படியாகாத திட்டங்கள் என்று சொல்லி நல்ல திட்டங்களைக் கைவிடாமல், எங்கெங்கே நீரைத் தேக்கி வைக்க வாய்ப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் நீர்த்தேக்கம் அமைத்துத் தர, அதிகமான நிதி ஆதாரங்களை அமைச்சர் அவர்கள் பெற்று, அதைச் செய்ய முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு பதில் சொல்லுகிறபோதே சொன்னேன். 1975-76-ஆம் ஆண்டிலேயே இது பொருளாதார ரீதியாக கட்டுப்படியாகாத திட்டம் என்று கைவிட்டு விட்டார்கள். ஆனால் இன்றைய அரசு ஒரு புதிய கொள்கையை உருவாக்கியிருக்கிறது. பின்தங்கிய பகுதிகளில் இத்தகைய திட்டம் நிறைவேற்றப்பட வாய்ப்பு இருந்தால், பொருளாதார ரீதியைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், அந்தத் திட்டங்களை முன்னுரிமை கொடுத்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் நிறைவேற்றி வருகிறோம். அதுபோல் கிட்டதட்ட 7

1982 மார்ச் 3]

திட்டங்கள் நெல்லை மாவட்டத்தில் 30 ஆண்டுகளுக்கு மேலாகக் கைவிடப்பட்டு இருக்கின்றவைகள் தற்போது நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த மேக்கரை அனுமான் நதியிலே கட்டப்படுகின்ற அணையால் தென்காசி வட்டத்தில் உள்ள கீழ்ப்பகுதியில் உள்ளவர்கள் பாதிக்கப்படக்கூடும் என்று தெரிவித்து மனுக்கள் ஏதேனும் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி வந்திருக்குமானால் அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதன் மூலம் பயன்படக்கூடிய எந்த ஒரு விவசாய நிலமும் பாதிக்கப்படாத அளவுக்குத்தான் இந்தத் திட்டங்கள் போடப்பட்டுள்ளன. இதிலே முதலிலே 2139·08 ஏக்கர் இருபோக நிலங்களுக்குத் தேவையான நீர் உறுதி செய்யப்பட்ட பின்னர்தான் மீதியுள்ள நிலங்களுக்குக் கொடுக்கிறோம். எனவே யாருக்கும் பாதிப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவள்ளியங்குடி நரிக்குடி கிராமத்திற்கான பாசன வாய்க்கால்.

*வினா எண். 335—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் வட்டம் திருவள்ளியங்குடி, நரிக்குடி கிராமத்திற்கான நீர்ப்பாசன வாய்க்கால் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் இடித்து தூர்க்கப்பட்டு இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம்.

(ஆ) இந்த வடிகாலை சீரமைப்பதற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1982-83-ஆம் ஆண்டுக்கான காவிரி வளர்ச்சி திட்டப் பணிகளில் ஒன்றாக இது சேர்க்கப்பட்டு அரசின் ஒப்புதல் பெற்று பணிகள் துவக்கப்படும். என்று தலைமைப் பொறியாளர் (பாசனம்) தெரிவித்துள்ளார்.

[1982 மார்ச் 3

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே ஒரு தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள். இது வடிகால் அல்ல, ஒரு வாய்க்கால். இந்த வாய்க்கால் 1974–75-ல் வெட்டப்பட்டு, ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்பட்டு, நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி அளித்தது. இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னால் இந்த வாய்க்கால் சில சமூக விரோதிகளால் தூர்க்கப்பட்டு, அதனால் 2, 3 கிராமங்கள் பாசன வசதியற்று இருக்கின்றன. பொதுப் பணித் துறையினர் அந்த சமூக விரோதிகள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்தக் கிராமங்கள் இப்போது வறட்சியால் பாதிக்கும் நிலை இருக்கிறது. எனவே அந்தக் கிராமங்களுக்கு மீண்டும் பாசன வசதி அளிக்க அந்த வாய்க்கால் புதுப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, என்னிடம் இருக்கிற குறிப்பின்படி தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருவள்ளியங்குடி, நரிக்குடி கிராமங்களுக்கான வடிகால் இது. இந்த விவரத்தைத்தான் கொடுத்து இருக்கிறார்கள். இது தவறான தகவல் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதினால் திரும்பவும் ஒரு கருத்தைப் பெற்றுதான் பதில் சொல்ல முடியும். இதிலே தவறு நடந்து இருக்கிறது என்று சொன்னார்கள். அது விதிமுறைகளின்படி கவனிக்கப்படும். 1982–83-ல் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள இருக்கிறோம். அதற்காக மகிழ்ச்சி அடைவார்கள் என்று கருதுகிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, இந்த வாய்க்காலுக்கான மதிப்பீடு சாங்க்ஷன் செய்யப்பட்டுவிட்டதா, எவ்வளவு மதிப்பீடு, இந்தத் திட்டத்தை இந்த ஆண்டே நிறைவேற்றித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, இது சம்பந்தமான மானியக் கோரிக்கை வரும்போது பதில் சொல்கிறேன்.

திருவள்ளூர் அருகே சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம்.

* வினா எண். 336—திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் திருவள்ளூர் அருகே புதிய சர்க்கரை ஆலை நிறுவ அரசு ஆலோசித்துக் கொண்டுள்ளதா ?

1982 மார்ச் 3]

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) அதற்கு அரசு செலவிடும் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ), (ஆ) மற்றும் (இ) : தலைவரவர்களே, ஆம். நாள் ஒன்றுக்கு 1,852 டன் பிழிதிறன் கொண்ட சர்க்கரை ஆலை ஒன்று அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக மத்திய அரசிடம் உரிமம் எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மதிப்பீடு ரூபாய் 8 கோடி.. இதில் மாநில அரசின் பங்குத் தொகை சுமார் 2 கோடி ரூபாய்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, திருவள்ளூருக்கு அருகே அமைக்கப்பட இருக்கிற இந்த சர்க்கரை ஆலைக்கான அனுமதியைப் பெற மத்திய அரசுக்கு எழுதி இருப்பதாகச் சொல்கிறார்கள். மத்திய அரசிலிருந்து எப்போது அனுமதி கிடைக்கும் ? அந்த ஆலையை ஆரம்பிக்கும்போது எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் ? இப்படிப் பட்ட ஆலைகளை தமிழகத்தில் பல்வேறு இடங்களில் அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, இதில் மத்திய அரசின் உரிமம் எதிர்பார்க்கப்படுகிறது. எவ் போது கிடைக்கும் என்று தெரியவில்லை. உரிமம் கிடைத்த உடன் ஆலை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்படும். சுமார் 1,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

திரு. இரா. சண்முகம் : தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூருக்கு அருகே தொடங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் திருத்தணி தொகுதி, திருத்தணி தாலுகாவில் திருவாலங்காடுக்குப் பக்கத்தில் தொடங்கப்படுவதாக ஏற்கனவே சொல்லப்பட்டது அது அங்கு தொடங்கப்படுமா ? அல்லது திருவள்ளூருக்கு அருகே தொடங்கப்படுமா ? தொடங்கும் பணி எப்போது ஆரம்பிக்கப் படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, திருவள்ளூருக்கு அருகே, திருவள்ளூர்—அரக்கோணம் சாலையில் திருவாலங்காடுக்குப் பக்கத்தில் தொடங்குவது என்று இப்போது முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

சுண்ணாம்பு கற்கள் எடுப்பதற்கான அனுமதி வழங்கும் திட்டம்.

*வினா எண் 337—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிமெண்ட் தொழிற்சாலைக்குத் தேவையான சுண் ணாம்புக்கல் எடுக்கும் அனுமதி (தனியாருக்கு) நிறுத்தப்பட்டு உள்ளதா ?

(ஆ) கூட்டுறவு சங்கங்கட்கு அந்த அனுமதி வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) ஆம். விதிகளின்படி விண்ணப்பங்கள் பரிசீலிக்கப் பட்டு சுரங்கக் குத்தகை வழங்கப்படும்.

திரு. எம். சின்னசாமி : தலைவரவர்களே, இப்படிப்பட்ட உரிமம் கேட்டு, தனியாரிடமிருந்து புதிய விண்ணப்பம் வந்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி தனியார்களுக்கு அனு மதி வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதா என்பதாகும். ஆகவே உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் நிறுத்தி வைப்பதில்லை. தனியார்கள் பலரிடமிருந்து நூற்றுக்கணக்கான மனுக்கள் வந்து இருக்கின்றன. அவை பற்றியெல்லாம் பரிசீலிக்கப்பட்டு தகுதிக் கேற்ப முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பெரிய தொழிற் சாலைகள் என்றால் 5 ஆண்டுகள் என்றும், சிறிய தொழிற் சாலைகள் என்றால் 3, 4 ஆண்டுகள் என்றும் சிலவற்றிற்கு 2, 3 ஆண்டுகள் என்றும் தகுதிற்கேற்ப அவைகள் பரிசீலிக்கப் பட்டு அதற்கான முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. எம். சின்னசாமி : தலைவரவர்களே, இந்த உரிமம் வழங்குவதைப் பொறுத்த வரையிலே மாநில அரசுக்கு பூரண உரிமை இருக்கின்றதா ? அல்லது மத்திய அரசைக் கேட்டுத்தான் இந்த உரிமமும் வழங்கப்படுகின்றதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே இந்த உரிமம் வழங்குவதைப் பொறுத்த வரையில் அது மாநில அரசினுடைய அதிகாரத்திற்கு உட்பட்டதுதான்.

1982 மார்ச் 3]

வெளிநாடுகளில் வேலை தேடித் தருவதற்கான தனியார் நிறுவனங்கள்

* வினா எண். 338—திரு. வ. சத்தியமூர்த்தி, திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளி நாடுகளில் வேலை தேடித் தருவதாக ஆயிரக் கணக்கான ஏழைத் தொழிலாளர்களிடம் பல ஆயிரம் ரூபாய் களை இடைத் தரகர்கள் மோசடி செய்வது பற்றி அரசு அறியுமா?

(ஆ) தனியார் மூலம் வெளி நாடுகளுக்கு வேலை நிமித்தம் அனுப்புவதை தடை செய்து அரசே அப்பணியைச் செய்ய முன் வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) ஆம். பத்தொன்பது வழக்குகள் காவல் துறையினரால் மோசடி புரிபவர்கள் மீது போடப்பட்டுள்ளது.

(ஆ) தனியார் நிறுவனங்களைத் தடை செய்வதற்கு மைய அரசால்தான் செய்ய முடியும். தமிழக அரசு இதுபற்றி பரிந் துரை செய்யலாமே தவிர தமிழக அரசே தனியார் நிறுவனங் களைத் தடை செய்வதற்கு அதிகாரம் இல்லை. தமிழக அரசைப் பொறுத்த வரையில் இங்குள்ள திறமைசாலிகளுக்கு அயல் நாடுகளில் வேலை பெற்றுத் தருவதற்காக அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் என்ற அமைப்பு ஒன்றை நிறுவி யுள்ளது, இந்த நிறுவனம் இந்திய நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் 30—11—1978-ல் பதிவு செய்யப்பெற்றுள்ளது. இந்த நிறுவனம் சென்னை-4-ல் 117, டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையில் இயங்கி வருகிறது.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள பல கிராமங்களிலுள்ள ஏழை மக்கள் பலர் 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கொடுத்து ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத் திலுள்ள அனேக கிராமங்களில் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் சுமார் 20 பேர்களுக்கு மேல் இப்படி ஏமாற்றப்பட்டு இருக்கிறார் கள். இப்படி தமிழக மக்கள் இதனால் அதிகம் பாதிக்கப்படுவ தால் இதிலே தமிழக அரசு தலையிட்டு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இவ்வாறு தனியார்கள் மோசடிகளைத் தவிர்க்கும் வகையிலே தனியார்கள் வெளி நாடுகளுக்கு ஆட்களை அனுப்பினால் கூட பதிவு செய்து கொண்டுதான் அனுப்ப வேண் டும் என்ற ஒரு விதி முறையினைக் கொண்டுவர அரசு முயலுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போன்று தற்போது இருக்கக் கூடிய விதி முறைகளை மீறித்தான் இத்தகைய தனியார்கள் இத்தகைய செயல்களிலே ஈடுபட்டு பொது மக்களுக்கு ஊறு விளைவித்துக் கொண்டு வருகிறார்கள். தமிழக அரசினைப் பொறுத்த வரையிலே மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இத்தகைய நிறுவனங்களைத் தடை செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, இப்படி தனியார்கள் பலர் மோசடி செய்ததின் காரணத்தினால் ஆயிரக்கணக்கான பேர் ஏமாற்றப்பட்டு தெருவிலே நிற்கக் கூடிய நிலைமை இருக்கின்றது. இதைத் தவிர்ப்பதற்கு மாநில அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இதற்காக நாமே ஒரு வாரியம் அமைத்து அவர்கள் மூலமாகத்தான் எந்த ஒரு நபரும் வெளி நாடுகளுக்கு பணியாளர்களை அனுப்பலாம் என்ற நிலைமையை உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரர்களே, இதற்கு நான் ஏற்கனவே விடை அளித்ததை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இதற்காகத் தனியாக வாரியம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தால் தமிழக அரசே இதற்கான நிறுவனம் ஒன்றை நிறுவி அதன் மூலமாக தற்போது அயல்நாடுகளுக்கு பணியாளர்கள் அனுப்பப்பட்டு வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னது போன்று தமிழகத்திலுள்ள மக்கள் அந்த நிறுவனத்தினை பயன்படுத்திக் கொண்டு அயல்நாடுகளுக்குச் சென்று வேலை வாய்ப்புகள் பெற வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற அந்த நிறுவனத்தில் ஒரு அதிகாரி இருக்கிறார். அவர் மூலமாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை 200-க்கு உட்பட்டுத்தான் இருக்கின்றது. கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் இவ்வாறு அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதால் இதை அதிகப்படுத்துவதற்கான ஒரு நிலையை உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, இந்த நிறுவனம் 1—3—1979 முதல் செயல்பட்டுக் கொண்டு வருகின்றது. அப்போது முதல் 31—12—1981 வரையில் இந்த

1982 மார்ச் 3]

நிறுவனத்திலே பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 5,517 ஆகும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த நிறுவனத்தின் மூலமாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை 200 பேர்கள் தான் என்று சொல்வது தவறான தகவல். அந் நிறுவனம் துவங்கப்பட்ட நாளிலிருந்து 31—12—1981 வரை 423 பேர் அயல்நாடுகளுக்கு வேலைவாய்ப்பு பெறுவதற்காக அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10.10)

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு அதற்காக நிறுவனம் ஏற்படுத்தியிருந்தாலும் கூட, பல்வேறு தனியார் நிறுவனங்கள், இதற்காக பதிவு செய்து கொண்டு, மோசடி செய்து வருகிறார்களே, அதை தடை செய்வ தற்கு, இந்த அரசு உடனடியாக நடவடிக்கையெடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதற்காக விடையளித் திருக்கிறேன். இதனை குறித்து பரிந்துரை செய்வதற்குத்தான் தமிழக அரசால் முடியுமே தவிர, தடை செய்வதற்குரிய அதி காரம் இல்லை. அதனை மத்திய அரசுதான் செய்ய வேண்டும். தமிழக அரசு நிச்சயமாக பரிந்துரை செய்யும்.

மதுரை மாவட்ட ஆதிவாசி மற்றும் பழங்குடி மக்களுக்கு குதிரைகள் வழங்கும் திட்டம்.

*வினா எண் 339—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு ஆதிதிரா விடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் வசிக்கும் ஆதிவாசி பழங்குடி மக்களுக்கு இலவசமாக குதிரைகள் வாங்கிக் கொடுக்கப்படு கின்றதா?

(ஆ) ஆம், எனில் கடந்த 3 ஆண்டுகளில் எவ்வளவு பேர் களுக்கு வாங்கித் தரப்பட்டது?

(இ) அதன் மதிப்பு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) ஆம்.

(ஆ) 18 பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

(இ) அதற்காக ரூ. 10,800 செலவிடப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கும், ஆதித்திராவிடர்களுக்கும், இலவசமாக மாடுகள், கால்நடைகள் வாங்கிக் கொடுக்கும் இந்த திட்டத்தில், மதுரை மாவட்டத்தில், கொடைக்கானல் தாலுக்காவில் மலைகளில் வசிக்கக் கூடிய பழங்குடி மக்கள் இருக்கிறார்கள். அவர்களில் 18 பேர்களுக்கு மட்டும்தான் வாங்கிக் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். என்னென்ன வாங்கிக் கொடுத்தார்கள்? குதிரைகள் வாங்கிக் கொடுத்தார்களா? கழுதைகள் வாங்கிக் கொடுத்தார்களா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் பகுதியில் மலைப்பிரதேசங்களில் இருக்கக்கூடிய பழங்குடி மக்களின் உபயோகத்திற்காக தற்போது, ஒவ்வொரு ஆண்டும்—இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் — 2 தாலுக்காக்களை தேர்வு செய்து, மட்டக் குதிரைகள் வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக 600 ரூபாய் வீதம் செலவிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வருடமும் 6 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு, அந்தத் தொகையை செலவிடும்பொருட்டு, மட்டக் குதிரைகள் வாங்கிக் கொடுக்கப்படுகிறது.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, மட்டக் குதிரைகள் வாங்கிக் கொடுப்பதற்காக ஒவ்வொன்றிற்கும் 600 ரூபாய் செலவாகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைய விலைவாசியில் 600 ரூபாய்க்கு குதிரைகள் வாங்குவது என்பதில், அந்தக் குதிரைகள் எந்த விதமான உபயோகத்திற்கும் பயன்படாததாகவே இருக்கும். அந்தத் தொகையை அதிகரித்துக் கொடுக்க வேண்டும். அடுத்ததாக, இந்தப் பழங்குடியினர் மலைகளில் வசிப்பதால், அவர்களுடைய பொருள்களை கீழே சுமந்து வர அவர்களுக்கு கழுதைகள் அதிகமாக தேவைப்படுவதால், அதையும் வாங்கிக் கொடுக்க அரசு முன் வருமா? மேலும் 18 பேர்கள் என்பதை அதிகப்படுத்தி, அந்த தாலுக்காவைப் பொருத்த அளவில் 100 பேருக்காவது வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: பேரவைத் தலைவர் அவர்களே, மலையிலிருந்து பொருள்களைக் கீழே கொண்டு வருவதற்காகத்தான், அரசு வழங்கும் இந்த மட்டக் குதிரைகளை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். அந்தத் தொகை மிகவும் குறைவாக இருப்பதை உணர்ந்துதான், இதை 600 ரூபாயிலிருந்து, 1,000 ரூபாய் வரை உயர்த்த வேண்டும், என்று ஆதி திராவிடர் பழங்குடிமக்கள் நலத் துறை இயக்குநர் அவர்கள் கருத்துரு ஒன்று அனுப்பியிருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதை பரிசீலனை செய்து விரைவில் அதற்கான

1982 மார்ச் 3]

ஆணையை வழங்க அரசு முயற்சித்து வருகிறது. மட்டக் குதிரை களுக்குப் பதிலாக கழுதைகள் வழங்கவேண்டும் என்று கூறியிருக் கிறார்கள். அவைகளையும் அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ஆர். டி. கோபாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் வசிக்கும் ஆதித்திராவிட பழங்குடி மக்கள் எங்கெங்கே இருக்கிறார்கள். அவர்களுக்கு மட்டக் குதிரையை இலவசமாக வழங்குவது தவிர, வேறு என்னென்ன உதவிகளை அரசு செய்து வருகிறது என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் மட்டும் இன்றி, தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து பழங்குடியினருக்கும் சிறப் பான வகையில் பல்வேறு வசதிகளைச் செய்து தரவேண்டும் என்ற எண்ணத்தோடு, பழங்குடியினர் துணைத் திட்டம் என்ற பெயரில் ஒரு திட்டத்தைத் தீட்டி அரசு செயல்படுத்தி வருகிறது. அதில் ஏறக்குறைய 6-வது ஐந்தாண்டு திட்டக் காலத்திற்குள் 2,896 லட்சத்தை செலவு செய்ய வேண்டும் என்ற உணர்வோடு பல்வேறு வகையிலான பணிகளை அரசுமேற் கொண்டு வருகிறது. அவர்கள் உயர்வடைவதற்காகவும், மற்ற அனைத்து வசதிகளை யும் பெறுவதற்காகவும், பல்வேறு திட்டங்கள் இந்தப் பழங்குடி யினர் துணைத் திட்டத்தின்கீழ் வகுக்கப்பட்டு செயல்படுத்தப் படும்.

மணப்பாறையில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 340—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறையில் தொழில் பயிற்சி நிலையம் (Indus ri l Tr ining Ins.i ut) அமைக்க திருச்சிராப்பள்ளி மாவட்ட அபிவிருத் திக்குழு (Developmen. Council) பரிந்துரை செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலேயே அரியலூர் மற் றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இரு இடங்களில ஏற்கனவே தொழிற் பயிற்சி நிலையங்கள் இருப்பதாலும் மணப்பாறையில் செயின்ட் ஜான் தொழிற்பள்ளி இருப்பதாலும் அரசின் நிதி நிலைமை காரணமாகவும் மணப்பாறையில் மற்றுமொரு தொழிற்பயிற்சி நிலையம் தற்போது ஏற்படுத்த இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒழுங்குப் பிரச்சினை.

(அ) கப்பல்கள் வாங்கும் திட்டம் நிதி நிலை அறிக்கையில் இடம் பெறாதது.

திரு. துரைமுருகன் : பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான ஒழுங்குப் பிரச்சினையை நான் கிளப்புகிறேன். தயவு செய்து, அருள்கூர்ந்து ஒரு கணம் செவி சாய்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு நாவலர் அவர்கள் இங்கே நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்து விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. ஒரு நிதிநிலை அறிக்கை என்று சொல்வது ஒரு ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் செய்யப்படுகிற திட்டங்களை எடுத்துக் கொள்வதாகும். ஆனால் மிகப் பெரியதொரு திட்டத்தை, 100 கோடி ரூபாய் திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நாவலர் அவர்கள் சுட்டிக் காட்டவில்லையென்பதுதான் நான் சொல்லப்போகிற ஒன்று. இன்று அரசாங்கம் பல்கேரியாவிலிருந்து மூன்று கப்பல்களை வாங்குவதாக அறிவித்திருந்தது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதையெல்லாம் மானியக் கோரிக்கைகள் வரும்போது பேசுங்கள்.

திரு. துரைமுருகன் : இது பரபரப்பாக பத்திரிக்கைகளில் வந்திருக்கிறது. பல்கேரியா ஒப்பந்தம் தீர்ந்து போய் மேற்கு ஜெர்மனியிலிருந்து 100 கோடி ரூபாய்க்கு மூன்று கப்பல்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகைகளில் பல செய்திகள் வரும்.

திரு. துரைமுருகன் : ஒரு நூறு கோடி ரூபாய் திட்டத்தை பட்ஜெட்டில் காட்டவில்லை என்றால் அது ஒரு பட்ஜெட்டா ? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது.

(3) தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பல உறுப்பினர்கள் இரண்டு மூன்று நாட்களாக ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் மூன்று நாட்களாக மின்சாரம் வரவில்லை ; விவசாயம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைப்பற்றி வட ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். திருநெல்வேலி பற்றி வரும்போது நீங்கள் பேசலாம்.

Thir DURAIMURUGAN: I w nt an explan ion from the Hon. Finance Minis er.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதுபற்றி அரசு தீவிரமாகக் கவனம் செலுத்திவருகிறது என்றாலும் இந்தப் பிரச்னைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருப்பதால், நாளை அதை எடுத்துக்கொண்டால் முழு விபரங்களும் சொல்ல வாய்ப்பாக இருக்கும். இப்போது அரசு அதுபற்றி தீவிர கவனம் செலுத்தி, எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. நாளையதினம் இதை எடுத்துக்கொண்டால் இதைப் பற்றிய கருத்துக்களை வழங்க வாய்ப்பு ஏற்படும்.

திரு. துரைமுருகன் : எங்களுக்கு ஒரு நாளைக்கு நூறு தந்திகள் வருகின்றன. நாங்கள் ஊருக்குப் போக முடியாது. நான்கு நாட்களாக அங்கே பம்ப் செட்கள் ஓடவில்லை. வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நிலைமை என்ன என்பதுபற்றி இப்போதே சொல்ல வேண்டும். நான்கு நாட்களாக அங்கே பம்ப் செட்கள் ஓடவில்லை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாகர்கோவிலில் துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது. அதை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 10.20)

திரு. துரைமுருகன்: நாம் இரண்டு ஒத்திவைப்புத் திர்மானங்களை ஒரே நாளில், ஒரு திர்மானத்தை முன்மொழிந்துவிட்டு எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதேபோல், இதையும் இதையும் இன்றைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

1982 மார்ச் 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கொஞ்சம் பொறுமையாக இருக்கவேண்டும், ஒரு நாளைக்கு 2 அல்ல, 3 அல்ல, 4 ஒத்திவைப்பு தீர்மானங்களைக்கூட எடுத்துக் கொள்ளலாம். ஆனால், பிரச்சினை அதுவல்ல. இப்போது நிதி நிலை அறிக்கையின் மேல் விவாதிக்கிறோம். ஒவ்வொரு கட்சியிலும் ஒரு உறுப்பினராவது பேசுவதற்கு வாய்ப்புத் தரவேண்டும் என்று தினசரி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் குறை பாட்டை போக்குவதற்கு என்னால் முடியவில்லை. அதற்கான நேரமும் இல்லை. இப்போது மணி 10.20 ஆகிறது. ஒவ்வொரு கட்சியிலும் ஒவ்வொரு உறுப்பினர் பேசியிருக்கிறார்கள். நிதி நிலை அறிக்கையின்மீது பேசும்போது, நிச்சயமாக எல்லாவற்றையும் பற்றி பேசுவதற்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே, அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பலர் ஆளுங் கட்சியிலே இருந்தும், இந்தப் பக்கத்திலே எதிர்வரிசையிலே இருந்தும் பேச விரும்புகிறார்கள். அதற்கான நேரத்தை என்னால் ஒதுக்க முடியவில்லை. ஆகவே நான் ஒரு நாளைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் என்று எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. நிதி நிலை அறிக்கையின்மீது விவாதம் முடிந்து, நிதி அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் அளிக்கின்ற வரையில் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வருவதில்லை என்பதுதான் இதுவரையிலும் சபையின், மரபாக கடைபிடிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆகவேதான் இப்போது இருக்கின்ற சூழ்நிலையில், குமரி மாவட்டத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தியிருப்பதால், அதை உடனடியாக எடுத்துக் கொண்டோம், நேற்று, திரு, பெ, சு, திருவேங்கடம் அவர்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் கரண்ட் வரவில்லை. என்பது பற்றிக் கொடுத்திருக்கிறார். அதேபோல், திருவாளர்கள் பலராமன் துரை முருகன் திரு. அழகிரிசாமி ஆகியவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இப்படி எல்லா உறுப்பினர்கள் பெயர்களையும் சொல்லி விடுகிறேன். பத்திரிகைகளில் அவர்கள் பெயர்கள் வந்தால் நல்லது என்பதற்காக அதற்கு பதிலளிக்க அமைச்சர் தயாராக வேண்டும். எனவே இன்றைக்கு குமரிமாவட்டம் துப்பாக்கிச் சூடு பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்தை மட்டும் எடுத்துக் கொள்வதற்கு, உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

திரு. துரைமுருகன்: வட ஆற்காடு மாவட்டத்திலே உள்ள பிரச்சினையும் மிகவும் முக்கியமானது. இதனால். அங்குள்ள விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, வட ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்த தி.மு.க. எம். எல். எக்கள் எங்களுடைய கட்சித் தலைவர் அவர்களின். ஒப்புதலோடு வெளிநடப்புச் செய்கிறோம்.

(வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த தி. மு. க. உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்தனர்).

[1982 மார்ச் 3]

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே கடந்த ஒரு வார காலமாக மின்சாரம் இல்லை என்ற பிரச்சினை அமைச்சருக்கும் தெரியும், அவைக்கும் தெரியும். அதைப் போக்குவதற்காக இங்கே விவாதிக்க விவசாயிகள் பெரும் அளவில் பாதிக்கப்பட்டு பொருளாதாரத்தில் சீரழிவு ஏற்படுகின்ற நிலையைப்பற்றி விவாதிக்க முடிவு எடுக்காமல் நாளை என்று ஒத்திவைப்பது சரியா என்ற கேள்வியை நாங்களும் எழுப்பி நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திரு. இல. பலராமனும் மற்றும் சிலரும் வெளிநடப்புச் செய்தனர்).

(முற்பகல் 10.30).

திரு. அ. ரகுமான்கான் : நான் உரிமைப் பிரச்சினை கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பரிசீலனையில் இருக்கிறது,

(2) ஒழுங்குப் பிரச்சினை—தொடர்ச்சி.

(ஆ) அரசினர் கொள்கை பற்றிய முடிவை பேரவையில் அறிவிக்காது முதலில் மேலவையில் அறிவித்தது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த அவையினுடைய கவுரவத்தை நீங்கள் பாதுகாக்க வேண்டியவர்களாக இருக்கிறீர்கள். எனவே, அதுபற்றிய பாயின்ட் ஆப் ஆர்டர் அரசாங்கம் எந்த முடிவை எடுத்தாலும், இந்த அவையிலே அந்த முடிவுகளைச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்குமானால், இங்கே கட்டாயமாக அதைச் சொல்லிவிட்ட பிறகு, வேறு எங்காவது சொல்ல வேண்டும். ஆனால், சமீபத்தில் மின்சார பட்ஜெட் மீது இங்கே விவாதம் நடந்திருக்கிறது. அரசாங்கத்தின் முக்கியமான கொள்கை, அதாவது 5 வருஷ காலத்திற்கு எலக்ட்ரிசிட்டி போர்டிலே இருக்கக்கூடிய என்ஜினியர்கள் செல்ப் எம்ப்ளாய்மென்ட் அதாவது சுய வேலை தேடிகொள்ளும் முயற்சியில் ஈடுபட்டால், அவர்களுக்கு 5 ஆண்டுகள் லீவ் கொடுப்பது என்றும், அதேபோல் ஒரு குறிப்பிட்ட ஓர்க்க சில் ஒரு பகுதியினருக்குமட்டும், பென்ஷன் கொடுப்ப என்றிருக்கிறது. இதை எல்லோருக்கும் எக்ஸ் டன்ட் பண்ணவேண்டும் என்பதுபோன்ற முக்கியமான பிரச்னைகளை, இங்கே மின்சார பட்ஜெட்மீது விவாதம் நடக்கும்போது சொல்லாமல், மேலவையிலே சொல்லபட்டிருக்கிறது. இது இன்றைக்கு இந்த அவையின் கவுரவத்தைக் குறைப்

[திரு. ரா. உமாநாத்] [1982 மார்ச் 3

பதாக இருக்கிறது. Ours is directly elected House. இங்கேதான் முதலிலே அரசாங்கத்தின் முடிவைச் சொல்லவேண்டும்; அப்படிச் சொல்லாமல், அங்கே சொல்லியிருப்பது It is an absolute contempt of the House நீங்கள் இந்த அவையைப் பாதுகாக்காமல் யார் பாதுகாப்பது? கட்டாயமாக கவர்மென்ட் இதைப்பற்றி விளக்கம் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இதைப்பற்றி அன்றைக்கே எழுப்பியிருக்கவேண்டும். இப்போது காலங் கடந்து எழுப்பியிருக்கிறீர்கள் எனது கவனத்திற்கு இது முன்னாலேயே வரவில்லை.

திரு. ரா. உமாநாத் : நான் கல்கத்தாவிற்கு சென்ரட்ல் கமிட்டி கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். அப்போது அங்கே இதைப் பத்திரிகையிலே பார்த்து வியப்படைந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யாருமே இதை என்னுடைய கவனத்திற்கு இதுவரை கொண்டு வரவில்லை இன்றைக்கு நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

திரு. ரா. உமாநாத் : அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி விளக்கட்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, உண்மை நிலை தெரிந்திருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் இப்பிரச்சினையை எழுப்பியிருக்க மாட்டார்கள். சட்டப்பேரவையில் மின் வாரிய நிதிநிலை அறிக்கையைப் பற்றி விவாதிக்கபட்டது. ஆனால் அன்றோடு சட்டசபை கூட்டத்தொடர் முடிந்துவிட்டது. அதற்கு பிறகுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து இந்த கருத்தினைப்பற்றி நான் பேச முடிந்தது. அவர்கள் அதிலே, சில திருத்தங்களை சொல்லி அதை எப்படி அறிவிக்க வேண்டுமோ அப்படி அறிவிக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதற்கு பிறகு நடந்தது மேலவை தான், ஆகவேதான் மேலவையிலே அறிவிக்கப்பட்டது. ஆகையினால் சட்டசபையை அவமதிக்க வேண்டுமென்றோ அல்லது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அந்தத் தகவலை முதலிலே அளிக் மறுக்கவேண்டுமென்றோ நிலை இல்லை என்பததைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே இது மிகவும் சீரியசான பிரசினை, ஒரு நான் விவாதம் நடந்திருக்கிறது. அப்போது அதைச்......சொல்லவில்லை.

1982 மார்ச் 31]

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நான் கூட இதைக் குறித்து பேசினேன். அந்த விஷயத்தில் ஒரு வார்த்தை கூட அவர் பதில் சொல்லவில்லை. அதற்கு பதிலாக பொருளாதார நிலை பற்றி மட்டும் பேசி, தொழிலாளர்களைப் பற்றி நான் பேசினேன் என்று சொன்னதற்கு கூட பதில் அளிக்காமல் இருந்துவிட்டார். நான் சொல்லியிருக்கிறேன் என்பதால் இங்கே எங்களுக்காவது தெரிவிக்கும்படியாக அவர்கள் செல்லியிருக்க வேண்டும். அதுவும் சொல்லாமல், அதுபற்றி விஷயத்தை இந்த அவைக்கு தெரிவிக்காமல் செய்திருப்பது எப்படி நியாயம் என்பதை நீங்கள் பார்க்கவேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மறு நாள் பேரவை கூடவில்லை.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே இதுபோன்ற சந்தர்ப்பங்களில் எத்தனையோ முறை மாண்புமிகு அமைச்சர்கள் முதலமைச்சரை 'காண்டக்ட்' பண்ணி, எங்கேயிருந்தாலும் தொடர்பு கொண்டு இதேபோன்ற விஷயத்தை 'அக்செப்ட்' பண்ணலாமா, வேண்டாமா என்று அன்றே 'அனவுன்ஸ்' செய்வதுண்டு. 'லாஸ்ட் டே' என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், லாஸ்ட் டே என்பதால் அதன் 'அர்ஜென்சியை' உணர்ந்து பிறகு சொல்ல முடியாதே என்பதால் முதலமைச்சர் அவர்களை காண்டாக்ட் பண்ணியிருக்கலாமே, என்பதைத் தான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் தவறான எண்ணம் கொள்வதற்கு எதுவும் இல்லை. மேலவை உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் ஆனது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் அங்கே வருகிறார்கள். யார் உயர்ந்தவர்கள், யார் குறைந்தவர்கள் என்ற எண்ணத்திலே நாங்கள் பார்ப்பதில்லை. நீங்களும் பார்க்கமாட்டீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். உங்களுடைய தொகுதியின் சூழ்நிலைகளை நீங்கள் எந்தளவிற்குச் சொல்கிறீர்களோ, அதை உணர்ந்து எந்த நிலைமையால் இவ்வாறு ஏற்படுகிறது என்பதை புரிந்து நாங்கள் உடனடியாக தெரிவிக்க முடியாமல் அதிகாரிகளோடு விவாதிக்க வேண்டியிருக்கிறது. தகுந்த முடிவுகளை பிறகு வெளியிடுகிற கட்டாயம் நேர்கின்றது. ஆகவேதான் அதை மேலவையில் வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பேரவை இல்லாத காரணத்தால் எங்கே சொல்ல வேண்டுமோ அங்கே சொன்னோம். உறுப்பினர்களுடைய உரிமைக்கு தகுதியில்லாத நிலைமையை நாங்கள் உருவாக்கிவிட்டோமோ என்று யாரும் சந்தேகப்படக்கூடிய நிலைமை இங்கே இல்லை. அதே போல ஆளுநர் உரைக்கு பதில் சொல்கிற போது இங்கே

பேசியதை விட மேலவையில் அதிக நேரம் பேசினேன் என்றால் அதற்கு இந்த அவையை அலட்சியப்படுத்திவிட்டேன் என்ற பொருள் இல்லை. இதில் சிலருக்குக் கோபம் வருகிறது. ஏழு மணிநேரத்தை நான் வீணாக்கி விட்டேன் என்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள். அதையெல்லாம் நாங்கள் தாங்கிக்கொள்கிறோம். நட்பின் மிகுதியால் வருகிறவை என்று அளவிலே எடுத்துக்கொள்கிறோம்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, எங்களுடைய உணர்வுகள் எப்படி இருக்கிறது என்று சொன்னால் இங்கே நடந்த விவாதத்தில் நாங்கள் சொன்னதற்கு எந்தப் பதிலும் சொல்லாமல், குறிப்பாக நான் பென்ஷன் மற்றும் தொழிலாளர் விஷயம் குறித்து இங்கே பேசினேன். இங்கே பதில் சொல்லவில்லை என்றால் எங்களைத் தவிர்க்கிறாரோ என்ற எண்ணம் எங்களுக்கு ஏற்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை அன்று நடக்கவில்லை என்பதைத் தான் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகையால் இதில் பிரச்னை ஒன்றும் இல்லை.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

குமரி மாவட்டம் மண்டைக்காடு கிராமத்தில் துப்பாக்கிச் சூடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் டி. மணி, ஜே. ஹேமச்சந்திரன், கே. ஆர். சுந்தரம், பெ. சு. திருவேங்கடம், மு. அம்பிகாபதி, ஈ. எஸ். எம். பக்கீர் முகம்மது, ப. பொன்னுரங்கம், எஸ். இரத்தினராஜ், கே. எம். தங்கமணி, சி. பழனிமுத்து, எல். இளையபெருமாள், ஆர். நவநீத கிருஷ்ணபாண்டியன், எஸ். என். ராமசாமி, திரு. ஈ. முத்துராமலிங்கம், பொ. விஜயராகவன், நா. சுந்தரராஜ், அ. ரகுமான் கான், ஏ. சாகுல் ஹமீது, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், சோ. அழகர்சாமி, எம். ஆறுமுகம், ஏ. டி. கருப்பையா, என். ஏ. பூங்காவனம், என். எஸ். வி. சித்தன் ஆகியோர் "குமரி மாவட்டம், குளச்சல் அருகே மண்டைக்காடு என்ற

1982 மார்ச் 3] [பேரவைத் தலைவர்]

கிராமத்தில் கோயிலில் திருவிழாவில் போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒருவர் மரணமடைந்தும் 11 பேர் காயமடைந்தும் உள்ளதால் அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் அருகிலே மண்டைக்காடு கோயில் ஒரு பிரசித்திபெற்ற புராதனமான கோயில். அங்கே ஏற்பட்டிருக்கின்ற துப்பாக்கிச்சூடு பிரச்சினையை ஒத்திவைப்புப் பிரச்சினையாக மட்டும் பார்க்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற 3 மாத காலமாக கன்னியாகுமரி மாவட்டத்திலே பலபகுதிகளிலே ஆர்.எஸ்.எஸ். இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட பிறகு பல நேரங்களில் வகுப்புவாத மதக் கலவரங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதை அரசு அறியும். நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கிற நேரத்திலே ஒரு நபர் இறந்தார் என்ற நிலை இருந்தது. இன்றைக்குக் கிடைக்கிற தகவல்படி 6 நபர்கள் இறந்து விட்டனர் என்பது மட்டுமல்ல, 3 பேர்களின் நிலை அபாயகரமான நிலையில் மருத்துவ மனையிலே இருக்கிறார்கள் என்பதும், 27 பேர்கள் காயமடைந்து அவர்களும் சீரியசான நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதும் ஆகும். மறைந்த அந்த 6 பேர்களுக்கு நான் இந்த அவையின் மூலமாக அனுதாபத்தை தெரிவித்துக்கொள்ள இந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொள்கிறேன். இந்தப்பிரச்சினை சம்பந்தமாக வந்திருக்கின்ற கருத்துக்களைச் சொல்வது என் கடமை, தேவை என்பதால் கூறுகிறேன். மண்டைக்காட்டில் பல வருடகாலமாக நடந்துவருகிற திருவிழாவில் எந்த விதமான அசம்பாவிதமும் நடந்தது கிடையாது. அதற்குப் பக்கத்திலே புதூர் என்ற இடத்திலே ஒரு மாதா கோயில் இருக்கிறது. அந்த குருசடியிலே அதே கால கட்டத்திலே பாடல்களைப்பாடி பிரார்த்தனை நடத்துவது வழக்கம். அங்கேயும் இதுவரை எந்தவிதமான தகராறும் நடந்தது கிடையாது. இதிலே காவல் துறையினர் இரண்டு கோயில்களும் ஒலிபெருக்கி வைத்து திருவிழாக்களை நடத்துவதற்கு அனுமதித்திருக்கிறார்கள். அந்த அனுமதி எப்படிக் கொடுக்கப்பட்டது என்ற விவரம் தெரியவில்லை. இந்த நிகழ்ச்சி அந்த ஒலிபெருக்கி வைத்ததன் காரணமாக ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறது என்றாலும் உண்மையிலே பார்த்தால் இந்த ஒலிபெருக்கி வைத்தது காரணம் என்பதைவிட அங்கேயிருந்த முன் விரோதம் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த மாதத்திலே மண்டைக்காடு கோவிலில் நடக்கும் திருவிழாவிற்கு அந்த

மாவட்டத்தினுடைய பல்வேறு பகுதிகளில் இருக்கின்ற பல்லாயிரக்கணக்கான மக்கள் செல்வது மட்டுமல்லாமல் கேரள மாநிலத்திலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கால்நடையாகவே வந்து பிரார்த்தனை செய்து வருவது வழக்கம். அங்கே 1982 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 1 ஆம் நாளன்று மதியம் ஒன்றரை மணிக்கு முதூரிலிருந்து * * * என்பவர் பக்கத்திலிருந்த இடத்திற்கு மது அருந்தச் சென்றிருக்கிறார். அப்பொழுது ஆர்.எஸ்.எஸ்.-ஐச் சேர்ந்த * * என்பவர்கள் கேலி செய்து தகராறு செய்ததாகத் தகவல் கிடைத்திருக்கிறது. பிறகு ஏற்கனவே இந்த நபர்கள் ஒலிபெருக்கி வைத்திருப்பது சம்பந்தமாக குருசடிக்குப் போய் தகராறு செய்திருக்கிறார்கள். அந்த வருத்தம் அவர்கள் மனத்தில் இருந்தது. இதையொட்டிப் பெண்களைக் கேலி செய்தார்கள்; தகராறுகள் செய்தார்கள் என்ற புரளி கிளப்பப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து ஏ.வி.எம். கெனாலுக்கு, பக்கத்திலுள்ள குருசாடிக்குப் பக்கத்தில் இருக்கும் இடத்திற்கு * * சென்று இப்படிப்பட்ட தகவல்களைத் திரட்டிக் கொண்டு வந்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பல பெயர்களை மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுகிறார்கள். இப்பொழுதுள்ள பிரச்னை இரண்டு மதங்கள் சம்பந்தப்பட்ட பிரச்னை. இந்தப் பிரச்னையிலே இந்தப் பக்கம் இரண்டு பேர், அந்தப் பக்கம் இரண்டு பேர் என்று குறிப்பிட்டு பிரச்னையை மேலும் வளர்க்காமல் இருக்க வேண்டியது அவையின் முக்கியப் பொறுப்பாகும். எனவே, பெயர்களைக் குறிப்பிடாமல் பேசினால் பிறகு காவல்துறையினர் நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, தவிர்க்க வேண்டியவைகளைத் தவிர்த்து, பொதுவாக ஏற்பட்ட மோதல் பிரச்னைகளைப்பற்றி உறுப்பினரவர்களுக்குத் தெரிந்தவற்றைச் சொன்னால் நல்லது. எனவே, இந்தக் கலவரம் சம்பந்தமாக உறுப்பினரவர்கள் குறிப்பிட்ட பெயர்களை மட்டும் நீக்கும்படி ஆணையிடுகிறேன். பொதுப்படையாக உறுப்பினரவர்கள் பேசலாம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: இதையொட்டி ஏ.வி.எம். கெனாலுக்குப் பக்கத்திலே அந்த ஊரைச் சார்ந்தவர்கள் கூட்டமாகச் சேர்ந்த நேரத்திலே கொளச்சல் காவல் நிலையத்தின் சப்-இன்ஸ்பெக்டர் விலக்கிய பிறகும் கேட்காமல், மணவாளக் குறிச்சி நிலையத்தைச் சார்ந்த சப்-இன்ஸ்பெக்டர் அங்கே செல்ல, அங்கே இருந்தவர்களுக்கும் இவருக்கும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

தகராறு ஏற்பட்டு மோதல் ஏற்பட்டிருக்கிறது. இந்த மோதலைத் தொடர்ந்து காவல்துறையினர் கட்டப்பட்டிருந்த கடைகளை அப்புறப்படுத்துவது என்ற நிலைமையையும், ஜீப்பிற்குத் தீயிட்டதாகவும் ஒரு நிலையை உருவாக்கி அந்த பேக்கிரவுண்டிலே காவல் துறையினரே அங்கே சென்று அவர்களை அடிப்பது போன்ற நடவடிக்கைகளை எடுக்கின்ற நேரத்தில் அவர்களால் கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டு துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டிருக்கிறது. எங்களுக்குக் கிடைத்திருக்கின்ற தகவலின்படி 46 ரவுண்டுகள் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டிருக்கிறது., உயர் போலீஸ் அதிகாரிகள் அந்த நேரத்திலே அங்கே கிடையாது; ரெவின்யூ டிபார்ட்மெண்டைச் சேர்ந்த அஃபிஷியல்ஸ் அந்த நேரத்தில் அங்கே கிடையாது; முன்னெச்சரிக்கைகூட கொடுக்கப்படவில்லை என்ற தகவல் கிடைத்திருக்கிறது.

இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டதற்குப் பிரதான காரணம் என்னவென்றால், காலாகாலத்திலே காவல்துறை எடுக்க வேண்டிய முன்னேற்பாடுகளுடன் போதுமான பந்தோபஸ்து செய்யாதது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால் ஒரேயிடத்திலே இரண்டு கோவில்கள் எதிர்ப்புறமாக இருக்கின்ற நிலையில், ஒரே நேரத்தில் ஒலிப்பெருக்கியைப் போடுவதற்கு இவர்கள் அனுமதி கொடுத்ததன் விளைவாகத்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்னவென்றால், இந்த நிலை புது நிலை அல்ல. ஏற்கனவே 25—12—1981ல் குலசேகரம் என்ற இடத்திலே கிறிந்தவ சமுதாயத்தைக் சேர்ந்தவர்கள் கிறிஸ்துமஸ் விழா கொண்டாடுவதற்காக ஊர்வலம் நடத்தினார்கள். அப்படி ஊர்வலம் நடத்தப்பட்ட நேரத்திலே, இதேபோன்ற ஒரே நேரத்திலே ஐயப்ப சேவா சங்கமும் ஒலிபெருக்கி வைத்துக்கொள்ள அனுமதி கொடுக்பட்டது.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒத்திவைக்க நீங்கள் அனுமதி அளித்தீர்களானால் அப்போது பேசவேண்டிய விஷயங்களை எல்லாம் இப்பொழுதே அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து ஏன் ஒத்தி வைக்க வேண்டுமென்ற சூழ்நிலையை மாத்திரம் சொல்லி அதற்குக் காரணம் சொன்னால் உதவிகரமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சில காரணங்களைத் தான் நான் சொல்லி வருகிறேன். ஏனென்றால், ஒத்தி வைப்பதற்கான காரணங்களை நான் ஏற்கனவே

குறிப்பிட்டேன். இது வெறும் சட்ட ஒழுங்குப் பிரச்னை அல்ல. சென்ற 3 மாத காலமாக கன்னியாகுமரி மாவட்டத்திலே ஏற்பட்ட சில பிரத்தியேகமான சூழ்நிலைகள்தான் காரணம். இந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஒரு நூலைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டம் ஒரு எரிமலை என்று சொல்லி....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் அவர் அதே எண்ணத்தில்தான் இருக்கிறார் என்று கருதுகிறேன். ஆகவே தயவு செய்து ஏன் ஒத்தி வைக்க வேண்டுமென்று சொல்வதை விட்டுவிட்டு இன்ன, இன்ன காரணங்கள் சூழ்நிலைகள் எல்லாம் இருந்தன என்று சொன்னால், அவை ஒத்தி வைத்த பின் சொல்கின்ற வாதகமாகத்தான் இருக்கும் என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேற்கொண்டு பிரச்னைகளை வளர்க்காமல் இருக்க ஏன் ஒத்தி வைக்க வேண்டுமென்பதற்கான காரணங்களைச் சுருக்கமாகப் பேசினால் நல்லதாக இருக்கும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இது அங்கு மட்டும் ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்னை அல்ல, இந்த மண்டைக்காட்டிலே தகராறுக்குக் காரணமான மற்றொரு சம்பவத்தை நான் இந்த நேரத்திலே கவனத்திற்குக் கொண்டு வந்து

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கதையை ஆரம்பித்து உப கதைகள் தொடர்கின்றன. ஆகவே, ஆரம்பத்தில் எடுத்துக் கொண்ட அடிப்படை நோக்குக்கு அவர்கள் சென்று அதையே காரணமாகக் கூறி, இதை ஏன் ஒத்தி வைக்கவேண்டுமென்ற விளக்கத்தைச் சொல்ல, நீங்கள் அனுமதி தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : அங்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்னை என்னவென்றால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு சமாதான கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார். அந்தக் கூட்டத்திலே நீண்டநேரமாகப் பல யோசனைகள் வைக்கப்பட்டதற்குப் பிறகுகூட, அந்த யோசனைகளை அங்கே இருக்கக்கூடிய அறங்காவலர் குழுவினுடைய தலைவரே ஏற்றுக்கொள்ளாமல் அவரே வெளிநடப்பு செய்திருக்கிறார் என்று தகவல். நான் எதற்காக இதைச் சுட்டிக் காட்டுகிறேன் என்றால், சமாதானக் குழு கூட சமாதானம் ஏற்படுத்த முடியாத அளவுக்கும் அதே நேரத்திலே, அந்த மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல்

துறை அதிகாரிகளும் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை கிறிஸ்தவர்களுக்கு ஆதரவான நடவடிக்கைகள் என்று ஒரு பக்கத்திலே பிரச்சாரம்—அதே மாதிரி, இந்தப் பக்கத்திலே இந்துக்களுக்கு ஆதரவாக உள்ளது என்றும் குற்றம் சாட்டக் கூடிய, இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டு, அதன் காரணமாக இன்று பிரத்தியேகமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால், இந்தப் பிரச்னை சம்பந்தமாக சாதாரணமாக, ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப் பார்க்கக்கூடிய முறையில் பார்க்காமல், அதிலே ஒரு நீதி விசாரணை—இப்பொழுது ஆர்.டி.ஓ. என்கொயரிக்கு ஆர்டர் போடப்பட்டிருக்கிறது. இது போதாது, நீதி விசாரணை ஏற்படுத்தக்கூடிய முறையிலே....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும், மீண்டும் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன். எந்தப் பிரச்சினையை வைத்து அவர்கள் விவாதிக்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ அதைச் சொல்லலாம். ஆனால், பிறகு கேட்க வேண்டிய கேள்விகளையெல்லாம் இப்பொழுதே சொல்லி, இதற்காக ஒத்தி வையுங்கள். அனுமதியுங்கள் என்று சொன்னால், எப்படிப் பொருத்தமுடையது என்று தெரியவில்லை. அங்கே சில நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. அந்த நிகழ்ச்சிகள் எப்படி நடந்திருக்கின்றன என்று அவரே விளக்கிவிட்டு, அவை இல்லை என்று சொல்ல மற்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுத்துவது நல்லதல்ல என்று நான் கருதுகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் என்றால், அங்கே மாவட்ட ஆட்சித் துறையினராலோ, காவல் துறையினராலோ, சட்டம் ஒழுங்கு பராமரிக்க முடியாத அளவுக்கு பிரச்சனை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, மாமூலான முறையிலே இந்தப் பிரச்னையைப் பார்க்காமல், நீண்ட முறையிலே அதை விவாதித்து நல்லஅமைதியை ஏற்படுத்த, அந்த மாவட்டம், எப்படி சென்ற பல வருடங்களாக, எந்தவிதமான தகராறும் இல்லாத, மத ஒற்றுமையான மாவட்டமாக இருந்ததோ அங்கு, இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு, சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

திரு. எஸ். ரெத்தினராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் மண்டைக்காடு கிராமத்தில் மார்ச் 1-ந் தேதி இரவு 8-30 மணிக்கு நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் 6 மீனவர்கள் இறந்து இருக்கிறார்கள். 50க்கும் மேற்பட்ட நபர்கள் மருத்துவமனைகளிலும், நூற்றுக்கணக்கான பேர்கள்

தனியார் மருத்துவமனைகளிலும் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். அங்கே கடைகள் பூட்டப் பட்டிருக்கின்றன. பாடசாலைகள் அத்தனையும் அடைக்கப்பட்டிருக்கின்றன. குமரி மாவட்டம் முழுவதும் பதட்ட நிலை இருந்து கொண்டிருக்கிறது. இந்தப் போலிஸ்காரர்களின் தாக்குதலால் மண்டைக்காடு பகுதியில் ஒரு திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறபோது, இந்தத் தாக்குதல் ஏற்பட்ட காரணத்தினால் மண்டைக்காடு பகுதி மக்களும் கேரளப் பகுதியிலே இருந்து திருவிழா பார்க்க வந்த மக்களும், மொத்தமாகக் குமரி மாவட்ட மக்களும் இதனால் பெரிதும் பதட்டமுற்ற நிலையில் இருந்து கொண்டு இருக்கிறார்கள். எனக்கு முன்பு பேசிய சகோதரர் உறுப்பினர் ஹேமச்சந்திரன் சொன்னதைப் போல், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், காவல் துறை அதிகாரிகளும் நடவடிக்கை எடுத்திருப்பார்களேயானால் இந்தத் துப்பாக்கிச் சூட்டைத் தவிர்த்திருக்க முடியும்.

இரண்டு மாதங்களுக்கு முன்னால் ஏற்பட்ட மதக்கலவரங்களின் காரணமாக அங்கு அமைதிக் குழு ஏற்படுத்தப்பட்டது. அப்படி ஏற்படுத்தப்பட்ட அமைதிக் குழுவை மீண்டும் கூட்ட இத்தகைய கலவரங்கள் ஏற்படாமல் தடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். இந்தத் திருவிழாவுக்கு முன்பு மண்டைக்காட்டில் மீண்டும் அமைதிக் குழுவைப் போடவேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. ஆனால் மாவட்ட தலைவரும், காவல் துறை அதிகாரிகளும் இதில் அக்கரை காட்டாமல், முன் எச்சரிக்கையாக இருக்காத காரணத்தினால், அங்கே குழப்பம் ஏற்பட்டது. இரண்டு கோவில்களிலும் ஒலிபெருக்கி இருந்தது. ஒரு கோவிலில் ஒலிபெருக்கியை காவல்துறையினர் துண்டித்த பிறகும் அங்கே ஒலிபெருக்கி போடப்பட்டது என்று குற்றச்சாட்டு பத்திரிகையிலே வந்திருக்கிறது.

இத்தகைய திருவிழாக் காலங்களில் சாதாரணமாக அங்கே காவல் துறையினர் ஒரு அவுட்போஸ்ட் வைப்பது வழக்கம். மற்றும் காவல் துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் அந்தப் பகுதியில் கேம்ப்' செய்து ஒழுங்கு பாதிக்கப்படாமல் பார்ப்பது வழக்கம். ஆனால் அங்கே அந்த மண்டைக்காடு பகுதியிலும் திங்கள் சந்தைப் பகுதியிலும் இரணியல் பகுதியிலும் கடை அடைப்புகள் ஏற்பட்டுள்ளன. வீட்டிலே இருந்து வெளியே நடமாடமுடியாத அளவுக்கு சட்டம் ஒழுங்குக்குப் பங்கம் ஏற்பட்ட நிலைமை ஏற்பட்டது. மண்டைக்காட்டுப் பகுதியில் காவல் துறையினர் கவனம் செலுத்தாத காரணத்தால் அங்கே துப்பாக்கி சூடு ஏற்பட்டு, 6 பேர்கள் மிருகத்தனமாக சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அங்கே மக்கள் மிருகத்தனமாக தாக்கப்பட்டு, அடித்து நொறுக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் 27-ந் தேதி அந்தப் பகுதியைச் சேர்ந்த மதத் தலைவர் மாவட்ட

ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் காவல் துறை அதிகாரிகளுக்கும் முன் எச்சரிக்கையாக மனுக்கள் கொடுத்தும், தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை காவல் துறையினர் எடுக்க வேண்டும் என்று மனுகொடுத்தும், காவல்துறையினர் செவிமடுக்காமல் இருந்திருக்கிறார்கள்.

இந்த மண்டைக்காடு அம்மன் கோவில் முன்பு கேரள மாநிலத்தோடு இருந்தபோது 1956ஆம் ஆண்டுக்கு முன்னால், அங்கே சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, அந்தக் கோவிலிலே திருவிழா நடைபெறுகிறபோது ஒரு மைல் சுற்று வட்டாரத்தில் எப்படிப்பட்ட காவல் போடவேண்டும் எப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று, அரசு அன்றைக்கு ஆணை பிறப்பித்தது. அந்த ஆணை தொடர்ந்து தமிழக அரசால் செயலாற்றப்பட்டு வந்திருக்கிறது.

ஆனால், இப்போது இப்படிப்பட்ட காவல் விதிகளை மீறி தகுந்த பாதுகாப்புகளைப் போடாமல், 2 சப் இன்ஸ்பெக்டர்களையும் சில காவலர்களையும்தான் போட்டிருக்கிறார்கள். அந்தக் கலவரம் நடைபெறும்போது இவர்கள்தான் அந்தப் பகுதியிலே இருந்திருக்கிறார்கள். அவர்களால் அந்தக் கூட்டத்தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

* * * * *

(முற்பகல் 10.50)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில கருத்துக்களைச் சொல்கிறபோது, அவர் முதலில் பேசிய முறை பாராட்டுக்குரியதாக இருந்தது. ஆனால் இன்னொரு மாநிலத்தில் இருந்து வந்தவர்களைப் பற்றி குறிப்பிடுவது வேறு தவறான முடிவுக்குக் கொண்டு போய் விட்டு விடும் என்பதால் அந்த வகையில் பேசாமல் வேறு விதத்தில் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது குறிப்பேட்டில் இல்லாமல் இருப்பது நமக்கும் மற்ற மாநிலத்திற்கும் நல்லது என்று நான் கருதுகிறேன்.

திரு. எஸ். ரெத்தினராஜ்: அந்தப் பகுதியைவிட்டுவிடுவதற்கு நான் தயாராக இருக்கிறேன். ஆனால் இன்றைக்கு அங்கே நிலவும் நிலைமை மிகவும் பதட்டமானதாக இருக்கிறது. அங்கேயுள்ள மக்களுக்கு சட்டம்-ஒழுங்கு காத்துத் தரப்படுகின்ற நிலைமை இல்லை. மேலும், அங்கே இருக்கும் மக்களுக்கு குடிப்பதற்கு சுத்தத் தண்ணீர் கிடைக்கவில்லை. அங்கேயிருக்கும் கிணறுகளில் டீசல் போன்ற எண்ணெய் ஊற்றப்பட்டு இருக்கின்றன அதன் காரணமாக அந்தப் பகுதியில் பாதுகாக்கப்பட்ட சுத்தி.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

கரிக்கப்பட்ட தண்ணீர் கிடைக்கவில்லை. பம்ப்செட் மூலமாகவும் நல்ல தண்ணீர் கிடைக்கவில்லை. அந்தப் பகுதியில் இருக்கிற ஏ.வி.எம். கால்வாயிலும் நல்ல தண்ணீர் கிடைக்கவில்லை. பக்கத்தில் கடல் இருக்கிறது. அங்கேயும் சுத்த தண்ணீர் இல்லை. இப்படிப்பட்ட நிலைமையில் அங்கே தண்ணீர் கிடைக்காததால் மக்கள் வெளியே வரமுடியாமல் பல இடங்களில் இருக்கிறார்கள். மேலும் பல இடங்களில் தகராறுகள் நடைபெறும் சூழ்நிலை இருந்து வருகிறது. எனவே இறந்தவர்களுக்கு நிதி உதவி கொடுப்பதற்கும், அங்கே நடைபெற்ற நிகழ்ச்சி குறித்து சரி வர விசாரிக்கவும் நீதிவிசாரனை நடத்துவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்கிற வகையில், இது குறித்து தீவிரமாக விவாதிக்க வேண்டியிருப்பதால், இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கன்னியாகுமரி மாவட்டத்திலே நடந்த சம்பவம் தவிர்த்து இருக்க முடியும், அரசு காலாகாலத்தில் உஷாராக இருந்து நடவடிக்கை எடுத்து இருந்தால் இந்த 6 பேர் இறந்தது தவிர்த்து இருக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் 6 பேர் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு பலியாகியிருக்கிறார்கள் 48-50 பேர் படுகாயம் அடைந்து மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இன்றைக்கும் அங்கே ஒரு பதட்ட நிலை ஏற்பட்டு, இரண்டு மத சம்பந்தப்பட்ட வகுப்பாரிடையே ஒரு மோசமான நிலைமை உருவாக்கப்பட்டு இருக்கிறது. இதற்குக் காரணம், மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டது போல், 3 மாதத்திற்கு முன்பே அங்கே ஒரு பதட்ட நிலைமை இருந்து இருக்கிறது. அதை அவர்கள் அரசின் கவனத்திற்கும் கொண்டு வந்து இருக்கிறார்கள்.

அந்த வட்டாரத்தில் உள்ள மன்டே மார்க்கெட்-திங்கள் சந்தை-என்கிற இடத்தில் பேருந்துகள் வந்து தங்கும் பொதுவான இடத்தில் ஒரு மதத்தைச் சேர்ந்தவர்கள் பிள்ளையார் சிலையை வைக்க முயற்சித்து இருக்கிறார்கள். ஆகவே, அதை வைக்கக்கூடாது என்று அங்கேயுள்ள வேறு மதத்தைத் சேர்ந்தவர்கள் சிலுவையை வைக்க முயற்சி செய்து இருக்கிறார்கள். இந்த மாதிரியான பொதுவான இடத்தில் யார் வேண்டுமானாலும் எந்த சிலையை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். எந்த ரோடிலும் யார் வேண்டுமானாலும் கோவில் கட்டலாம், அதற்கு இந்த நாட்டிலே அனுமதி தேவையில்லை என்ற ஒரு மோசமான நிலை இருந்து வருகிறது. அரசு அதிகாரிகளும், போலீஸ் துறையைச் சேர்ந்தவர்களும், ரெவின்யூ துறையைச் சேர்ந்தவர்களும் கூட இந்த ஜாதிமதம் என்ற உணர்வுகளோடு செயல்படும் முறை நம்முடைய நாட்டில் இருக்கிறது. இது கடுமையான முறையில் கண்டிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

அல்லது அப்படி நடக்கின்ற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசின் கடமையாகும் என்பதை சொல்லிக் கொள்கிறேன்.

மேலும், அங்கேயுள்ள பகவதி கோவிலில் இருந்து மாதா கோவிலை நோக்கி ஒலிபெருக்கியை எவ்வளவு சத்தமாக வைக்க வேண்டுமோ அவ்வளவு சத்தமாக வைத்து இருக்கிறார்கள். அதன் காரணமாக, அந்தப் பகுதியில் இருக்கிற மாதா கோவிலில் இருந்து இந்த பகவதிகோவிலை நோக்கி ஒலிப்பெருக்கியை அதிக சத்தமாக வைத்து இருக்கிறார்கள். இத்தகைய திருவிழாக்கள் நடக்கின்றபோது ஏதாவது சம்பவங்கள், அசம்பாவிதங்கள் நடக்கும் என்று காவல் துறை உஷாராக இருந்து இருந்தால் இந்த நிலையை தவிர்த்து இருக்க முடியும். அவர்கள் அசட்டை யாக இருந்த காரணத்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியவில்லை. அதனால் மோதல் ஏற்பட்டு இருக்கிறது. ஆக வே, இந்தச் சம்பவம் குறித்து ஆரம்பத்தில் இருந்து விசாரணை நடத்த வேண்டும். போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்யா மலே கண்ணீர் புகை மூலமே இந்தக் கலவரத்தை தடுத்து இருக்க முடியுமா என்றும் பார்க்கவேண்டும். ஆகவே, நடந்த சம்பவங்களைக் குறித்து ஒரு நீதி விசாரணை ஏற்படுத்தி, இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும் அரசு அதிகாரிகள் காலாகாலத்தில் உரிய நட வடிக்கை எடுக்கத் தவறியிருக்கிறார்கள். அவர்களுடைய அசட்டைப் போக்கினால் இப்படிப்பட்ட ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, உரிய நேரத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கத் தவறியிருந்தால் அந்த அதிகாரிகள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இது ஒரு துயர சம்பவம் மட்டுமல்லாமல் இரு மதத்தினர் சம்பந்தப் பட்டிருப்பதால் கட்டாயம் ஒரு நீதி விசாரணை தேவை. இதுபோன்று மற்றும் பல விஷயங்களைப் பேசி, நமக்குத் தெரிந்திருக்கின்ற பல்வேறு கருத்துக்களை எல்லாம் சொல்லி தீர விவாதிக்க வேண்டியிருப்பதால் அவையின் இதர அலுவல் களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே பல மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக் காடு கிராமத்தில் பகவதி அம்மன் கடற்கரைக் கோவிலில் வழக்

கம் போல் மாசி மாச கோடை விழாவை முன்னிட்டு ஆயிரக் கணக்கில் பக்தர்கள் கூடியிருக்கிறார்கள். அந்தக் கோவிலுக்கு மேற்கில் இருக்கிற புதூர் கிராமம் மீனவர்கள் பகுதி அங்கே கிறிஸ்தவர்கள் மிகுதியாக இருக்கிறார்கள். அங்கே ஒலிப் பெருக்கி வைத்ததில் இரு மதத்தினருக்கும் தகராறு ஏற் பட்டிருக்கிறது. அந்த திருவிழாவை ஒட்டி, மதச் சடங்குகளின் படி பக்தியைச் செலுத்த 9 பெண்கள் கடலில் குளித்துக் கொண்டிருக்கும்போது அவர்களை பலவந்தமாக மானபங்கம் செய்திருக்கிறார்கள்.

அந்த பகவதி அம்மன் கோவில் பகுதியில் இரு மதத்தினரும் இருக்கின்ற காரணத்தால், அங்கே இருக்கின்ற கிறிஸ்துவர்களை யும் இந்துக்களையும் அழைத்து அரசு தரப்பில் மாவட்ட ஆட்சித் தலைவரும் உயர் போலீஸ் அதிகாரிகளும் சமரசம் செய்ய ஒரு முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. கலவரம் ஏற்பட்ட பிறகு போலீசார் மக்களை குருவியைச் சுடுவதைப் போல சுட்டுத் தள்ளியிருக்கிறார்கள். போலீஸ் அதிகாரிகள் இரக்கமற்ற முறையில் பல தடவை துப்பாக்கிச் சூடு நடத்தி யிருக்கிறார்கள். அதனால் எலியாஸ், அம்புரோஸ், பத்ரோஸ் அந்தோணி, அமிர்தைய, சில்வஸ்டர் என்ற 6 மீனவர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் 48 பேர்கள் படுகா யமடைந்திருக்கிறார்கள். அங்கே பல பெண்களை காணவில்லை. என்று சொல்லப்படுகிறது. இது வன்மையாக கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று.

மரணம் அடைந்தவர்கள் குடும்பத்திற்கும், படுகாயம் அடைந்தவர்களுக்கும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து கணிசமான உதவித்தொகை வழங்க வேண்டும். மதத்தின் பேரால் நடைபெறும் இதுபோன்ற நாகரிகமற்ற கலவரங்கள் முற்றிலும் தவிர்க்கப்படவேண்டும். அது மட்டுமல்லாமல் எந்தத் தகராறு ஏற்பட்டாலும் உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். துப்பாக்கி சூடு என்பது எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு, பலனளிக்காமல் போனால் கடைசியாக எடுக்க வேண்டிய ஒரு நடவடிக்கை. எல்லாவிதமான முயற்சிகளும் தோற்றுப் போனால்தான் கடைசி யாக துப்பாக்கிச் சூடு நடைபெற வேண்டும். இந்த நடைமுறை களைப் போலீசார் பின்பற்றாத காரணத்தால் இத்தகைய இழப்பு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. என்பதை மிகவும் வருத்தத் தோடு தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இதுபற்றி நீதி விசாரணை நடத்தவும், துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்டிருக்கிற பதட்ட நிலையைப் போக்கவும், உயிரிழந்தவர் குடும்பங்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் நிவாரணம் அளிக்கவும் மேலும் பல

பிரச்சினைகள் பற்றி விவாதிக்க வேண்டியும் இருப்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மண்டைக்காடு பகவதி அம்மன் கோவில் ஒரு பிரசித்திபெற்ற கோவில். அங்கே பகவதி அம்மனை தரிசிக்க இந்துக்கள் மட்டுமல்லாமல் கிறிஸ்தவர்களும் முகமதியர்களும் கூட பல்வேறு இடங்களிலிருந்து வருவதுண்டு. அதுமட்டுமல்லாமல் 100 ஆண்டு காலத்திற்கு மேலாக அங்கே இந்துக்களும் கிறிஸ்துவர்களும் அண்ணன் தம்பிகளாக ஒன்றுபட்டு இருக்கிறார்கள். அங்கே கிறிஸ்தவர் விழாக்களில் இந்துக்களும், இந்துக்கள் விழாக்களில் கிறிஸ்தவர்களும் கலந்து கொள்கிறார்கள். கிறிஸ்தவர் வீட்டுக்கு இந்துக்களும், இந்துக்கள் வீட்டிக்கு கிறிஸ்துவர்களும் போய்வருவார்கள். இது நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிற வழக்கம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் - தலைமை)

ஆனால் சமீப காலத்தில் மதத்தின் பெயரால் அங்கே கலவரம் ஏற்பட்டு, இன்றைக்கு இந்த துயர சம்பவம் நடைபெற்றிருக்கிறது. பகவதி அம்மன் கோவிலைப் பொறுத்தவரையில் அங்கே ஒலிபெருக்கி வைத்த காரணத்தால் இந்த துப்பாக்கிச் சூடு நடந்ததாகச் சொல்லப்படுகிறது. ஒலிபெருக்கி தவறான முறையில் அங்கே வைக்கப்பட்டால், காவல் துறை அதிகாரிகள் ஏன் இரண்டு தரப்பினரையும் அதற்கு அனுமதித்தார்கள் என்பதை எல்லாம் ஆராய்ந்து பார்க்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. கலவரம் நடப்பதற்குக் காரணம் என்ன? அதற்கு யார் பொறுப்பானவர்கள்? அந்த விஷயத்தை பரப்பியவர்கள் யார் என்பதைக் கண்டறிந்து அந்த வேரோடும் வேரடி மண்ணோடும் களைய இந்த அரசு முயலவேண்டும். இப்போது பாரதி நூற்றாண்டு விழா கொண்டாடுகிறோம். அந்த பாரதியின் கவிதை ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

"தீயினைக் கும்பிடும் பார்ப்பார்—நித்தம்
திக்கை வணங்கும் துருக்கர்

கோயிற் சிலுவையின் முன்னே—நின்று
கும்பிடும் யேசு மதத்தார் :

யாரும் பணிந்திடும் தெய்வம்—பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்,

பாருக்குள்ளே தெய்வம் ஒன்று—இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்."

என்று பாரதி பாடினார். இதையெல்லாம் கருத்திற்கொண்டு ஏற்பட்ட துயர சம்பவத்தைப் பற்றி பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லி, நிவாரணத்திற்கு வேண்டிய வழிமுறைகளைக் காண வேண்டி விரிவாகப் பேச வேண்டியிருப்பதால் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11.00]

திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையின் மீது மிகுந்த மன வருத்தத்தோடு நான் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாதம் 1-ஆம் தேதி கன்னியாகுமரி மாவட்டத்தில் மண்டைக்காடு பகுதியில் நடைபெற்றிருக்கின்ற துப்பாக்கிச் சூடு சம்பவத்தைப் பொறுத்த வரையில் இது ஏதோ அன்றைக்குத் திடீரென்று எழுந்த ஒரு பிரச்சினையின் காரணமாக ஏற்பட்டது என்று எங்களைப் போன்றவர்களால் எண்ணிப்பார்க்க முடியவில்லை. ஏறத்தாழ சில மாதங்களாகவே கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறிய சிறிய சம்பவங்களும். மதக் கலவரங்களும் மத உணர்வுகள் தூண்டிவிடப்பட்ட காரணத்தால் பல்வேறு வகையான குழப்பமான சூழ்நிலைகளும் அந்த மாவட்டத்தில் ஏற்பட்டு வருகின்றன. இப்படிப் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டு வந்த வண்ணமாக இருக்கின்றது. அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இதுவரையில் பல ஆண்டுகளாக, 100 ஆண்டுகள் என்று கூடச் சொல்லலாம், அங்கே இருக்கின்ற மக்கள் அண்ணன் தம்பிகள் போன்று ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ஒரே குடும்பத்திலுள்ளவர்களில் கூட இந்துக்களும், கிறிஸ்தவர்களும் இருக்கின்ற அளவுக்கு ஒற்றுமையாகப் பழகிக் கொண்டு வந்திருக்கின்றனர். அப்படிப்பட்ட மாவட்டத்தில் இப்போது இதுபோன்ற விரும்பத்தகாத பிரச்சினைகள், யாராலும், வரவேற்கப்படாத பிரச்சினைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இது கண்டனத்திற்குரிய ஒன்றாகும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடப்பது அரசாங்கத்திற்கும் தெரியும். அதிகாரிகளுக்கும் தெரியும். இப்படி அதிகாரிகளுக்கும், காவல் துறையினருக்கும் தெரிந்த நிலையில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்று சொன்னால் நான் நிச்சயமாக அரசாங்கத்தை குற்றஞ்சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பிரச்சினையை முன்பே தடுப்பு நடவடிக்கை எடுத்திருந்தால் தடுத்திருக்க முடியும். அப்படித் தடுக்கப்படாததன் காரணத்தால்தான் இப்போது துப்பாக்கிச் சூடு நடத்தப்படுகின்ற அளவிற்கு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இது போன்ற கலவரங்களை யார் செய்தாலும் அல்லது யார் தூண்டிவிட்டாலும் அவர்கள் எல்லாம் தண்டனைக்கு உட்படவேண்டியவர்கள் மட்டுமல்ல. கண்டனத்திற்குரியவர்களுமாவார்கள். இப்போது துப்பாக்கிச் சூடு ஏற்பட்டிருக்கின்றது. இந்தச் சம்பவத்தின் பின்னணியாக மேலும் சம்பவங்கள் ஏதும் நடக்காமல் இருக்க

1982 மார்ச் 3 [திரு. பொ. விஜயராகவன்]

வேண்டும். முன்பிருந்த சகஜ நிலையினை அந்த மாவட்டத்தில் உருவாக்க வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு அங்கே இது குறித்து ஒரு நீதி விசாரணை செய்ய வேண்டியது மிகவும் முக்கியமானது. ஆகவே உடனடியாக நீதி விசாரணைக்கு அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, அங்கே இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு உதவுகின்ற வகையிலே அக்குடும்பத்தினருக்கு நட்டஈடு தருகின்ற வகையிலே கணிசமான தொகையினை அரசாங்கம் கொடுத்து உதவி செய்ய வேண்டும்.

இப்போது அந்த மாவட்டம் முழுவதும் மிகப் பெரிய பதட்டமான சூழ்நிலை உருவாகி இருக்கின்றது. கொந்தளிப்பான சூழ்நிலை உருவாகி இருக்கின்றது. ஆகவே இந்த நிலைமையினை மாற்றுவதோடு அது மீண்டும் வராமல் தடுக்கின்ற வகையிலே எல்லாக் கட்சியினரும் ஒற்றுமையாக ஈடுபடுவார்கள் என்ற நம்பிக்கை எங்களைப் பொறுத்தவரையில் இருக்கின்றது. எங்களைப் பொறுத்த வரையில் இந்தச் சர்க்காருக்கு மிகுந்த ஒத்துழைப்பு தர தயாராக இருக்கிறோம். இந்துக்களும், கிறிஸ்தவர்களும் அதிகமாக இருக்கக்கூடிய மாவட்டம் அது. ஆகவே அங்கே மத ஒற்றுமை ஏற்படுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். இது சம்பந்தப்பட்ட எல்லா காரியங்களையும் இந்த மன்றத்திலே வெகு விரிவாக விவாதிக்க வேண்டி இருக்கின்ற காரணத்தால் இந்த மன்றத்தின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டும் என்று கேட்டு அமைகிறேன்., நன்றி வணக்கம்.

திரு. ஏ. சாகுல் ஹமீது: துணைத் தலைவரவர்களே, இப்போது கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மண்டைக்காடு பகுதியிலே ஒரு துரதிஷ்டவசமான சூழ்நிலை ஏற்பட்டு அதனால் கலவரமும் ஏற்பட்டு, துப்பாக்கிச் சூடும் ஏற்பட்டு 6 பேர் மீனவர்கள் இறந்திருக்கிறார்கள்.

நூற்றுக் கணக்கான பேர்கள் காயங்கள் பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். பொதுவாக வெகு அமைதியாக இருந்த கன்னியாகுமரி மாவட்டம் இன்றைக்கு, இந்த அளவுக்கு கொந்தளிப்பு சூழ்ந்து அமைதியிழந்ததற்கு என்ன காரணம் என்று பார்க்கிறபோது, ஆர். எஸ்.எஸ்.காரர்களின் தூண்டுதல்தான் காரணமாக இருக்கிறது என்று தெரிகிறது அப்படிப்பட்ட சூழ்நிலை அங்கே ஏற்பட்டதற்கு சில பல உதாரணங்களும் இருக்கின்றன.

மொத்தத்தில் தமிழகத்தில் இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து இன்றைக்கு ஆங்காங்கே நடைபெற்றுக்கொண்டிருப்பது தெரிகிறது. அது இந்த இயக்கத்தின் தூண்டுதலால்தான் என்று சொன்னால் அதில் தவறு இல்லை. இதுவரையில் இந்தப்

பகுதியில் உள்ள 2 கோயில்களின் திருவிழாக்களும் அமைதியாகவே நடைபெற்று வந்தன. இந்த ஆண்டு மட்டும் இப்படிப்பட்ட சம்பவம் ஏன் என்று நினைத்துப் பார்க்கிற போது ஆர்.எஸ்.எஸ். காரர்களின் தூண்டுதல் தான் முழுக்க முழுக்க காரணமாக இருக்கிறது என்று நான் குற்றம் சாட்டி, இந்த மாதிரியான சூழ்நிலை அங்கே நிலவி வருகிறது என்பது முன்கூட்டியே அரசுக்கு தெரிந்திருந்தும், அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கத் தவறி விட்டது என்று சொல்கிறேன். தகுந்த நேரத்தில் நடவடிக்கையை எடுத்திருக்க முடியும். ஆனால் காவல் துறையினரின் அசட்டையின் காரணமாக, இந்தச் சம்பவங்களின் விளைவு குறித்து முன்கூட்டியே அங்கேயிருந்த சிலர் எடுத்துக் கூறியும், கூட, இந்தச் சூழ்நிலை ஏற்பட்டு, அதன் விளைவாக 6 பேர்கள் உயிரிழக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே, இந்த விளைவுகளுக் கெல்லாம் காவல்துறைதான் முழு பொறுப்பும் ஏற்கவேண்டும் என்று கூறி, அங்கே சமாதானத் திற்காக கூட்டப்பட்ட சமாதானக் குழுக் கூட்டத்தில் கூட, கோவிலின் அறங் காவலர் குழுத் தலைவர் நாகராஜன் அவர்கள் சமாதான கூட்டத்தை விட்டு வெளியேறி இருக்கிறார். எத்தனை வெறுப்பான சூழ்நிலை அங்கேயிருந்திருக்கிறது என்பதை புரிந்துக் கொள்ளமுடிகிறது. என்பதையும் கூறிக் கொள்கிறேன். இது போன்ற சம்பவங்கள் இனிமேலாவது ஏற் படாமல் இருப்பதற்கா அந்த மாவட்டத்தில் பல வகைகளில் பாதுகாப்பு உறுதி செய்ய வேண்டும், அத்தோடு இதை விசாரிக்க ஒரு நீதி விசாரணைக் குழு அமைக்க வேண்டும் என்று கேட்டு, இது குறித்து விரிவாக விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட் டத்தில், மதம் மாச்சரியங்களின் காரணமாக ஏற்பட்ட சூழ் நிலையில் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் பல ஏற்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டுக் காட்டினார் கள் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இதற்கு முன்னால் இருந்தது இல்லை என்பதையும், இப்பொழுது அண்மைக் காலத்திலே தான் ஏற்பட்டிருக்கிறது என்பதையும், அது எந்த அளவுக்கு போய்க் கொண்டிருக்கிறது என்பதையும், மாண்புமிகு உறுப்பி னர்கள் சுட்டிக் காட்டிப் பேசினார்கள்.

கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காடு என்ற கிராமத்தில் உள்ள பகவதி அம்மன் கோவிலில் மாசித் திருவிழா கடந்த 28—2—1982 முதல் பத்து நாட்கள் கொண்டாடப்பட்டு வரு கின்றது. இக்கிராமத்திற்கு அருகில் உள்ள மண்டைக்காடு புதூர் என்ற சிறு கிராமத்தில், மீனவர்கள் வசித்து வருகின்றனர்.

திருவிழாவிற்கு வரும் பக்தர்கள், வழிப்பாட்டிற்கு முன்பு கடலிலும், ஏ.வி.எம். கால்வாயிலும் குளிப்பதை ஒரு சடங்காகக் கடைப்பிடித்து வருகின்றனர். இந்துக்கள் தங்கள் கிராமத்தின் வழியாகக் கடலில் குளிப்பதற்காகச் செல்வதை கிறிஸ்தவர்கள் விரும்பவில்லை.

இந்துக்கள் ஒலி பெருக்கிகள் வைத்திருந்ததையும் கிறிஸ்தவர்கள் விரும்பவில்லை. 28—2—1982 அன்று, பத்மநாபபுரம் சப்-கலெக்டர் கிராமத்திற்குச் சென்று ஒலி பெருக்கிகளை கிறிஸ்தவர்கள் வாழும் பகுதியை நோக்கி வைக்காமல், திருப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். கிறிஸ்தவர்களும் ஒலிபெருக்கி வைத்து இந்துக்கள் வாழும் பக்கம் திருப்பி விட்டதாகத் தெரிய வருகிறது. இந்துப் பெண்கள் குளித்துக்கொண்டிருக்கும்போது கிறிஸ்தவர்கள் கேலி செய்திருக்கிறார்களாம். இந்துக்களை கேலி செய்ய வேண்டாம் என்று கிறிஸ்தவர்களையும் அவர் எச்சரிக்கை செய்துள்ளார்.

1982-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1-ஆம் தேதி அன்று இரவு சுமார் 8 மணியளவில் மண்டைக்காடு புதூர் பகுதியைச் சேர்ந்த சுமார் 2,000 பேர் கொண்ட கூட்டம் ஒன்று மண்டைக்காடு கிராமத்திற்கு வந்து, இந்துக் கோவிலுக்கு அருகில் வந்து, கடைகளுக்குச் சேதம் விளைவித்தும், இந்துக்களைத் தாக்கியும் உள்ளனர். கூட்டத்தினரைக் கலைந்து செல்ல வைப்பதற்காக, காவல் துறையினர் தகுந்த எச்சரிக்கைகளுக்குப் பினன்ர் தடியடிப் பிரயோகம் செய்தனர். தடியடிப் பிரயோகம் பலனளிக்கவில்லை. காவல் படையினரையும் சேர்ந்து தாக்கினர். காவல் துறையினர் சூழ்ந்து கொண்டனர். காவல் துறையினரின் வாகனம் ஒன்றிற்குத் தீ வைக்கப்பட்டது. மேலும் காவலர்கள் வரவழைக்கப்பட்டனர். நிலைமை மிகவும் மோசமாகவே, தகுந்த எச்சரிக்கைகளுக்குப் பின்னர் காவல் துறையினர், நிலைமையைக் கட்டுப்படுத்த வேறு வழியின்றி துப்பாக்கியால் சுட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. துப்பாக்கிச் சூட்டின் காரணமாக, நான்கு பேர் நாகர்கோவில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படும் வழியிலும், இரண்டு பேர் மருத்துவமனையிலும் உயிரிழந்தனர். 15 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி சரக டி.ஐ. ஜி. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர்முன்னிலையில் அமைதிக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது அதிலே முதலிலே சமரசம் ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலை இருந்தது. இதிலே சமரசம் ஏற்படாத காரணத்தால், அதிகாரிகள் இரு பிரிவினரையும் சந்தித்து சமரசம் ஏற்படுத்த முயற்சித்து வருகிறார்கள். காவல் துறைத் தலைவரும் சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்கு விரைந்துள்ளார். துப்பாக்கிச் சூடு சம்பவம் பற்றி விசாரணை செய்யுமாறு பத்மநாபபுரம் சப்-கலெக்டருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 3

(முற்பகல் 11.10)

அது மட்டுமல்லாமல் இந்த துப்பாக்கிச் சூடு பற்றி விசாரணை செய்கிற சப் கலெக்டருடைய முழு அறிக்கை வந்ததற்குப் பிறகு அதன் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எல்லாம் இந்த அரசு எடுத்துக்கொள்ளும் என்பதோடு மட்டுமல்லாமல் அதை யொட்டி மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவித்ததற்கு இணங்க துப்பாக்கிச் சூடு மூலம் இறந்தவர்கள் குடும்ப நிலைமைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் இந்த அறிக்கை மூலம் அறிந்ததற்குப் பிறகு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நிவாரண நிதியிலிருந்து எந்தளவிற்கு அந்தக் குடும்பங்களுக்கு உதவி செய்யலாம் என்ற முடிவினை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எடுப்பார்கள் என்பதையும் இந்த வாய்ப்பில் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்ததற்கிணங்க என்றுமில்லாத வகையில் சென்ற மூன்று திங்கள்களாக அங்கே மாச்சரியங்கள் ஏற்பட்டிருக்கிற சூழ்நிலை அந்த இடத்தில் மட்டுமல்லாமல் வேறு பலயிடங்களுக்கும் பரவுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக எடுத்துச் சொன்னார்கள். முதல்வர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் எச்சரிக்கையோடு இருந்து இது முளையிலேயே கிள்ளியெறியப்பட வேண்டும் என்றும் ஊருக்கு ஊர் அந்தந்தப் பகுதிகளில் சமாதானக் குழுக்கள் அமைக்கப்பட்டு இரு சாராரையும் சேர்ந்த முக்கியமானவர்கள் இடம் பெறச் செய்வதன் மூலம், நல்லெண்ணத்தின் அடிப்படையில் இரண்டு சமூகத்தினர், மதத்தினரிடையே இருக்கிற நட்புறவு, அன்புள்ளம ஆகியவற்றின் அடிப்படையில்தான் அமைதி நிலையை உருவாக்க முடியும் அதற்கு எல்லாவிதமான முயற்சிகளும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பொது வாழ்வில் ஈடுபட்டுள்ளவர்கள் பலரும் அதில் ஈடுபட வேண்டும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. விஜயராகவன் அவர்களும் மற்றவர்களும் எடுத்துத் தெரிவித்ததைப் போல் அந்த மாவட்டத்தைச் சார்ந்த சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும், மற்றவர்களும், மேலவை உறுப்பினர்களும் தங்கள் முழு ஒத்துழைப்பையும் தருவதன் மூலம் இந்த அமைதிக் குழு ஏற்பட முயல வேண்டும். அரசாங்கமும் அதற்கு உறுதுணையாக இருந்து மற்ற பணிகளை செய்ய ஆயத்தமாக இருக்கும். இந்த விவகாரத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் அத்தனையையும் எடுக்க மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஆயத்தமாக இருக்கிறார்கள். இறந்துபட்டவர்களின் குடும்பத்தினருக்கு உதவி அளிப்பது பற்றி அவர்கள் தக்க முடிவு எடுப்பார்கள் என்று எடுத்துச் சொல்லி இப்பிரச்சினை குறித்து அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூறி அமர்கிறேன்.

1982 மார்ச் 31

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறு கிறது.

உறுப்பினர் திரு. எஸ். ரெத்தினராஜ் அவர்கள் பேசும்போது ***என்று குறிப்பிட்டதை நீக்கிவிடும்படி நான் ஆணையிடுகிறேன்

5. அறிவிப்பு

மேலவையிலிருந்து வரப்பெற்ற செய்தி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறை வேற்றப்பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிட மிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

(1) 1982 ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக் கோவை குற்றயியல் நடைமுறை விதிக் கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 3/1982).

(2) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/1982).

6. கவன ஈர்ப்புகள்.

அ. சென்னை முத்தியால்பேட்டை காவல் நிலையம் தாக்கப் பெற்றது.

திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, "சென்னை முத்தியால்பேட்டை காவல் நிலையம் 15-1-1982 அன்று தாக்கப்பட்டது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1982 மார்ச் 3

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவை முன் கீழ்க் கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

14 – 1 – 1982 அன்று மாலை சுமார் 3-15 மணிக்கு, ஆசீர் வாதபுரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவர், சாராயம் குடிப் பதற்காக, பிடாரியார் கோயில் தெருவிலுள்ள சாராயக் கடைக் குச் சென்றார். அப்போது அக்கடையில பாபு என்பவரும் மூர்த்தி என்பவரும் இருந்தனர். அங்கு ஆறுமுகத்திற்கும், பாபு வுக்கும் இடையே வாய்ச் சண்டை ஏற்பட்டது. இது பற்றி ஆசீர்வாதபுர வாசிகளிடையே கூறுவதற்காக ஆறுமுகம் சென்றார் இதன தொடர்பாக, ராஜகுமார் மற்றும் பொன்னுதுரை ஆகி யோர், சுமார் 100 பேரடங்கிய கூட்டத்திற்குத் தலைமை வகித்துச் சென்று, ஆறுமுகத்துடன் ஏன் சண்டையிட்டார் என பாபுவை வினவினர். இந்த வாய்ச் சண்டை வன்முறைக்குத் திரும்பி, அடிதடியில் முடிந்தது. தன்னைப் பிடிக்க முயன்ற ராஜகுமார், பொன்னுதுரை மற்றும் ஆறுமுகம் ஆகியோரை கத்தியால் குத்திய பாபு, தனது சகாவான மூர்த்தியுடன் தப்பி விட்டார். பின்னர் மேற்கூறிய கும்பல் சாராயக் கடைக்குள் நுழைந்து அங்கிருந்த பொருட்களுக்குச் சேதம் விளைவித்ததுடன், சக்திவேலு என்பவருக்கும் காயம் விளைவித்தது. காயமுற்ற ராஜ்குமார், பொன்னுதுரை மற்றும் ஆறுமுகம் ஆகியோர் எண். 3 காவல் நிலையத்தில் புகார் செய்தனர். அவர்கள் சிகிச்சைக்காக ஸ்டான்லி மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டனர். ராஜகுமார் அளித்த புகாரின் மீது ஒரு வழக்கும், சக்திவேலுவின் சகோதரர் ராமு அளித்த புகாரின் மீது ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டன. சக்திவேலுவும் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பப் பட்டார்.

2. ஆசீர்வாதபுரம் பகுதியைச் சேர்ந்த சுமார் 300 பேர் காவல் நிலையத்தின்முன் கூடி, பாபுவையும், மூர்த்தியையும் கைது செய்யுமாறு கோரினர். கூடுதல் போலீசார் விரைந்து வந்து, கூட்டத்தினரைச் சமாதானப்படுத்திய பின் கூட்டத்தினர் கலைந்து சென்றனர்.

3. 15 – 1 – 1982 அன்று மாலை 7-30 மணியளவில் பீட்டர் என்பவர் காவல் நிலையத்திற்கு வந்து, பாபு, ராமு மற்றும் இருவர் ஆகியோர் தனது சகோதரனைக் கத்தியால் குத்திக் காய முண்டாக்கிவிட்டதாகக் கூறியதன் பேரில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. காயமுற்றவர் சிகிச்சைக்காக மருத்துவ

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1982 மார்ச் 3] [டாக்டர் இரா. (நடுஞ்செழியன்]

மனைக்கு அனுப்பப்பட்டார். அன்றே, மாலை 8-30 மணியளவில் ஆசீர்வாதபுரத்தைச் சேர்ந்த டேவிட் என்பவர், பாபு, ராமு, மூர்த்தி, சாந்தகுமார் ஆகியோரால் கத்தியால் குத்தப்பட்டதாகக் கூறியதன் பேரில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு, காயமுற்றவர் ஸ்டான்லி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டார்.

4. மேற்படி சம்பவத்தின் தொடர்பாக, மீண்டும் ஆசீர்வாதபுரத்தைச் சேர்ந்த சுமார் 300 பேர் கூடி, முத்தியால்பேட்டை காவல் நிலையத்தின்முன் வந்து, பாபுவையும் மற்றவர்களையும் கைது செய்யக் கோரினர். அவர்கள் சமாதானப்படுத்தப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டனர். குற்றவாளிகளைக் கைது செய்ய சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

5. 16—1—1982 அன்று காலை திருமதி வனஜா என்பவர், மினர்வா திரையரங்கத்தினருகே தனது கணவர் திரு. மனோகரன், பாபு, மூர்த்தி மற்றும் இருவரால் கத்தியால் குத்தப்பட்டதாக அளித்த புகாரின்படிப்படையில், ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு, காயமுற்றவர் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். அன்றே, ஜெயபால் என்பவர், தான் புறநகர் பேருந்து நிலையத்தில் காலை 9-30 மணியளவில் பாபு, மூர்த்தி ஆகியோரால் கத்தியால் குத்தப்பட்டதாக அளித்த புகாரின் கீழ் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. காயமுற்றவர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார்.

6. மேற்படி சம்பவங்களில், ஆறுமுகம் மற்றும் நீலகண்டன் தவிர, காயமுற்ற மற்ற அனைவரும் உள் நோயாளிகளாகச் சிகிச்சை அளிக்கப்பட்டனர்.

7. மேற்படி வழக்குகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் அனைவருமே கைது செய்யப்பட்டு விட்டனர்.

8. கூட்டத்தினர் காவல் நிலையத்தின் மீது, சோடா புட்டிகள் மற்றும் கற்களால் தாக்கினர் என்று கூறுவது சரி அல்ல.

திரு. துரைமுருகன் : ஒரு சண்டை ஒன்பது சண்டைகளாக வளர்ந்து ஒருவர் குத்த அதைத் தொடர்ந்து எட்டு பேர்கள் குத்தப்படுவது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. மொத்தமாக பார்த்தால் இது சாராயக் கடையில் சாராயம் குடிப்பதிலிருந்து ஆரம்பமாகியிருக்கிறது. ஒருவரை மாற்றி மற்றொருவர் குத்தக் குடிய நிலைமை வந்திருக்கிறது. இவர் மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது என்றும் சொல்கிறார்கள். இவ்வளவு பேர்களைப் பிடித்தி

ருக்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். சாராயம் குடிக்கிறவர்கள் பெர்மிட் வைத்துக்கொண்டுதான் குடிக்கவேண்டும் என்றிருக்கிறது. குத்தியவர் மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது என்றால் எந்தக் குற்றத்தின் அடிப்படையில் அவர்கள் மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது? அட்டம்பட்டு மர்டர் என்பதன் அடிப்படையிலா? அல்லது பர்மிட் இல்லாமல் சாராயம் குடித்தார்கள் என்பதன் அடிப்படையில் வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறதா? எவ்வளவு பேர்கள் பர்மிட் வைத்திருக்கிறார்கள்? ஒட்டுமொத்தமாக எல்லோரும் கைது செய்யப்பட்டார்கள், எல்லோரும் காவலில் வைக்கப்பட்டார்கள், எல்லோரும் விடப்பட்டார்கள் என்றால் எப்படி ஸ்பெஸிபிக்காக என்னென்ன குற்றங்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பாபு என்பவரும் மற்றவர்களும் பல்வேறு வன்முறைச் செயல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதால் அவர்களைப் பொறுத்தவரையில் அந்தந்த காவல் நிலையங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது குற்றவியல் சட்டப்படி பிரிவுகள் போடப்பட்டிருக்கின்றன. அந்தப் பிரிவுகளின் எண்ணிக்கையை வேண்டுமானால் பிறகு பார்த்துச் சொல்லலாம். வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

ஆகவே, இப்படி பயங்கரமான முறையில் ஈடுபட்டதன் காரணமாக, பாபு, மூர்த்தி ஆகிய இருவரும் அவசர சட்டத்தின் கீழ், குண்டர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறார்கள். மற்ற மூவரில், ராமு நிபந்தனை ஜாமீனில் உள்ளார். மற்ற இருவரும், காவலில் உள்ளே வைக்கப்பட்டு, வழக்குகள் தொடரப்பட்டு தொடர்ந்து நடைபெறுகிறது.

திரு. துரைமுருகன்: நான் கேட்பது சிம்பிள் கொஸ்டின் அவர்கள்மீது போடப்பட்ட வழக்குகள், எந்த செக்ஷனிலே போடப்பட்டிருக்கிறது? குறிப்பாக, சாராயக் கடையிலே சாராயம் குடிக்கும் போது இது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அத்தனை பேர்கள் மீதும் பர்மிட் இல்லாமல் குடித்தார்கள் என்று வழக்கு போடப்பட்டுள்ளதா? எத்தனை பேர்கள் பர்மிட் வைத்திருந்தார்கள்? அவர்கள்மீது வேறு ஏதாவது செபரேட் சார்ஜஸ் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலில் குறிப்பிட்டபடி, அவர்கள்மீது என்னென்ன செக்ஷன்கள் கீழ் வழக்கு போடப்பட்டிருக்கின்றது என்ற குறிப்பு என்னிடம் இல்லை. தனியாகச் சொல்கிறேன்.

1982 மார்ச் 3]

(ஆ) கிருட்டிணகிரி அரசு கலைக் கல்லூரி மூடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. க. இரா. சின்னராசு அவர்கள்,

''கிருட்டிணகிரியிலுள்ள அரசு கலைக் கல்லூரி காலவரையின்றி மூடப்பட்டுள்ளது குறித்து.'

ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவர்கள் இருக்கையில் இல்லாததால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான அறிக்கையை அவைமுன் வைக்கக் கோருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

கடந்த 9—2—1982 முதல் அரசினர் கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி காலவரையின்றி மூடப்பட்டன. இதற்கான அடிப்படைக் காரணங்கள்—

1. கடந்த சில மாதங்களில் குறிப்பிட்ட சில கல்லூரி மாணவர்கள் மாணவியரைத் தகாத வார்த்தைகளால் கேலிசெய்து கொண்டு வந்திருக்கிறார்கள். முதல்வரும் ஆசிரியர்களும் அவ்வப்பொழுது அந்தந்த மாணவர்களுக்கு அறிவுரையும் கண்டனமும் தெரிவித்து வந்திருக்கிறார்கள். 29—1—1982, அன்று மூன்று மாணவிகள் ஒரு மாணவர் செய்த தரக்குறைவான செயல் குறித்து முதல்வருக்கு எழுத்து மூலம் மனுக் கொடுத்தனர். அவர்களின் பெற்றோரும் முதல்வரிடம் முறையிட்டனர். அதன் பேரில் அம்மாணவர் அவரது பெற்றோருடன் முதல்வரை 8—2—1983ம் தேதி சந்தித்தார். அம்மாணவரின் சூழ்நிலையின், காரணமாகவும் கல்லூரிக் கல்வியினை முடிப்பதற்கு இன்னும் இருமாதங்களே இருப்பதாலும், அம்மாணவரின் எதிர்காலம் பாதிக்கப்பட வேண்டாம் என்ற நல்லநோக்கத்துடன் அம்மாணவரை கல்லூரியிலிருந்து தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ இன்றுவரை நீக்கப் படாமல் ஆனால் கல்லூரியில் தகாத நிகழ்ச்சிகள் மீண்டும் நடைபெறாமல் இருக்கும்பொருட்டு அவர் கல்லூரிக்கு வரவேண்டாமென அறிவுட்டுத்தப் படுள்ளார். அம்மாணவரும், அன்று பெற்றோரும் இதற்கு உடன்பட்டனர்.

2. 9—2—1982 செவ்வாய்க்கிழமை காலை, வழக்கம்போல் கல்லூரி துவங்கி அமைதியாக நடைபெற்றுக் கொண்டு இருந்தது காலை 10-30 மணி அளவில் கல்லூரி ஒன்னிறிய மாலை மாணவ

தி செ அரங்கநாயகம் [1982 மார்ச் 3

பேரவைத் தலைவரும் அவரது நண்பர்களும் எல்லா வகுப்புகளுக்கும் சென்று மாணவர்களைக் கட்டயமாக திடீரென வெளியேற்றினர். முதல்வருக்கோ, அல்லது எந்தப்பேராசிரியருக்குமோ முன்னறிவிப்பு ஏதும் தராமல் இக்காரியத்தைச் செய்தனர். மாணவர்கள் கூட்டமாகக் கல்லூரியை விட்டுவெளியேறிக் கல்லூரிக்கு வெளியே ஏதோ திட்டங்கள் தீட்டி வந்தனர். மேலும் என்ன காரணத்திற்காக இம்மாதிரி தகாத நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்றும் முதல்வருக்கோ, மற்றவர்கட்கோ, அறிவிக்கப்படவில்லை. ஆகவே, கல்லூரியில் அசம்பாவித நிகழ்சிகள் நடை பறக் கூடுமென எதிர்பார்த்து கல்லூரி காலவரையின்றி மூடப்பபட்டது.

3. 10.2,82 புதன் கிழமை காலை 10-30 மணிக்கு மாணவர் பலருடன் மாணவர் பேரவைத் தலைவர் முதல்வர் அறைக்குள் திடீரென புகுந்து மேலே பத்தி 1.ல் குறிப்பிட்ட மாணவரை ஏன் நீக்கினீர்கள் எனக் கூச்சலிட்டார். நடந்தவற்றை அமைதியாகக் அறியும் மாணவர் ஆவைத்தலைவர் முதல்வரை தரக் கூறைவான வாரத்தைகளால் ஏ.சி. முதல்வர் மீது கல் எறிதல் போன்ற வன்முறைகளில் ஈடுபட்டனர். மாணவர்களின் நோக்கம் ஏன்ன? என்ன குறைபாடுகள் உள்ளன? அவர்களது நியாயமான எதிர்பார்ப்புகள்என்ன என்பதை எழுத்து வடிவில் முதல்வரிடம் இது நாள் வரை தெரியப்படுத்தவில்லை மாணவர் தலைவர்கள் மட்டும் தனியாக வந்து பிரச்சினைகளைப் பேச முன்வரவில்லை. மாறாகக் கும்பலுடன் கல்லூரிக்குள் புகுந்து, சன்னல் கதவுகள், அறிவிப்புப் பலகைபின் கல்லூரிகளில் புகுந்து, சன்னல் கதவுகள், அறிவிப்புப் பலகைகள் போன்றவற்றை உடைத்தார்கள். முதல்வர் அறையில் கதவுகளையும் உடைத்தார்கள். 9—2—1982 அன்று மாலை எத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறக்கூடும் என்ற அய்யப் பாட்டில் கல்லூரி மூடப்பட்டதோ, அவை 10—2—1982ல் நீடிதத்தது நிகழ்ந்து, அய்யப்பாட்டினை உறுதிப்படுத்தின. இந்த அசம்பாவித நிகழ்ச்சிக்குப் பிறகு காவல்துறையின் துனண நாடபட்டு கல்லூரிக் கட்டடங்கள் பாதுகாப்பிற்காக அவர்கடளிம் ஒப்படைகப்பட்டுள்ளன

4. கல்லூரியில் எல்லா நிகழ்ச்சிகளும் மாணவர் தலைவர் கூறுகின்றபடிதான் நடைபெறவேண்டும் என்றும், மாணவத் தலைவரைக் கேட்காமல் தவறு செய்யும் மாணவர்களைத் தண்டிக்கவோ, விசாரிக்கவோ கூடக் கூடாது என்றும், மாணவத் தலைவரும் அவரது சகாக்களும் கூச்சலிடுகின்றன. இத்தகைய நிலையில் கல்லூரித் தலைவரும், மற்ற ஆசிரியர்களும் தங்கள் பணியினைச் செய்ய முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

1982 மார்ச் 3] திசெ அரங்கநாயகம்

(5) இம்மாதிரியான பிரச்சினைக்குரிய சில மாணவர்கள் கல்லூரியில் தொடர்ந்து நீடித்தால் கல்லூரிப் பணிகள் சுமுகமாக நடைபெற முடியாது. பல்கலைக்கழக விதிகளின் படி தேவையான அளவு கல்லூரி வேலைநாட்கள் இல்லாது போய் விட்டால், எல்லா மாணவ, மாணவியரும் இறுதித்தேர்வு எழுததத் தகுதி இழப்பார்கள். இக்கல்லூரியில் பயிலும் பெரும்பான்மையான மாணவர்கள் ஒழுங்காகப்படிக்க விரும்பு கின்றனர். கடந்த ஆண்டுகளில் இக்கல்லூரிகளில் ஆண்டு இறுதித் தேர்வு முடிவுகளைக் கவனிக்கும்பொழுது, மாநிலத்திலே கல்வித்தரத்தில் முதன்மை நிலையில் உள்ள கல்லூரிகளில் இக் கல்லூரியும் ஒன்று எனத்தெரியும். கடந்த மூன்றாண்டு காலமாக ஒழுக்கத்தைப் பேணும் நல்லதொரு கல்லூரி எனப் புகழப்பட்ட கல்லூரியாகும் இது. ஒழுக்கத்திலும், கல்வித்தரத்திலும் இது என்றும் முதன்மைக் கல்லூரியாக இருக்க வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்காது.

6. 15—2—1982 அன்று பெற்றோர் மற்றும் நகரப்பிரமுகர்கள் கல்லூரி முதல்வரைச் சந்தித்து கல்லூரித் திறப்பதற்கு வேண்டிய வழிமுறைகளைப் பற்றி பேசினர். அக்கூட்டத்தில் மாணவர் களைத் தூண்டிவிட்ட குறிப்பிட்ட 5 மாணவர்கள் எழுத்துமூலம ாக மன்னிப்பு கோரவேண்டுமெனவும், வருங்காலத்தில் நல்வழியில் நடப்பதாக உறுதிதர வேண்டும் எனவும் இவ்வருடம் மீதமுள்ள கல்லூரி நாட்களில் எந்தவிதமான மாணவர் மன்றங்கள் துணை மன்றங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகள் இருக்கக்கூடாது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

7. அதன்படி மாணவர் மன்றத்தலைவரும், மற்ற முக்கிய மானவர்களும் எந்தவித நிபந்தனையுமின்றி மன்னிப்புக்கோரிய தால கல்லூரி 22—2—1982 முதல் தொடங்கப்பட்டு தற் பொழுது அமைதியாக நடந்துவருகிறது.

7. வரவு செலவுத் திட்டம்.

1982—83—பொது விவாதம்—தொடர்ச்சி.

*திரு. சி. த. சிதம்பரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982—83ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பட்ஜெட்டைப் பற்றி பேச வேண்டிய ஆளுங் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் பாத யாத்திரையைப் பற்றிப் பேசினார்கள். ஆகவே, பட்ஜெட்டில் ஒன்றுமில்லை என்பதை தெளிவாக எடுத்துக் காட்டினார்கள் என்பதை நான்

1982 மார்ச் 3]

(ஆ) கிருட்டிணகிரி அரசு கலைக் கல்லூரி மூடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. க. இரா. சின்னராசு அவர்கள்,

''கிருட்டிணகிரியிலுள்ள அரசு கலைக் கல்லூரி காலவரையின்றி மூடப்பட்டுள்ளது குறித்து.'

ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவர்கள் இருக்கையில் இல்லாததால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான அறிக்கையை அவைமுன் வைக்கக் கோருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

கடந்த 9—2—1982 முதல் அரசினர் கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி காலவரையின்றி மூடப்பட்டன. இதற்கான அடிப்படைக் காரணங்கள்—

1. கடந்த சில மாதங்களில் குறிப்பிட்ட சில கல்லூரி மாணவர்கள் மாணவியரைத் தகாத வார்த்தைகளால் கேலிசெய்து கொண்டு வந்திருக்கிறார்கள். முதல்வரும் ஆசிரியர்களும் அவ்வப்பொழுது அந்தந்த மாணவர்களுக்கு அறிவுரையும் கண்டனமும் தெரிவித்து வந்திருக்கிறார்கள். 29—1—1982, அன்று மூன்று மாணவிகள் ஒரு மாணவர் செய்த தரக்குறைவான செயல் குறித்து முதல்வருக்கு எழுத்து மூலம் மனுக் கொடுத்தனர். அவர்களின் பெற்றோரும் முதல்வரிடம் முறையிட்டனர். அதன் பேரில் அம்மாணவர் அவரது பெற்றோருடன் முதல்வரை 8—2—1983ம் தேதி சந்தித்தார். அம்மாணவரின் சூழ்நிலையின், காரணமாகவும் கல்லூரிக் கல்வியினை முடிப்பதற்கு இன்னும் இருமாதங்களே இருப்பதாலும், அம்மாணவரின் எதிர்காலம் பாதிக்கப்பட வேண்டாம் என்ற நல்லநோக்கத்துடன் அம்மாணவரை கல்லூரியிலிருந்து தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ இன்றுவரை நீக்கப் படாமல் ஆனால் கல்லூரியில் தகாத நிகழ்ச்சிகள் மீண்டும் நடைபெறாமல் இருக்கும்பொருட்டு அவர் கல்லூரிக்கு வரவேண்டாமென அறிவுட்டுத்தப் படடுள்ளார். அம்மாணவரும், அன்று பெற்றோரும் இதற்கு உடன்பட்டனர்.

2. 9—2—1982 செவ்வாய்க்கிழமை காலை, வழக்கம்போல் கல்லூரி துவங்கி அமைதியாக நடைபெற்றுக் கொண்டு இருந்தது காலை 10-30 மணி அளவில் கல்லூரி ஒன்னிறிய மாலை மாணவ

திரு செ அரங்கநாயகம் [1982 மார்ச் 3

பேரவைத் தலைவரும் அவரது நண்பர்களும் எல்லா வகுப்புகளுக்கும் சென்று மாணவர்களைக் கட்டயமாக திடீரென வெளியேற்றினர். முதல்வருக்கோ, அல்லது எந்தப்பேராசிரியருக்குமோ முன்னறிவிப்பு ஏதும் தராமல் இக்காரியத்தை செய்தனர். மாணவர்கள் கூட்டமாகக் கல்லூரியை விட்டுவெளியேறிக் கல்லூரிக்கு வெளியே ஏதோ திட்டங்கள் தீட்டி வந்தனர். மேலும் என்ன காரணத்திற்காக இம்மாதிரி தகாத நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்றும் முதல்வருக்கோ, மற்றவர்கட்கோ, அறிவிக்கப்படவில்லை. ஆகவே, கல்லூரியில் அசம்பாவித நிகழ்சிகள் நடை பறக் கூடுமென எதிர்பார்த்து கல்லூரி காலவரையின்றி மூடப்பட்டது.

3. 10.2,82 புதன் கிழமை காலை 10-30 மணிக்கு மாணவர் பலருடன் மாணவர் பேரவைத் தலைவர் முதல்வர் அறைக்குள் திடீரென புகுந்து மேலே பத்தி 1.ல் குறிப்பிட்ட மாணவரை ஏன் நீக்கினீர்கள் எனக் கூச்சலிட்டார். நடந்தவற்றை அமைதியாகக் அறியும் மாணவர் ஆவைத்தலைவர் முதல் வரை தரக் கூறைவான வாரத்தைகளால் ஏ.சி. முதல்வர் மீது கல் எறிதல் போன்ற வன்முறைகளில் ஈடுபட்டனர். மாணவர்களின் நோக்கம் என்ன? என்ன குறைபாடுகள் உள்ளன? அவர்களது நியாயமான எதிர்பார்ப்புகள்என்ன என்பதை எழுத்து வடிவில் முதல்வரிடம் இது நாள் வரை தெரியப்படுத்தவில்லை மாணவர் தலைவர்கள் மட்டும் தனியாக வந்து பிரச்சினைகளைப் பேச முன்வரவில்லை. மாறாகக் கும்பலுடன் கல்லூரிக்குள் புகுந்து, சன்னல் கதவுகள், அறிவிப்புப் பலகைபின் கல்லூரிகளில் புகுந்து, சன்னல் கதவுகள், அறிவிப்புப் பலகைகள் போன்றவற்றை உடைத்தார்கள். முதல்வர் அறையில் கதவுகளையும் உடைத்தார்கள். 9—2—1982 அன்று மாலை எத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறக்கூடும் என்ற அய்யப் பாட்டில் கல்லூரி மூடப்பட்டதோ, அவை 10—2—1982ல் நீடிதத்தது நிகழ்ந்து, அய்யப்பாட்டினை உறுதிப்படுத்தின. இந்த அசம்பாவித நிகழ்ச்சிக்குப் பிறகு காவல்துறையின் துனண நாடபட்டு கல்லூரிக் கட்டடங்கள் பாதுகாப்பிற்காக அவர்கடளிம் ஒப்படைகப்பட்டுள்ளன

4. கல்லூரியில் எல்லா நிகழ்ச்சிகளும் மாணவர் தலைவர் கூறுகின்றபடிதான் நடைபெறவேண்டும் என்றும், மாணவத் தலைவரைக் கேட்காமல் தவறு செய்யும் மாணவர்களைத் தண்டிக்கவோ, விசாரிக்கவோ கூடக் கூடாது என்றும், மாணவத் தலைவரும் அவரது சகாக்களும் கூச்சலிடுகின்றன. இத்தகைய நிலையில் கல்லூரித் தலைவரும், மற்ற ஆசிரியர்களும் தங்கள் பணியினைச் செய்ய முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

1982 மார்ச் 3] தி செ அரங்கநாயகம்

(5) இம்மாதிரியான பிரச்சினைக்குரிய சில மாணவர்கள் கல்லூரியில் தொடர்ந்து நீடித்தால் கல்லூரிப் பணிகள் சுமுகமாக நடைபெற முடியாது. பல்கலைக்கழக விதிகளின் படி தேவையான அளவு கல்லூரி வேலைநாட்கள் இல்லாது போய் விட்டால், எல்லா மாணவ, மாணவியரும் இறுதித்தேர்வு எழுதத் தகுதி இழப்பார்கள். இக்கல்லூரியில் பயிலும் பெரும்பான்மையான மாணவர்கள் ஒழுங்காகப்படிக்க விரும்புகின்றனர். கடந்த ஆண்டுகளில் இக்கல்லூரிகளில் ஆண்டு இறுதித் தேர்வு முடிவுகளைக் கவனிக்கும்பொழுது, மாநிலத்திலே கல்வித்தரத்தில் முதன்மை நிலையில் உள்ள கல்லூரிகளில் இக்கல்லூரியும் ஒன்று எனத்தெரியும். கடந்த மூன்றாண்டு காலமாக ஒழுக்கத்தைப் பேணும் நல்லதொரு கல்லூரி எனப் புகழப்பட்ட கல்லூரியாகும் இது. ஒழுக்கத்திலும், கல்வித்தரத்திலும் இது என்றும் முதன்மைக் கல்லூரியாக இருக்க வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்காது.

6. 15—2—1982 அன்று பெற்றோர் மற்றும் நகரப்பிரமுகர்கள் கல்லூரி முதல்வரைச் சந்தித்து கல்லூரித் திறப்பதற்கு வேண்டிய வழிமுறைகளைப் பற்றி பேசினர். அக்கூட்டத்தில் மாணவர்களைத் தூண்டிவிட்ட குறிப்பிட்ட 5 மாணவர்கள் எழுத்துமூலமாக மன்னிப்பு கோரவேண்டுமெனவும், வருங்காலத்தில் நல்வழியில் நடப்பதாக உறுதிதர வேண்டும் எனவும் இவ்வருடம் மீதமுள்ள கல்லூரி நாட்களில் எந்தவிதமான மாணவர் மன்றங்கள் துணை மன்றங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகள் இருக்கக்கூடாது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

7. அதன்படி மாணவர் மன்றத்தலைவரும், மற்ற முக்கிய மாணவர்களும் எந்தவித நிபந்தனையுமின்றி மன்னிப்புக்கோரிய தால கல்லூரி 22—2—1982 முதல் தொடங்கப்பட்டு தற்பொழுது அமைதியாக நடந்துவருகிறது.

சத்யமேவ ஜயதே வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

7. வரவு செலவுத் திட்டம்.

1982—83—பொது விவாதம்—தொடர்ச்சி.

*திரு. சி. த. சிதம்பரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982—83ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பட்ஜெட்டைப் பற்றி பேச வேண்டிய ஆளுங் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் பாத யாத்திரையைப் பற்றிப் பேசினார்கள். ஆகவே, பட்ஜெட்டில் ஒன்றுமில்லை என்பதை தெளிவாக எடுத்துக் காட்டினார்கள் என்பதை நான்

திரு சி த சிதம்பரம் [1982 மார்ச் 3

முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு ஆண்டுக்கு பட்ஜெட் போடுகிறபோது, அந்த ஆண்டிலே போடப் பட்ட திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்பது மரபு. ஆனால், கடந்த ஆண்டு பட்ஜெட்டிலே அறிவிக்கப்பட்ட பல திட்டங்கள் இன்னும் நிறைவேற்றப்படாமல், செயல்படுத்தப் படாமல் இருப்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்பு கிறேன்.

1981-82ஆம் பட்ஜெட்டிலே, என்னுடைய தொகுதியில் கொத்தமங்கலம் என்னுமிடத்தில் மருத்துவமனை ஒன்று கட்டு வதற்காக இரண்டு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. அப்படி ஒதுக்கப்பட்ட இந்த இரண்டு இலட்சம் ரூபாய் செலவழிக்கப்படவில்லை. அங்கே இதுவரை மருத்துவமனை திறக்கப்படவில்லை. அதேபோல், சென்ற ஆண்டு காரைக்குடி கொப்புடையநாயகி அம்மன் கோவில் திருமண மண்டபம் கட்டுவதற்கு பணம் ஒதுக்கப்பட்டு, அது இன்னும் ஆரம்பிக்கப் படாமல் இருக்கிறது. ஆகவே, பட்ஜெட்டிலே போடப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, கவர்னர் அவர்கள் உரையிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் அளித்த உறுதிமொழியை நிறைவேற்றும் விதத்தில், காரைக்குடியில் பல்கலைக் கழகம் அமைக்கப்படும் என்று அறிவிக்சப்பட்டது. இந்தத் திட்டமும் பட்ஜெட்டில் அறிவிக்கப்படவில்லை. ஏற்கனவே கவர்னர் உரையிலே அறிவிக் கப்பட்ட திட்டமான காரைக்குடியில் பல்கலைக் கழகம் அமைப் பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், காவிரியில் மழைக் காலத் தில் வெள்ளம் ஏற்படுகின்ற நேரத்தில் தண்ணீர் வீணாவதை புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு திருப்பி விடு வதுபற்றிய அறிவிப்பு, இந்த பட்ஜெட்டிலே இடம் பெறவில்லை. இந்த திட்டத்தை நிறைவேற்றி, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு பாசன வசதியை ஏற்படுத்தித் தரும்படி நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதேபோல். சென்னை நகருக்கு கிருஷ்ணா நதியிலிருந்து குடிநீரும் கட்டளைக் கால்வாயிலிருந்து குடிநீரும் கொண்டு வரப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், அந்த அறிவிப்பு இந்த நிதி நிலை அறிக்கையிலே இடம் பெறவில்லை. அதற்கான நிதி ஒதுக்கப்பட்டு, அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதற்கான அறிகுறி தெரியவில்லை என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே வீடு கட்டும் திட்டத்தைப் பற்றி பல்வேறு வகையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே காவல் துறையினருக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பது பற்றி அறிவித்திருக்கிறார்கள்.

1982 மார்ச் 3] [திரு. சி. த. சிதம்பரம்]

அதேபோல் பத்திரிகையாளர்களுக்கும் வீடுகள் மற்றும் மருத்துவ வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சுட்டி காட்ட விரும்புகிறேன்.

மக்களுக்கு மலிவு விலையில் பொருள்கள் வழங்குவதற்கு மாவட்ட அளவில் சங்கங்கள் அமைக்கப்படுவதுபற்றிச் சொன்னார்கள். அதற்கு நுகர் பொருள் வாணிபக் கழகங்கள் அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவைகள் நல்லமுறையில் செயல்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உதாரணமாக காரைக்குடியில் இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவுச் சங்கம் உள்ளது. அந்த சங்கத்துக்கு பொருள்கள் வழங்கப்பட்டு, அங்கே அதற்கான கிளைச் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்த கிளைச் சங்கங்களிலே நிரந்தரமான பணியாளர்கள் அமர்த்தப் படவில்லை. ஒரு கான்ட்ராக்ட் முறையிலே பொருள்களை விநியோகிக்கிறார்கள். இது கூட்டுறவுத் துறைக்கே ஒரு மாசு கற்பிப்பதைப் போலுள்ளது. அந்தத் திட்டத்திற்கே மாறுபட்ட கருத்தாக இருக்கிறது' என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் அதேபோல் ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு கடை என்றும், 500 மக்களுக்கு ஒரு கடை என்றும் சொல்லப்படுகிறது. ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு கடையோ, 500 மக்களுக்கு ஒரு கடையோ திறக்கப்படவில்லை. உறுதிமொழியை காப்பாற்றுகிற வகையிலே 500 மக்களுக்கு ஒரு கடை என்ற வகையிலே திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

உணவு உற்பத்தியிலே நாட்டம் செலுத்துகிறோம் என்று அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் உறுதி கொடுத்த அளவிற்கு பல்வேறு வகையில் அந்த அறிவிப்பு மாறுபட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரைக்குடியிலே பாண்டியன் போக்குவரத்துக் கழகம் யூனிட் இரண்டிற்கு அலுவலகக் கட்டிடத்திற்கு மழை பெய்தாலும், பெய்யாவிட்டாலும், ஆண்டு முழுவதும் நன்றாக விளையக்கூடிய நிலத்தை எடுத்திருக்கிறார்கள். இது உணவு உற்பத்தியை பெருக்குகிற திட்டமா அல்லது உணவு உற்பத்தியில் இந்த அரசு அக்கறை காட்டவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறதாக இல்லையா என்பதை தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கண்டரமாணிக்கம் என்ற ஊரில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஒன்று இருக்கிறது. இரண்டாண்டுகளுக்கு மேலாக அந்த பள்ளியில் பெண்கள் கூரையில்லாமல்

மரத்தடியில் கல்வி பயின்று கொண்டிருக்கிறார்கள். கல்விக்காக எவ்வளவோ செலவழிக்கிறோம் என்று சொல்லக் கூடிய அரசாங்கம் பெண்கள் மரத்தடியில் கல்வி பயில்கிற நிலைமையை ஏற்படுத்திவிட்டு, அவர்களுக்கு கூரை போட்டுக் கொடுக்காமல் இருக்கிறபோது உண்மையிலேயே எங்களுக்கு சந்தேகம் தான் ஏற்படுகிறது. ஆகவே அந்த பள்ளியில் பெண்கள் நல்ல நிலைமையில் கல்வி கற்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோல ஓசிறுவயல், அரியக் குடி அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும் போதிய இடம் இல்லாமல் அங்கே இருக்க கூடிய மாணவ, மாணவியர்கள் கஷ்டப்படு கிறார்கள் இந்த நிலைமையை போக்க கூடுதல் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் போக்குவரத்துக்களை நாட்டுடைமையாக்கி அரசு போக்குவரத்துக் கழகங்களாக ஆக்கிய பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேரும். ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மின்சாரத்தை, காகித ஆலையை சர்க்கரை ஆலையை தனியார் துறைக்கு கொடுக்க திட்டம் தீட்டியுள்ளது. இதிலேயிருந்து யார் முற்போக்கு திட்டங்களை அமல்படுத்தியது யார் தனியார்களுக்கு ஆதரவாக இருந்தது என்பது நன்றாகத் தெரியும்.

சிவகெங்கைக்கு அருகிலே சர்க்கரை ஆலை ஒன்று கூட்டுறவு துறையிலே நிறுவ எல்லா வகையான முயற்சிகளும் மேற் கொள்ளப்பட்டன. இப்போது கேட்டால் அதுபோல் இல்லை என்று சொல்கிறார்கள். சர்க்கரை ஆலை துவக்கும் திட்டம் இந்த அறிவிப்பில் இல்லை. ஆகவே சிவகெங்கை பகுதியிலே தொடங்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட இந்த சர்க்கரை ஆலையை தொடங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம் காவல்துறையை சீராக்கும்போது நிர்வாகத்தை இரண்டாகப் பிரித்து நிர்வாகம் அங்கே அமைய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வேண்டிவிரும்பி கேட்டுக் கொள்கிறேன். சுகாதார நிலையங்களிலும், மருத்துவ நிலையங்களிலும் பாம்பு கடிக்கு மருந்து கொடுக்கப் போவதாக இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல வெறிநாய் கடிக்கு எந்த இடத்திலேயும், நகரங் களில் கூட மருந்து கிடைப்பதில்லை. ஆகவே வெறிநாய் கடித்து விட்டால் அதற்கு வேண்டிய ஊசி மருந்து போன்றவை உடனடியாக கிடைக்கக்கூடிய அளவிற்கு, கிராமத்திலே இருக்கக் கூடிய மருந்தகமாக இருந்தாலும், நகரப் பஞ்சாயத்துக்களிலே இருக்கக்கூடிய மருந்தகமாக இருந்தாலும் எல்லா இடங்களிலும் சரியாக கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பட்ஜெட்டைப் பற்றி பேசுவதை விட்டு எங்களுடைய தலைவர் நெடிய பயணத்தைப் பற்றி பேசினார்கள். அந்த நெடியப் பயணத்தில் கூட்டமில்லை என்றும், கருத்துக்களைத் தெரிவித்தார்கள். நெடிய பயணம் எப்படி அமைந்தது, வெற்றியாக இருந்ததா. இல்லையா என்பது 24ஆம் தேதி திருமங்கலத்திலேயும் தூத்துக்குடியிலும், திருச்செந்தூரிலும் இன்னும் சொல்லப் போனால் எம்.எல்.ஏக்களுக்கு 5 பஸ்கள் ஒன்றியச் செயலாளராக இருப்பவர்களுக்கு 5 லாரிகள் என்று வைத்து மக்களை திருச்செந்தூரிலே கூட்டி எங்களுடைய பயணத்திற்கு மாற்று வழியை தேடிக் கொடுத்ததிலிருந்தே பயணம் வெற்றியாக அமைந்திருக்கிறது என்பதை நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். எங்களைப் பொறுத்தவரையில் இந்த பயணம் நாட்டு மக்களுக்கு உண்மையை தெரிவிப்பதற்காக மேற்கொண்ட பயணம்.

இந்த அரசாங்கத்தை மாற்றுவதற்காக நாங்கள் எடுக்கிற முயற்சியில் முதல் கட்டப் பயணம் என்று கூறி இந்த பட்ஜெட் மின்சாரக் கட்டணத்தை கூடுதலாக்கும் பட்ஜெட், இந்த பட்ஜெட் ஏழை நெசவாளிகளைப் பாதிக்கும் பட்ஜெட், இந்த பட்ஜெட் பேருந்துக் கட்டணத்தை உயர்த்தும் பட்ஜெட், இந்த பட்ஜெட் பலமுறை விற்பனை வரியாக பல பொருட்களுக்கு விதிப்பதால் பொருட்களின் விலைகளை உயர்த்தும் பட்ஜெட் என்று கூறி முடிக்கிறேன், வணக்கம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை.)

திரு. இ. கணேசன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர், தமிழக முதல்வர், நாலரைக்கோடி தமிழ்ச் சமுதாயத்தின் தள நாயகர் அவர்கள் தலைமையில் அமைந்திருக்கும் இந்த அமைச்சரவையின் சார்பில் இங்கே சமர்பிக்கப்பட்டிருக்கின்ற வரவு-செலவுத் திட்டம் வரவேற்புக்குரியது. இந்த வரவு-செலவுத் திட்டத்தை நான் நன்றாகப் படித்துப் பார்த்த நேரத்தில் இந்த வரவு-செலவுத் திட்டம் நம்முடைய நடமாடும் பல்கலைக் கழகம் நாவலர், நிதியமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதும் கொண்டாடக்கூடிய திட்டம், ஏழை எளிய மக்கள் வரவேற்கக்கூடிய திட்டமாக அமைந்திருப்பதைக் கண்டு நான் பெருமைப்படுகிறேன். இங்கே பேசிய நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர்கள், தி.மு.க. நண்பர்களும், காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் கட்சிக் கட்டுப்பாட்டின் காரணமாக இல்லாத குறைபாடுகளைத் தேடிக் கண்டுபிடித்து மெத்த சிரமப்பட்டு இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றிக் குறை சொல்லிவருகிறார்கள். ஆனால் நாட்டிலே இதயம் உள்ளவர்கள், நல்லவர்கள்,

நாணயம் மிக்கவர்கள் எல்லா ஏழை எளியவர்களுடைய வாழ்வுக்காகக் கொண்டுவந்திருகின்ற இந்த வரவு-செலவுத் திட்டத்தை நான் பாராட்டுகிறேன். எங்களுடைய பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள் ஏழை எளியவர்களுக்காக 100 கோடி ரூபாய் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் அவர்களை மனமார உளமாரப் பாராட்டுகிறேன் என்பதைக் காட்டிலும் திராவிட இனமே பாராட்டுப்படுகிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட இனத்தில் பழுத்த பழமாக திராவிடக் காவலராக இருக்கின்ற கி.ஆ.பெ. விஸ்வநாதன் அவர்கள் நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் வீட்டுத் திருமணத்திற்கு வந்திருந்தபோது அவர்களைப் பேசும்படி அழைத்த நேரத்தில் அவர்கள் சொன்னார்கள், ஏழைகளுக்கு வாழ்வுஅளிக்கக்கூடிய திட்டத்தை நாட்டிற்கு ஏற்படுத்திக் கொடுத்த பொன்மனச் செம்மலினுடைய திருக்கரங்களால் இந்தத் திருமணம் நடத்தப்படுவதை நான் மனமார உளமாரப் பாராட்டுகிறேன் என்று மார்தட்டிச் சொன்னார்கள். வெண்தாடி வேந்தர், பகுத்தறிவு பகலவன் ஈ.வேரா. அவர்களுடன் கூட இருந்தவர்கள் கி.ஆ.பே. அவர்கள், பேரறிஞர் அண்ணவோடு தோளோடு தோள் நின்று தமிழுக்காகவும் தமிழ்ச் சமுதாயத்திற்காகவும் தமிழ்ப் பண்பாட்டிற்காகவும் திராவிட இனத்திற்காகவும் எப்படி பாடுபட்டார்கள் என்பது நமக்கு எல்லாம் தெரியும். இந்தத் திட்டத்தை மேலவைத் தலைவர் திரு ம.பொ.சி. அவர்களும் பாராட்டியிருக்கிறார்கள். இந்த நாட்டிலே உள்ள நல்லவர்கள் அத்தனை பேர்களும் இந்தத் திட்டத்தைப் பாராட்டி வருகிறார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுகிறேன். இந்த நல்ல திட்டத்தைக் கொண்டு வந்த புரட்சித் தலைவர் அவர்களை நான் மனமார உளமாரப் பாராட்டுகிறேன். எங்களுடைய புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தச் சபையில் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்ட பிறகு இரண்டு நாட்களுக்கு முன்பாக சென்னையிலே நடந்த ஒரு பொதுக்கூட்டத்திலே பேசும்பொழுது பேசியதை எண்ணிப் பார்க்குமாறு நான் தி.மு.க. நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திலே உள்ள சென்னையிலே முதல்வர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள், நான் ஏழ்மையை உணர்ந்தவன், பசியினுடைய கொடுமையைத் தெரிந்தவன் என்று ஆணித்தரமாக எடுத்துச் சொன்னார்கள். அப்படிச் சொல்லிவிட்டு அதற்கு விளக்கமும் தந்தார்கள். நான் 3 வயதுக் குழந்தையாக இருக்கும் போது நானும் என்னுடைய அண்ணனும் ஈன்றெடுத்த சத்தியத்தாயும் மூன்று நாட்கள் பட்டினியாகக் கிடந்தோம்.

(முற்பகல் 11-30)

அப்படிப் பட்டினியாகக் கிடப்பதைக் கண்டு எங்கள் வீட்டிற்குப் பக்கத்தில் இருக்கின்ற ஒரு நல்ல தாய் இதயம் உள்ள தாய், எங்களை வாழ வைக்க, நாங்கள் பசியால் சாகாமல்

198 மார்ச் 3] [திரு. இ. கணேசன்]

இருக்க அரிசி கொண்டு வந்து கொடுத்தார்கள். அந்த அரிசியை எங்கள் தாய் வாங்க மறுத்து விட்டார்கள். அரிசிக் கொடுத்த அந்தத் தாய் மீண்டும் கேட்கிறார்கள், இந்தப் பச்சிளம் பாத கர்கள் ஏன் பசியால் வாட வேண்டும், அவர்களை பசியால் சாகவிடுவதற்காகவா அவர்களை நீஈன்றாய் என்று கேட்கிறார்கள் அப்படிக் கேட்ட பிறகு இந்தச் சத்தாய்தியத் அந்த அரிசியை வாங்கி அந்தப் பச்சிளங்குழந்தைகளுக்கு கஞ்சி வைத்து கொடுக்கிறார்கள். அந்தக் கஞ்சியைக் குடித்து உயிர் வாழ்ந் தேன் என்று தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒரு முதலமைச்சர் எடுத் துச் சொல்லியிருக்கிறார்கள் என்றால் நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், தலைவரவர்களே, இந்தக் காலத்திலே உலகத் திலே நம்முடைய புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், எம்.ஜி.ஆர். அவர்களைத் தவிர வேறு எந்த முதலமைச்சராவது இது போலச் சொல்லியிருக்கிறார்களா என்பதை நீங்கள் எண் ணிப் பார்க்க வேண்டுமாய்ப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சற்று வசதி வந்துவிட்டால் என்ன சொல்கிறார்கள் என்பதை நாட்டு நடப்பிலே நாம் பார்த்திருக்கிறோம். திடீரென்று வசதி வந்து விட்டால் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள், நாங்களெல் லாம் தங்கத் தாம்பாளத்திலேதான் சாப்பிட்டோம் தங்கக் கிண் ணத்தில்தான் பால் குடித்தோம் என்று பெருமையடித்துக் கொள்கின்ற இந்தக் காலத்தில் பழைய நிகழ்ச்சியை மறக்காமல் அவர்கள்நினைத்துப் பார்த்து இந்த நாட்டிற்குச் சொல்கிறார்கள். என்றால் இதிலிருந்து அந்தப் பொன்மனச் செம்மலின் உள்ளம் நமக்கு நன்றாகத் தெரிகிறது அல்லவா ?

புரட்சித் தலைவர் யார் ? கடந்த 30,35 ஆண்டுக் காலமாக அவர் தன்னுடைய உழைப்பால் நாட்டு மக்களுக்கு செய்த சேவைகள் என்ன ? இதைப்பற்றிச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள் 30, 35 ஆண்டுக் காலமாக தான் உழைத்த சம்பாத்தியத்தை வைத்துக்கொண்டு அவர்கள் எவ்வளவு வசதிகளோடு வாழ்ந் தார்கள். ஏன், இராஜாவாகவே வாழ்ந்து காட்டியவர் நம் முடைய முதலமைச்சர். அவர்கள் பசியினுடைய கொடுமையைப் பற்றி எவ்வளவு அழுத்தத்திருத்தமாக எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள் என்பதை நாம் தயவுகூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் தலைவர் மீண்டும் மீண்டும் சொல்கிறார்கள். ஏழைக்கு உணவு அளிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். நான், அம்மா எனக்கு உணவு வேண்டுமென்று சொல்லும் நேரத்திலே என்னுடைய தாய் கண்ணீர் வடித்ததைப்போல இந்த நாட்டிலே இருக்கின்ற நான்கரை கோடி ஏழைத் தாய்மார்கள் கண்ணீர் வடிக்கக் கூடாது. பிஞ்சு உள்ளங்கள் பசியால் வாடக் கூடாது ; அந்த வாட்டத்தைக் போக்க வேண்டும் ; அதற்காகத்

தான் ஏழைக் குழந்தைகளுக்கு 100 கோடி மதிப்பீட்டில் இலவச உணவு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தோம் என்று சொன்னார்கள். அதையும் எப்படிக் கொண்டு வந்தேன் என்று சொன்னார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தத் திட்டம் என்னுடைய மனத்திலே நீண்ட நெடுங்காலமாக உள்ளே இருந்தது ; இதை நல்ல முறையில் செயல்படுத்த முடியுமா என்று நான்காண்டுக் காலமாக எண்ணிக்கொண்டிருந்தேன்; அதற்காகத் தான் தன்னிறைவுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தேன், என்று சொன்னார்கள். அதை நாட்டிலே நல்லமுறையிலே, சிறப்பான முறையிலே செயல்படுமுறைக்குக் கொண்டு வந்து, திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள்மட்டுமல்ல அத்தனை நல்லவர்களும், நாட்டிலே இருக்கக்கூடிய அத்தனை பெரியவர்களும் தன்னிறைவுத் திட்டத்தினால் ஏற்படக்கூடிய பலன்களை உணர்ந்து பாராட்டினார்கள் ஒருசிலரைத் தவிர, இவ்வாறு அந்தத் தன்னிறைவுத் திட்டம் வெற்றி அடைந்ததை எண்ணித்தான், ஏழைகளுக்கு உணவு அளிக்கும் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தோம். இதைத்தான் பேரறிஞர் பெருந்தகை, அறிவுலக மேதை, அறிவுக் கடல், அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொன்னார்கள், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன் என்று. அந்த ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணக்கூடிய என் முதலைச்சரவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து இந்த அவையிலே அறிவித்ததை எண்ணும் பொழுது நாட்டிலே இருக்கின்ற நல்லெண்ணம் படைத்தவர்கள் அத்தனைபேரும், நல்ல இதயம் கொண்டவர்கள் அத்தனை பேரும் பாராட்டுகிறார்கள். அந்த அண்ணா அவர்கள், இந்த அவையிலே திருவுருவப்படமாக வீற்றிருக்கின்ற அண்ணா அவர்கள் சொன்னார்கள், மாற்றான் தோட்டத்து மல்லிக்கும் மணம் உண்டு என்று. இது மாற்றான் தோட்டத்து மல்லிகையாக அவர்களுக்கு இருந்தாலும் நல்ல மல்லிகை, வாசனை மல்லிகை, இந்த மல்லிகைக்கு மணம் உண்டு, இந்த மல்லிகைக்குப் பெருமை உண்டு, ஆனால் ஏன் இதை அவர்கள் பாராட்டவில்லை என்று எனக்குப்புரியவில்லை. இந்தத் திட்டத்தில் தவறு நடப்பதற்கு நிச்சயமாக இடம் இருக்காது என்பதை நாங்கள் ஆணித்தரமாக எடுத்துச் சொல்கிறோம். இங்கே இருக்கின்ற ஒருசில நண்பர்கள் சிரிக்கும்பொழுது எனக்கு என்ன தெரிகிறது என்றால், நாங்கள் அந்தத் திட்டத்தைப் பராட்டத்தான் எண்ணியிருந்தோம்; ஆனால் எங்கள் கட்சிக் கட்டுப்பாடு எங்களைப் பாராட்டவிடாமல் செய்கிறதே, ஐயோ நாங்கள் என்ன செய்வோம் என்று இருப்பதாகக் கருதி அந்த நல்ல இதயம் படைத்தவர்களுக்குச் சொல்கிறேன், நீங்கள் இந்த அவையிலே பாராட்டவிட்டாலும்கூடப் பரவாயில்லை, உங்கள் உள்ளத்திலே நினைக்கின்ற நினைப்பிற்காக நான் உங்களை வணங்குகிறேன் பாராட்டுகிறேன். பொன்மனச் செம்மல் அவர்கள் இந்த திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதைப் பற்றிச் சொல்லும் பொழுது ஒருசிலர் என்மீது பொறாமையாகப் பார்க்கிறார்கள் என்று சொல்லவில்லை.

1982 மார்ச் 3] [திரு. இ. கனேசன்]

அவர்கள் எண்ணுகிறார்கள் நாம் 7 ஆண்டுக் காலமாக இந்த அரசை ஆண்டோமே அந்த 7 ஆண்டுக் காலத்தில் இந்தத் திட்டத்தைக் கொண்டு வரத் தவறி விட்டோமே என்று எண்ணிப் பார்க்கிறார்கள். நான் அவர்களுக்குப் பணிவோடு சொல்லிக் கொள்கிறேன். நம்முடைய பேரறிஞர் பெருந்தகை, அறிவுலக மேதை, அறிவுக் கடல், அறிஞர் அண்ணாவின் இதயத்திலே இருந்தவர் எங்களுடைய புரட்சித் தலைவர். அவருடைய வழியிலே நடப்பவர். அவருடைய எண்ணப்படி இருக்கக்கூடியவர், அந்தப் புரட்சித் தலைவர் கொண்டு வந்தது நம்முடைய திராவிட மரபை எண்ணிப் பெருமை அடையக் கூடியதாக இருக்கிறது.

இங்கே பேசியவர்கள் அத்தனை பேரும் எனக்கு முன்பு பேசிய திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் மிக அழகாகச் சொன்னார்கள். முன்னாள் முதல்வரும் இந்நாள் எதிர்க்கட்சித் தலைவரும் நாங்கள் மதிக்கக் கூடியவருமான டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் திருச்செந்தூருக்கு நெடும் பயணம் செய்தார்கள். அந்தத் திருச்செந்தூர் நெடும் பயணத்தைப்பற்றி எல்லா நண்பர்களும் பேசுகிறார்கள் என்று எடுத்துச்சொன்னார்கள். நான் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அன்போடு கேட்டுக் கொள்கிறேன், நீங்கள் திருச்செந்தூருக்குச் சென்றது உண்மைதான் கூட்டம் கூட்டமாகச் சென்றது உண்மைதான். அலை அலையாகச் சென்றது உண்மைதான். அதை இல்லை என்று மட்டும் நான் சொல்லவில்லை. அந்தப் பயணத்தை நினைக்கும்போது எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் ஒரு பாட்டைப் பாடினார். அந்தப் பாட்டினுடைய தலைப்பு ஏன் ஏசுநாதர் இங்கு வரவில்லை என்பதாகும். அந்தப் பாட்டினுடைய கருத்து இதுதான்; ஒரு மாதா கோயிலிலே இருக்கிற பாதிரியார் கோயிலுக்கு வரக்கூடியவர்களைப் பார்த்து, நீங்கள் அழகான ஆடை ஆபரணங்களை அணிந்து வரக்கூடாது மற்றவர்களுடைய எண்ணங்களை திசை திருப்பக்கூடிய வகையிலே நீங்கள் ஆடை ஆபரணங்களை அணிந்து வருவதை நான் ஒத்துக்கொள்ள மாட்டேன் என்று அவர் தன்னுடைய பிரார்த்தனையின்போது கூறுகிறார்கள். அப்பொழுது அங்கே கூடியிருந்த பாதிரியாருடைய பேச்சைக் கேட்டுச் சென்றவர்கள் மறுநாள் நல்ல சுகாதாரமான, குறைந்த ஆபரணங்களை அணிந்து வருவார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தார் அந்தப் பாதிரியார். ஆனால் மறுநாள் அந்தக் கோயிலிலே எந்த விதமானக் கூட்டமும் வரவில்லை. அதைப் பற்றி அந்தப் பாதிரியார் எண்ணினார்! ஏன் இந்தக் கூட்டங்கள் வரவில்லை! நாம் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லையே என்று எண்ணி மனம் நொந்து அவர் வேறு ஒரு கருத்தினை எடுத்துச் சொன்னார். நீங்கள் இந்தக் கோயிலுக்கு வரக் கூடியவர்கள், எப்படி வேண்டுமானாலும் ஆடைஅணிந்து கொள்ளலாம் ஆபரணங்கள் அணிந்துகொள்ளலாம். தங்கநகைகளை அணிந்து கொள்

ளலாம். இங்கே முகம் பார்க்க கண்ணாடிகூட வைக்கப்பட்டிருக்கிறது. சிகை அலங்காரமும் செய்து கொள்ளலாம் என்று அந்த பாதிரியார் மறுநாள் அறிக்கை விடுகிறார். அதைக் கண்ட மக்கள் கூட்டம் வெள்ளம்போல் அந்தக் கோயிலுக்குச் செல்கிறார்கள். அவர் தன்னுடைய பிரார்த்தனையை நடத்துகிறார். அதைத்தான் நான் எண்ணிப் பார்க்கிறேன் என் அருமை நண்பர்களே, அன்று பாரதிதாசன் இந்தப் பாட்டைப் பாடினார். அந்த மாதா கோயிலிலே இப்படி இப்படித்தான் நடக்க வேண்டும் வரவேண்டுமென்று சொன்னபோது ஒருவர்கூட அந்தக் கோயிலுக்கு வரவில்லை. அந்தக் கட்டுப்பாடுகளை எல்லாம் விட்டு விட்டு நீங்கள் வரலாம் என்று சொல்லும்போது அந்தக் கூட்டம் அலை அலையாக வருகிறது. ஆனால் அங்கே ஏசுநாதர் மட்டும்தான் இல்லையென்று சொல்கிறார் பாவேந்தர் பாரதிதாசன். அதுதான் எனக்கு நினைவிற்கு வருகிறது. நீங்கள் அலை அலையாகச் சென்றீர்கள் கூட்டம் கூட்டமாகச் சென்றீர்கள். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் கோயிலிலே முருகன் மட்டும் இல்லை செந்தில் வேலன் மட்டும் இல்லை. அவன் எங்கே சென்றான் என்று எண்ணிப் பாருங்கள். சிரிக்கிறீர்கள். எங்கே சென்றான்—எண்ணிப் பாருங்கள் (குறுக்கீடுகள்) இவர்கள் யார்! ஏழைகளுடைய உணவில் முட்டைக்கு ரூ. 3 வாங்கியவர்கள் இங்கே வருகிறார்கள் என்று எண்ணினார் (குறுக்கீடுகள்) கோதுமையிலே இலட்சம் இலட்சமாக ரூபாய் சம்பாதித்தவர்கள் இங்கே வருகிறார்கள் என்று எண்ணினான் அது மட்டுமல்ல (குறுக்கீடுகள்). கோயில் பணத்திலே கட்சி நடத்தியவர்கள் இங்கே வருகிறார்கள் என்று எண்ணினான். அதைக் கண்டுதான் அந்த முருகன் செந்தில் வேலன், நம்முடைய புரட்சித் தலைவர்

திரு. துரைமுருகன்: I am raising a point of order.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. வேடசெந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்);—அவர் பேசுவதற்கு உங்கள் கட்சியின் சார்பாகப் பேசுபவர் பதில் அளிக்கலாம். (குறுக்கீடுகள்)

He is no yielding.

Thiru Dur iMurug n, I am raising a point of order p int of order can beraised a any time.

முருகன் எங்கே போனான் என்று சொல்ல வேண்டாமா? நான்தான் முருகன். நான் எங்கே போனேன் என்று சொல்ல வேண்டாமா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. வேடசெந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்):—இது பாயின்ட் ஆப் ஆர்டரின் கீழ் வராது. அடுத்து, திரு. உ. சுப்பிரமணியன் பேசுவார்.

TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

1982 மார்ச் 3]

(முற்பகல் 11-40)

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்களாலே இந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட் பற்றி ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன் (கூச்சல், குழப்பம்).

திரு. இ. கணேசன் : தலைவர் அவர்களே, நான் இன்னும் என் பேச்சை முடிக்கவில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கணேசன் அவர்கள் தம் கருத்தைச் சுருக்கமாகக் கூறி முடிக்க வேண்டும்.

திரு. இ. கணேசன் : துணைத் தலைவர் அவர்களே, நான் திருச்செந்தூர் முருகன் பற்றித்தான் சொன்னேன். இந்த அவையில் இருக்கக்கூடிய எந்தச் சட்ட மன்ற உறுப்பினரைப் பற்றியும் நான் சொல்லவில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அந்த திருச்செந்தூர் முருகன், இவர்களைக் கண்டு, அஞ்சி, பயந்து, ராமாவரம் தோட்டத்திலே வீற்றிருக்கிறாரே என்னுடைய பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர், $4\frac{1}{2}$ கோடி தமிழ்ச் சமுதாயத்தின் தளநாயகன் எம்.ஜி.ஆர். அவர்களுடைய இதயத்திலே அந்தத் தங்க சிம்மாசனத்திலே குடியேறினான் அந்தத் திருச்செந்தூர் முருகன் என்று சொல்வதை ஏன் ஆட்சேபிக்க வேண்டும் என்றுதான் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். திருச்செந்தூரிலே நீங்கள் செல்லும்போது அந்த முருகன் இல்லை. உங்களைக் கண்டு அஞ்சி, எங்களுடைய ராமாவரம் தோட்டத்திலே........................

திரு. துரைமுருகன் : பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் வராது.

திரு. துரைமுருகன் : நீங்கள் வாய்ப்புத் தருகிறேன் என்று சொன்னீர்கள். ஐ ஆம் ரெய்சிங் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். அவர் எங்களுடைய பாதயாத்திரையைப் பற்றிப் பேசி இருக்கிறார். அதற்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டும். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் கட்சியில் இருந்து வேறு யாராவது பேசும்போது அதற்குப் பதில் சொல்லுங்கள். இப்போது நீங்கள் பதில் சொல்ல முடியாது. (கூச்சல், குழப்பம்).

திரு. துரைமுருகன் : எங்கள் பக்கத்தில் இருந்து இப்போது யாரும் பேசப்போவதில்லை. இதற்கு நாங்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும். அவர்கள் எதை வேண்டுமானாலும் பேசலாம், நாங்கள் பதில் சொல்லக் கூடாதா ? (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த விவகாரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் வராது. உங்கள் உறுப்பினர்கள் பேசும்போது பதில் சொல்லலாம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்— தலைமை).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உட்கார வேண்டும்.

டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுங்கட்சி உறுப்பினர் அவர்கள் பேசியதை ஒட்டி எழுந்துள்ள இந்த நிலைக்காக நான் மிகவும் வருந்துகிறேன். எதிர்க்கட்சி உறுப்பினர்களாகிய திராவிட முன்னேற்றக் கழகத்தினரை நான் கேட்டுக் கொள்கிறேன். ஆளுங்கட்சி உறுப்பினர் அவர்கள் பேசியதிலிருந்து நான் புரிந்து கொண்டது, திருச்செந்தூரில் முருகன் இல்லை, அவர் ராமாவரம் தோட்டத்திற்கு வந்து விட்டார் என்று ஆளுங்கட்சி உறுப்பினர் சொன்னார். நாங்கள் இதுவரை வைரவேல்தான் காணாமல் போய்விட்டது என்று கருதினோம். அந்தச் சிலையும் காணாமல் போய்விட்ட செய்தி இப்போது தெரிகிறது. இதோடு கழக உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முருகன் திருச்செந்தூரில் மட்டும் இல்லை; எல்லா இடங்களிலும் இருக்கிறார். எங்கும் நீக்கமற நிறைந்து இருக்கிறார். அதிலே பிரச்சினை இல்லை. தனித்தனியாக இன்னின்ன இடங்களில் இருக்கிறார் என்று சொல்லிக் காட்டத் தேவையில்லை. இந்தச் சபைக்குள்ளேகூட இருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் கணேசன் பேசும்போது திருச்செந்தூர் முருகன் இராமாவரம் தோட்டத்திலுள்ள முதலமைச்சர் அவர்கள் இதயத்தில் குடியேறிவிட்டார் என்று தான் சொன்னார்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நானும் இரண்டு நாட்களாகப் பார்த்துக் கொண்டு இருக்கிறேன். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பாத யாத்திரையைப் பற்றி அதிகமாகப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். பட்ஜெட்டில் எதுவும் இல்லை பேசுவதற்கு, பாத யாத்திரை பற்றிப் பேசட்டும்.

1982 மார்ச் 3]

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, வழிவிடு முருகன் அருளாலே எனக்கு மீண்டும் பேசுவதற்கு வழிவிட்டதற்கு நன்றி. இந்த ஆண்டு பட்ஜெட் உரையிலே நிதி அமைச்சர் அவர்கள் உணவு நிலைமை திறமையாகக் கட்டுப் படுத்தப்படுவதாகவும், பொது வினியோக முறை திறமையாகச் செயல்படுத்துவதன் மூலம் இன்றியமையாப்பொருள்களின் விலை கட்டுப்படுத்தப்பட்டு இருப்பதாகவும் கூறியிருக்கிறார்கள். ஆனால் கிராமப்புறங்களில் நிலைமை வேறாக இருக்கிறது. குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்திலே உள்ள வைகை அங்காடிகள் சரியாக நடைபெறவில்லை என்று சொல்லத்தக்க அளவிற்கு பல இடங்களில் கடைகள் இருக்கின்றன. தேவையான பொருள்கள் கிடைக்கவில்லை. மண்ணெண்ணெய் சரியாக எங்குமே வினியோகிக்கப்படவில்லை. அதற்குக் காரணம், போதுமான ரூப்பாய்கள் கிடைக்காததுதான் என்று சொல்கிறார்கள். எங்கெல்லாம் கூட்டுறவு அங்காடிகள் சரியாக இயங்கவில்லையோ, அங்கெல்லாம் தனியாரிடத்திலாவது இந்த வினியோகத்தைக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வைகை அங்காடிகளுக்கு அரசு உதவித் தொகை வந்தால்தான் அங்கேயுள்ள சிப்பந்திகளுக்குச் சம்பளம் என்கிற நிலைமை இருக்கிறது. அல்லது வசூல் செய்யாவிட்டால் சம்பளம் இல்லை என்கிற நிலைமையும் இருக்கிறது. ஆகவே, இதற்கு ஏதேனும் ஒரு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்-தலைமை).

சிவில் சப்ளை இலாகா ஒவ்வொரு டன் அரிசிக்கும் ரூ. 500 நஷ்டமடைந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இது எதனால் ஏற்பட்டது? விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்த விலையை விடக் குறைவாக விற்றார்களா? அல்லது வேறு வகையில் இது ஏற்பட்டதா? எதனால் இப்படி நஷ்டம் ஏற்பட்டது என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. விவசாயிகளும் சரியான விலை கொடுக்கவில்லை என்று குறை சொல்கிறார்கள். வாங்குகிறவர்களும் சரியான முறையில் இல்லை என்றும் குறை சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் அந்த சிவில் சப்ளை இலாகாவில் உள்ளபடியே நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன என்பதை அரசு ஆராய்ந்து அறிந்து சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏழைக் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்குவதற்காக ரூ. 100 கோடி தேவை, அதைச் சரிக்கட்ட வரி உயர்வு என்று சொல்வது திசை திருப்பும் உத்தி என்று நான் சொல்ல விரும்புகிறேன். எந்த வகையில் அந்தக் குழந்தைகளுக்கு உணவு வழங்கப்படும் என்று எந்தவிதமான குறிப்பும் இதில் இல்லை. மதிய

உணவுத் திட்டத்திலாவது பள்ளியில் உள்ள ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு அளிப்பதன் மூலம் பல குழந்தைகள் பள்ளிக்கு வருவதற்கு சூழ்நிலை ஏற்பட்டது. அந்தத்திட்டத்திலேயே பல தவறுகள் நடந்து இருக்கின்றன. இந்த நிலையில் இந்தத் திட்டத்தை எவ்வாறு செயல்படுத்தப்போகிறீர்கள்? எங்கே வைத்து இந்தப் பிள்ளைகளுக்கு இந்த உணவை வழங்கப்போகிறீர்கள்? எந்தவகையில் இந்தக் குழந்தைகளின் வயதை நிர்ணயம் செய்யப்போகிறீர்கள்? எந்த வகையான உணவை இவர்களுக்கு வழங்கப்போகிறீர்கள் என்ற விவரங்கள் இதிலே சொல்லப்படவேயில்லை. ஆனால் இதற்காக 100 கோடி ரூபாய் என்கிற ஒரு பெரிய தொகை செலவிட இருப்பது மிகுந்த ஆச்சர்யமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11·50)

அடுத்து, விவசாயிகளுக்குத் தரமான விதைகள் விநியோகிக்கப்பட வேண்டுமென்று ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள். அதற்காக விதைப்பண்ணைகள் புதிதாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. ஆனால் நடைமுறையில் விவசாயிகளுக்கு நல்ல தரமான விதைகள் உரிய காலத்தில் கிடைப்பது இல்லை. காலம் தாழ்த்தி வருவதால் சில சமயங்களில் விற்பனையாகாமல் தேங்கிவிடுகிறது. தேங்கிய விதைகள் வேறு வகையில் செலவிடப்படாமலும் இருப்பை விதைக்குப் பயன்படாது என்று தெரிந்தும் மறுவருடங்களில் விவசாயிகள் மத்தியில் விநியோகிக்கப்படுவதாலும் முளைப்புத் திறனை இழந்த விதைகளை வாங்கிய விவசாயிகள் நஷ்டமடைவதோடு பலனும் பாதிக்கப்படுகிறது. ஆகவே அதை நிவர்த்திக்க நடைமுறையை மாற்ற வேண்டும்.

இந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சலுகை விலையில் கொடுக்கப்பட்ட விதைகள் முளைக்காமல் பாதிப்பு ஏற்பட்டது. அதனால் ஏற்பட்ட அல்லல்களை நாம் அறிந்தோம். இதையெல்லாம் களைந்து, பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் உதவும் வகையில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனளத்தைப் பொறுத்தவரையில் 6 கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுவதாகவும், 1.20 கோடி ரூபாய் செலவில் 10 நிலையங்கள் உருவாக்கப்பட்டதாகவும், மேலும் 5 கோடி மீன் குஞ்சு உற்பத்தி செய்ய உதவும் என்றும் கோடிக் கணக்கில் புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் நடைமுறையில் இந்தத் துறையில் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் தொண்டிக்கு அருகில் காரங்காடு என்ற ஊரில் பல ஆண்டுகளாக இடம் ஒதுக்கீடு செய்தும் இன்னும் மீன் குஞ்சு வளர்ப்பு நிலையம் ஆரம்பிக்கப்படவில்லை. அங்கே இரால் வளர்ப்புத் திட்டத்தைக் கொண்டு வந்து பல ஆண்டுகள் ஆகியும் ஏதோ செடி செத்தைகளைத்தான் விட்டு வைத்திருக்கிறார்களே தவிர திட்டத்திற்குத் தேவையான எந்த விதமான முயற்சியையும் எடுத்துக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்நிய நாட்டு உதவியுடன் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் 108 கோடி ரூபாய் செலவில் நடைபெறும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் கிராமப்புறங்களில் பல ஆண்டு களாக மக்களால் பாதுகாக்கப்பட்டு வந்த பல கோடி ரூபாய் மதிப்புள்ள மரங்கள் ஒருசில மாதங்களில் அண்மையில் வெட்டப் பட்டன என்பதைச் சர்க்கார் அறியுமா? அதற்கு என்ன காரணம்? கிராம அதிகாரிகள் பதவியை ஒரே இரவில் ஒழிப்போம் என்று சொல்லி நடவடிக்கை எடுத்ததுதான் என்பதை இந்த அரசு உணரவேண்டும்.

அடுத்த நிதி ஆண்டில் 10 கோடி ரூபாய்ச் செலவில் பெரியாறு, வைகை கால்வாய் ஏற்பாடுகளை நவீனப்படுத்தும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும் எனக் கூறியிருப்பது மகிழ்ச்சிக்குரியது. எங்கள் சிவகங்கை பகுதியின் நீண்டநாள் கோரிக்கையான இந்தத் திட்டத்தைத் துரிதப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்னாள் ஜமீன் இனாம் ஏரிகளை 'அன்கிளாசிஃபைடு டாங்க்ஸ்' என்ற அனாதைக் கண்மாய்களை ஸ்டான்டடைஸ் பண்ண முடிவு செய்திருப்பது ஒரு நல்ல முடிவு. அந்த கண் மாய்களை எந்தத் திட்டத்தாலும் ஆழப்படுத்த முடியவில்லை, சீர் செய்ய முடியவில்லை. ஜமீன் காலம் முதல் எந்தவிதமான மாறுதலும் இல்லாமல் இருக்கின்றன. இப்போது அவைகளைச் சீர்செய்ய முயற்சி மேற்கொள்ளப்படுவதை நான் வரவேற் கிறேன். அதை மிக விரைவில் மதிப்பீடு செய்து, இந்த ஆண்டி லேயே அதற்கான காரியங்கள் நடைபெற ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டிலும் மின்சாரத் துறைக்கு மிக அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தற்சமயம் 20 சதவீதமும் அடுத்து 29 சதவீதமுமாக அமையும் எனக் கூறப்பட்டுள்ளது. இருந்தாலும் மின்சார வாரியத்திற்குப் பெரும் நஷ்டம் ஏற்பட் டுள்ளது என்றும் மின் கட்டணத்தைக் கட்டவேண்டும் என்றும் ஏற்கெனவே கூறப்பட்டுள்ளது. மின் உற்பத்திச் செலவு கூடுதல்

வெளி மாநிலங்களில் வாங்கும் மின்விசைக்குக் கூடுதல் பணம் கொடுக்க வேண்டியதிருக்கிறது என்றாலும் வேறு வகையில் பெரும் நஷ்டம் ஏற்படுகிறது.

உதாரணமாக, பல ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்டுள்ள செப்புக் கம்பிகள் திருடப்படுகின்ற விவரத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். பரமக்குடிக்கும் பார்த்திபனூருக்கும் இடையே நீண்ட துாரத்துக்குப் போடப்பட்டிருந்த செப்புக்கம்பிகள் வெட்டப் பட்டு, திருடப்பட்டுள்ளன. போலீஸில் ரிப்போர்ட் செய்யப் பட்டும் இன்னும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. அந்தக் கம்பிகள் பல லட்சம் ரூபாய் பெறுமானம் உள்ளவை.

அதைப்போல அண்மையில் சிவகங்கைக்கு அருகே சோழபுரத் திற்குச் சமீபத்தில் பர்மா காலனிக்கு அருகில் மின்சாரக்கம்பிகள் வெட்டப்பட்டு திருடப்பட்டுள்ளன. அதுவும் பல லட்சம் ரூபாய் பெறும். இன்னும் திருட்டைக் கண்டுபிடிக்கவில்லை. இதிலே வேடிக்கை என்ன வென்றால் அங்கே லாரியைக் கொண்டு நிறுத்தி, மின்கம்பியை வெட்டி, லாரியில் ஏற்றிக்கொண்டு சென்றிருக்கிறார் கள். கம்பி திருடப்பட்ட சமயத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டி ருக்கிறது. அப்படியானால் இந்தத் திருட்டுகள் வெளியாரால் செய்திருக்கமுடியாது. மின்சாரபோர்டில் உள்ளவர்களோ அல்லது அவர்களின் துணை கொண்டோதான் இந்தத் திருட்டுகள் நடந்திருக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. அவர்களுடைய துணை இல்லாமல் வேறு யாரும் செய்திருக்க முடியாது. இது எங்கள் பகுதியில் நடந்தது; நாங்கள் அறிந்தது. இதைப்-போல இந்த மாநிலம் பூராவும் இருக்கிறது. அதனால் பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கலாம். அதையெல்லாம் சீர்திருத்த வேண்டும். அதற்கான வழிவகைகளைக் கண்டறிய வேண்டும். இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் கண்காணித்தாலே பெரிய நஷ்டத்தைத் தவிர்க்கலாம்; அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் இந்த மாநிலத் தில் முன்னேற்றம் தடைப்பட்டுள்ளது என்று பரவலாகச் சொல்லப்படுகின்றது. அற்குக் காரணம் அரசுத் தரப்பிலே போதிய ஒத்துழைப்பு இல்லாததுதான் என்று பலர் சொல் கிறார்கள். பல தொழில் அதிபர்கள் அண்டை மாநிலங் களான கர்நாடகம், ஆந்திரம் போன்ற மாநிலங்களுக்குச் சென்று அந்த அரசாங்கங்களிடமிருந்து பல்வேறு உதவிகளை நாடி அந்த உதவிகளும் உரியகாலத்தில் கிடைப்பதால் அங்கே தொழில் ஆரம் பித்து முதலீடும் செய்கிறார்கள். இந்த நிலைமையினை உணர்ந்து தமிழ்நாட்டிலே தொழில் செய்ய முன் வருகின்றவர்களுக்கு, எந்தவிதமான சட்டங்கள் கடுமையாக இருந்தாலும்கூட அவற்றை எல்லாம் தளர்த்தி, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டும்.

1982 மார்ச் 3] [திரு. உ. சுப்பிரமணியன்]

எல்லா வகையிலும் பின்தங்கியதும், தொடர்ச்சியாகப் பல ஆண்டுகள் இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டதுமான இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட இருந்த வெடி மருந்துத்தொழிற்சாலை வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதை மிகவும் வன்மையாக நான் கண்டிக்கிறேன். இனியாவது பல்லாயிரக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கக் கூடிய பெரிய அளவிலான தொழிற்சாலையையும், உபதொழில்கள் பல உருவாகக் கூடிய வகையிலும் அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பொதுத்துறை நிறுவனங்களில் தமிழ்நாடு கனிப் பொருள் நிறுவனம் 3 ஆண்டுகளிலேயே 25 லட்சம் ரூபாய் லாபம் ஈட்டியுள்ளது பாராட்டுக்குரியது. சிவகங்கைக்கருகே கிடைக்கும் கிராஃபைட் என்ற மூலப் பொருள் உலகத்திலேயே மிக உயர்ந்த தரமானது என்று அண்மையில் நடைபெற்ற சோதனைகள் மூலம் தெளிவாகி இருக்கின்றது. அந்த மூலப் பொருள்களை விரைவிலே தோண்டி எடுத்து அதன்மூலம் உற்பத்தி செய்யக்கூடிய பல்வேறு கேந்திரமான தொழில்கள் ஏற்படக் கூடிய வாய்ப்பிருக்கின்ற காரணத்தால் அதற்கு முன்னுரிமை கொடுத்து அதைச்செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அரிசனங்களுக்குப் பல இடங்களில் அரசின் மூலமாக வீடு கட்டிக் கொடுக்கக் கூடிய திட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அது இப்போது என்ன நிலையில் இருக்கின்றது? பல இடங்களிலே கட்டப்பட்ட வீடுகள் அரைகுறையான நிலைமையிலே விடப்பட்டிருக்கின்றன. அதற்குக் காரணம் அரசாங்கத்தின் கார்ப்பரேஷனிடத்திலே இருந்து உதவிகள் கிடைக்காத காரணத்தாலும், வேறு வகையிலே உதவி கிடைக்காத காரணத்தாலும் ஆங்காங்கே அந்த வீடுகள் அப்படிப்பட்ட நிலைமையில் இருக்கின்றன. அதனால் மழைக் காலங்களில் அவை மிகவும் பாதிக்கப்படக் கூடிய நிலைமை ஏற்படுகின்றது. கோடிக் கணக்காகப் பணம் செலவழித்துவிட்டு அது இப்படி வீணாகப் போகின்றது என்றால் அதை யாரும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஆகவே அந்த அரிஜனங்களுக்கான வீடுகளை உடனடியாகப் பூர்த்தி செய்து கொடுப்பதற்குரிய நடவடிக்கையினை அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அரிசன மற்றும் பின் தங்கிய மக்களுக்காக அட்வைசரி போர்டு இன்றுவரை அமைக்கப்படவில்லை. மாவட்ட அளவிலே எராடிகேஷன் ஆஃப் அன்டச்சபிளிட்டி கமிட்டியை அரசு ஏற்படுத்தவில்லை, அதையும் உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.

அடுத்து தன்னிறைவுத் திட்டம் என்பது நல்ல முயற்சி. அதை நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால் அதிலே ஏற்படுகின்ற குறைபாடுகளையும், இடர்ப்பாடுகளையும் நாம் அனுபவத்தின் மூலமாக அறிந்து, வருகின்ற ஆண்டுகளிலேயாவது அதற்காக ஒதுக்கப்படுகின்ற ஒவ்வொரு பைசாவையும் நல்ல முறையிலே செலவழித்து மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே நடக்கின்றதா என்பதைக் கண்காணிக்க வேண்டும்.

அடுத்து குடிநீர் வழங்கும் திட்டத்தைப் பொறுத்தவரையில் குடிநீர் வடிகால் வாரியும் மாவட்ட கலெக்டர்களோடு கூட சரியாக ஒத்துழைப்பதில்லை என்பதை டி.டி.சி.யிலே நாங்கள் பார்த்திருக்கிறோம். குடிநீர் என்பது மிகவும் அவசியமான ஒன்று. அந்தக் குடிநீர் வழங்குவதற்காக மத்திய அரசு எடுக்கின்ற பல்வேறு காரியங்கள் மக்கள் மத்தியிலே பூரண பலனை ஏற்படுத்தும் வகையிலே இவர்கள் ஒத்துழைக்கவில்லை என்று நான் சுட்டிக் காட்டி குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

அடுத்து சுற்றுலா என்பது மிகவும் அவசியமான ஒன்று. மக்கள் நன்கு சுற்றிப் பார்த்து நாட்டைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் விவசாயிகளைத் தனி இரயிலில் வெளி மாநிலங்களுக்கு அழைத்துச் செல்கின்ற திட்டம் நன்கு செயல்பட்டது. அதன் மூலம் மற்ற மாநிலங்களிலுள்ள விவசாய முறைகளை அறிந்துகொள்வதற்குரிய வாய்ப்பு இருந்தது. அந்தத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நிர்வாக வசதிக்காகவும் மக்கள் நலனுக்காகவும் இராமநாதபுரம் மாவட்டத்தைப் பிரிக்க வேண்டும் என்பது அந்த மக்களுடைய நீண்ட நாளைய கோரிக்கையாக இருந்து வருகின்றது. ஆனால் அதற்கு என்ன பெயரினை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளட்டும், அதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. அதன் தலைநகரை எங்கே வைக்கவேண்டும் என்பதிலே பல ஆண்டுகளாகப் பிரச்சினை இருந்து வருகின்றது. அந்த மாவட்டம் உருவான காலத்தில் 1912 ஆம் ஆண்டு அது பற்றிப பரிசீலனை செய்த மையூர் என்ற ஆங்கிலேயர் கமிஷன் ஒரு ரிப்போர்ட் கொடுத்திருக்கின்றது. ஒரு மாவட்டத்தின் தலைநகர் எந்தெந்த வசதிகளுடன் இருக்க வேண்டும் என்பது பற்றி ஆராய்ச்சி செய்தபோது இரயில் போக்குவரத்து இல்லை என்ற காரணத்தால்தான் அன்று அங்கே தலைநகர் ஏற்படுத்துவது நிறுத்தப்பட்டது. ஆனால் இப்போதும் கூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தமிழ்நாட்டின் தலைநகரையே திருச்சிக்கு அருகே கொண்டு போக வேண்டும் என்று கருதுகிறார்கள். நீண்ட தூரத்திலே இருந்து மக்கள் சென்னைக்கு வர முடியவில்லை என்று கருதுகின்ற காரணத்தால் தான், அவர்

களுக்கு அதிலே இடைஞ்சல்கள் இருக்கின்றன என்று அவர்கள் கருதுகின்ற காரணத்தால் தான் இம்மாநிலத்தின் தலை நகரையே மாற்ற வேண்டும் என்று அவர்கள் சொல்வது போன்று எங்கள் மாவட்டத்திலுள்ள சிவகங்கையினை இராமநாதபுரம் மாவட்டத்திற்குத் தலைநகராக அமைக்க வேண்டும். அவ்வாறு அமைத்தால் அது மக்களுக்கு மிக உகந்ததாக இருக்கும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(நண்பகல் 12.00)

ஆகவே, அந்தத் தலைநகரை சிவகாசியிலேயே அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, இது போன்ற பல்வேறுவிதமான நல்ல காரியங்களையும் நாங்கள் பாராட்டுவதைப் போல, பொது மக்களுக்கு குந்தகம் தரக்கூடியக் காரியங்களையும் அவ்வப்போது சுட்டிக்காட்டுகிறோம். ஆகவே இதில் எதிர்க்கட்சிக்காரர்கள் ஆதலால் வேண்டும் என்றே குறை கூறுகிறார்கள் என்ற அளவில் பேசக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர்கள் அது போல் எண்ணமாட்டார்கள் என்று கருதுகிறேன். ஆளும் கட்சி உறுப்பினர்கள் அவ்வாறு நினைத்தால், அந்தக் கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். எதிர்க் கட்சியினர் கூறும் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும் என்று கேட்டு அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் மாண்புமிகு திரு. கணேசன் அவர்கள் பேசும்போது ''முருகனைப்'' பற்றி கூறிய வார்த்தைகளையும், அப்போது எதிர்க்கட்சித் தலைவர் குறுக்கிட்டு, ''வேல்'' பற்றிக் கூறிய வார்த்தைகளையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று ஆணையிடுகிறேன். (*குறுக்கீடுகள்—குழப்பம்).

திரு. துரைமுருகன்: அதை எடுக்கக்கூடாது. தலைவர் அவர்கள் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவரது தீர்ப்பை மாற்றுவதற்கு உங்களுக்கு உரிமை கிடையாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தலைவர் இருக்கையில் நான் இருக்கும்போது, அந்த அதிகாரம் எனக்கும் உண்டு. (குறுக்கீடுகள்—கூச்சல், குழப்பம்)

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் திரு. கணேசன் பேசும்போது அவையில் இருந்தீர்கள். அவர் பேசியது, எதிர்க்கட்சித் தலைவர் குறுக்கிட்டுச் சொன்னது ஆகிய

*நீக்க ஆணை பின்னர் ரத்து செய்யப்பெற்றுள்ளது. (பார்க்க பக்கம் 90).

[திரு. துரைமுருகன்] [1982 மார்ச் 3

எல்லாவற்றையும் அப்படியே அனுமதித்திருக்கிறீர்கள். துணைத் தலைவர் இப்போது சிலவற்றை நீக்க ஆணையிட்டுள்ளார், அதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்-குழப்பம்)

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே திரு. கணேசன் அவர்கள் முதலிலே பேசிய பேச்சினுடைய தொடர்பாக பின்னால் விளைந்த கருத்துக்களை மட்டும் தாங்கள் ஏற்காது எடுத்து விடுவதின் மூலம் ஒரு வகையில் தாங்கள் அநீதி செய்வதாகும். தொடக்கத்தில் பேசப்பட்ட கருத்துக்களில் திருச்செந்தூருக்குப் பயணம் சென்றதைப் பற்றி இழிவான வகையில் ''இன்சுனிவேஷனாக'' பேசப்பட்டது. சென்றவர்கள் எல்லாம், படி அரிசிக்கு 3 ரூபாய் வீதம் வாங்கியவர்கள், கோதுமை பேரத்தில் ஊழல் செய்தவர்கள் என்ற கருத்துக்கள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் கணேசனுடைய பேச்சில் இடம் பெற்றன. திராவிட முன்னேற்றக் கழகத்தினை இழிவு செய்யும் வகையில் இருக்கும் அந்தக் கருத்துக்கள் அப்படியே இடம்பெறுமானால், கலைஞர் அவர்கள் பதிலுக்குப் பதில் என்ற முறையில் மறைமுகமாகச்சொல்லிய கருத்தும் இடம்பெற்றேயாக வேண்டும். மாறாக கணேசன் அவர்களுடைய பேச்சில் இன்சுனிவேஷனாக வரும் பகுதிகளில் இருந்து தொடர்ந்து நீக்கினால், கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதையும் நீக்குவதில் நியாயம் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையும் நீக்கி விடுவோம்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கணேசன் அவர்கள் பேசியது இருக்கட்டும். மூட்டைக்கு மூன்று ரூபாய் வாங்கியதாகச் சொன்னார்கள். எந்தக் கட்சியில் எங்கு இருக்கிறார் என்று அவருக்குத் தெரியாது. அதுவும் இருக்கட்டும், இதுவும் இருக்கட்டும்.

திரு. சோ. அழகர்சாமி : பாயின்ட் ஆப் ஆர்டர். பாராளுமன்ற நடைமுறைப்படி, சட்டமன்ற நடைமுறைப்படி உபயோகிக்கக் கூடாத வார்த்தைகளை உபயோகித்தால்தான், அதை நீக்குவது என்பது வழக்கமாக இருக்க வேண்டுமே தவிர பேசியதையெல்லாம் சிறிது நேரம் கழித்துப் பார்த்து அத்தனையும் நீக்குவது என்பது சரியாகயிராது என்பது என் பணிவான வேண்டுகோள். ஒருவர் ஒரு வார்த்தை சொல்வது அதை வைத்து இன்னொருவர் இன்னொரு வார்த்தை சொல்வது என்பது சில நேரங்களில் தமாஷாகக் கூட இருக்கும். ஆகவே அதை எல்லாம் நீக்க வேண்டாம் என்பதுதான் என் வேண்டுகோள். அன்பார்லிமென்டரி வார்த்தைகள் பயன்படுத்தப் பட்டிருந்தால் அவைகளை நீக்கலாம். இப்போது பேசப்பட்ட

அனைத்தையும் நீக்குவது என்று சொன்னால் வருங் காலத்தில் என்னதான் சட்டமன்றத்தில் பேசினார்கள் என்பது தெரியாமல் போய் விடும். ஆகவே தாங்கள் அந்தத் தீர்ப்பை மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், அவைகளை நீக்க வேண்டாம்.

திரு. ரா. உமாநாத் : இந்த ஸ்டேஜில் இரண்டு சைடிலும் பேசியிருக்கக் கூடியதை நீக்குவது என்றால் மக்களுக்கு வேறு எண்ணம் வரும். கணேசன் அவர்கள் பேசுகிறபோது, எதிர்க் கட்சி துணைத் தலைவர் அவர்கள் சொன்னது மாதிரி, பல்வேறு கருத்துக்கள் சொல்கிறபோது அதுவரை யாரும், எவரும் தலையிடவில்லை. அப்படி யாரும் தலையிடாமல், கடைசியில் முருகன் விஷயம் வந்த போது திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பதில் சொல்ல முற்பட்டபோது பதில் சொல்ல அனுமதிக்க முடியாது என்ற தகராறு வந்தபோது பிறகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வந்து அவர்கள் பேச்சுக்கு ஒரு ரிட்டார்ட் கொடுத்தார்கள். அதுதான் நடந்திருப்பது. ஆகவே அதற்கு இது சரியாகப் போய்விட்டது. ஆகவே இந்த நேரத்தில் திரு. கணேசன் பேசிய அந்தப் பாயின்டில் இருந்து பூராவையும் எடுப்பது என்பதை ஒத்துக்கொண்டால் மக்கள் என்ன நினைப்பார்கள் என்றால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்து இருக்கக்கூடிய ''ரிட்டார்ட்'' ஆளும் கட்சிக்குப் பாதகமாக இருக்கிறது என்ற பாயின்ட் வரும்போதுதான் தலையிடப்படுகிறது என்ற எண்ணம் வரக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். தயவு செய்து இந்த நேரத்தில் அவற்றை எடுக்கக்கூடாது என்று.

(பிற்பகல் 12.10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் லாவகமாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான் அவரை அதற்காகப் பாராட்டுகிறேன். அது அல்ல என்னுடைய நோக்கம். குற்றச்சாட்டுக்களை முன் வைக்க எதிர்கட்சிகளுக்கு உரிமை உண்டு.

திரு. கணேசன் பேசும்போது, சில இன்சுனிவேஷன் வந்தது ; எதிர்க் கட்சியினர் கோபமாக ஆட்சேபித்தார்கள். அப்போது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் வந்தார்கள். அவர் எழுந்து ஒரு வெடி மாதிரி டக் என்று ஒரு சொல்லைப் போட்டார். இப்படிச் சொல்லால் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்வது நல்லதல்ல. பத்திரிகைகளில் வரும்போது, அதன் விளைவு எப்படி இருக்கும் என்பதையும் கருதித்தான் அவற்றை நீக்கிவிடலாம் என்று சொன்னேன். அதை நீங்களும் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பதிலுரைகள் நடக்கும் போது நாங்கள் இருந்தோம், ஆனால், புண்படுத்துகின்ற ஒரு பதிலைச் சொல்வது என்பது மிகவும் எளிது. சொல்லியிருக்க முடியும். ஆனால், அப்படிச் சொல்வது சரியல்ல, மரபல்ல என்கிற காரணத்தினால் தான், எங்களைப் பொறுத்தவரையில் கண்ணியமற்ற வார்த்தைகள் இரு பக்கமும் தேவையில்லை என்ற கருத்தை நாங்கள் கொண்டிருக்கிறோம். அப்படியே இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினால், எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஏனென்றால், சிலையை யார் திருடினார்கள் என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும்........... (கூச்சல், குழப்பம்). சிலையை யார் திருடியவர்களானாலும், அதைக் கண்டுபிடிக்க வேண்டியது முதல் அமைச்சருடைய வேலை. நிச்சயமாகக் கண்டுபிடிப்பார்கள். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்காகத் தான் நான் சொன்னேன். இரு தரப்பிலும் சொல்லால் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளும்போது, அவையில் அமைதி குலைகிறது' அவை நடவடிக்கை பாதிக்கப்படுகிறது. அதனால்தான், அந்தப் பகுதியே தேவையில்லை என்பது என்னுடைய அபிப்ராயம். அந்த அடிப்படையில்தான் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சில வார்த்தைகளை நீக்கினார்கள். கடுமையான வார்த்தைகள் இரு தரப்பிலும் தவிர்க்கப் பெற வேண்டும். (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் பண்பாட்டைக் காப்பாற்றுகின்ற அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் கணேசன் பேசியதிலிருந்து நீக்கிவிடலாம் என்று சொல்வது ஒரு மரபு. பண்பாட்டைக் காப்பாற்றுகின்ற அடிப்படையில், இருந்துதான் தீரவேண்டுமென்று மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் விரும்பினால், அதைத் தொடர்ந்து அவர் பேசியதில் இருந்து மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் பேசி, அதற்குத் தாங்கள் பதில் சொல்லியது வரையில் இருந்துவிட்டுப் போகட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படும் என்று சொன்னவைகள் அனைத்தும் மறுபடியும் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. எதுவும் நீக்கப்படவில்லை.

திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் சமர்ப்பித்துள்ள 1982—83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை சமுதாயத்தில் நலிந்தவர்களுக்கு கை கொடுக்கும் வகையிலும், தொழில் வளர்ச்சியில் பின் தங்கி இருந்த தமிழகத்தை தொழில் வளர்ச்சியில் மேம்படுத்தவும், கிராமப்புற மக்களுக்குத்தேவையான அடிப்படைவசதியை பூர்த்தி செய்யவும் வகுக்கப்பட்டுள்ள திட்டங்களை வரவேற்று பாராட்டு கிறேன். மாநிலத்தில் இருக்கின்ற ஏழை, எளிய நலிந்தவர் களுடைய குழந்தைகளுக்கு ஒரு வேளை உணவு அளிக்க 100 கோடி திட்டம் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டுகின்ற திட்டம். இந்தத் திட்டத்தை அறிவித்ததன் மூலம் தமிழகத்திலுள்ள ஏழைக் குழந்தைகளின் பசிப் பிணி தீர்க்கும் மருத்துவராக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் திகழ் கிறார். எனது கம்பம் தொகுதியில் உத்தமபாளையம் தாலுகா தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. அங்கு முழுக்க முழுக்க விவசாயத்தையே நம்பியிருக்கிறார்கள் இப்பொழுது அந்த பகுதியில் விவசாயம் கட்டுப்படி ஆகவில்லை யென்று பெரும்பகுதி நில உடமையாளர்கள் தென்னை பயிர் இட்டு விட்டார்கள். இன்னும் 5 அல்லது 6 ஆண்டுகளில் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைப்பதே இல்லாமல் போய்விடும் நிலை உள்ளது. எனவே உத்தமபாளையம் தாலுகாவை தொழில் துறையில் பின்தங்கிய தாலுகாவாக அறிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். மேலும் எனது கம்பம் தொகுதியில் சிமெண்ட் தொழிற்சாலை அல்லது பேப்பர் தொழிற்சாலை அல்லது சர்க்கரை ஆலை இவைகளில் ஏதேனும் ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்குமாறு எனது தொகுதி மக்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

எனது கம்பம் தொகுதியில் சுருளி நீர்வீழ்ச்சியை சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குற்றாலத்திற்கு அடுத்து மிகவும் சிறப்பு வாய்ந்த நீர் வீழ்ச்சி சுருளி நீர்வீழ்ச்சி என்பதை யாவரும் அறிவோம். இந்த நீர் வீழ்ச்சியில் நீர் வரும்போது பல மூலிகைகள் பட்டு வருவதால் குளித்தால் நோய்கள் தீரும், குடித்தால் உள்நோய் போகும் என்று அங்கே உள்ள பெரியவர்கள் சொல்கிறார்கள். மேலும் நாற்றுக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்த வண்ணம் இருக் கிறார்கள். எனவே கம்பம் தொகுதியில் உள்ள சுருளி நீர் வீழ்ச்சியை சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை, தேனி, குமுளி, கோட்டயம் சாலைகளை தேசிய நெடுஞ்சாலையாக மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கம்பம், தேனி பக்கத்திலுள்ள தேக்கடிக்கு நமது மாநிலத்திலிருந்தும், வட மாநிலங்களிலிருந்தும், அயல் நாட்டிலிருந்தும் சுற்றுலாப்பயணி கள் வந்தவண்ணம் இருக்கிறார்கள். தேனி தமிழகத்திலுள்ள

பெரிய வியாபார ஸ்தலங்களிலே சிறப்பு பெற்றதாக விளங்குகிறது. அந்த மதுரை, குமுளி சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றி மாநில அரசு மத்திய அரசிற்கு பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கம்பம் தொகுதியில் வெள்ளக் காலங்களில் ஏற்படுகின்ற உபரி நீரை வைரவன் அணையிலிருந்து பெரியகுளம் வரை மேற்குமலை தொடர் அடிவாரத்தில் ஒரு சம மட்டக் கால்வாய் ஏற்படுத்தி பல்லாயிரக்கணக்கான புஞ்சை நிலங்கள் பாசன வசதி பெறுகின்ற வகையில், தற்சமயம் அரசின் ஆய்விலுள்ள 18-ம் கால்வாய்த் திட்டத்தை துரிதமாக நிறைவேற்றித் தரும்படி கேட்டு அமர்கிறேன்.

* திரு. டி. மணி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே1982–83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். மத்திய அரசு கையாண்டு வரும் பொருளாதாரக் கொள்கையின் விளைவாக விலைவாசி ஏற்றம் பண வீக்கம், வேலையில்லாத் திண்டாட்டம் ,அதன் விளைவாக தமிழகத்தில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். மத்திய அரசின் தாங்க முடியாத வரிச் சுமையை நாமும் சுமக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். தபால், தந்தி, கார்டு, கவர் கட்டண உயர்வு, ரயில் சரக்கு கட்டண உயர்வு இப்படி பல நூறு கோடி வரி உயர்விலிருந்து தமிழகத்தில் கொண்டு வந்திருக்கிற வரிகளும், இதன் பின்னணியில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற வரவு-செலவுத் திட்டம் துண்டு விழும் பட்ஜெட்டாக உள்ளது. இதன் அடிப்படையில் குமரி மாவட்டத்திலே இருக்கிற சில பிரச்சினைகளை மாமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

குறிப்பாக தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களிலும் தொழில் துறை விரிவாக்கப்பட்டிருக்கிறது. 1967-லிருந்து எந்தவிதமான தொழில் முன்னேற்றமும் இல்லாத ஒரு மாவட்டமாக குமரி மாவட்டம் இருந்து வருகிறது. எனவேதான் குமரி மாவட்டத்திலேயிருந்து அதிகப்படியான மூலப் பொருள்கள், குறிப்பாக மணவாள குறிச்சியிலிருந்து கிடைக்கிற மோனசைட், ரூட்டைன், சிர்க்கான், இல்மனைட், போன்ற மிக விலை மதிப்புள்ள மணல் வகைகளை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறோம்.

1982 மார்ச் 3] [திரு. டி. மணி]

(பிற்பகல் 12-20).

அதன் விளைவாக 1980–81-ல் 12 ஆயிரம் டன் இல்மனைட்டும் 1981–82-ல் 7,200 டன் இல்மனைட்டும் ஜப்பான்நாட்டுக்கு நாம் ஏற்றுமதி செய்திருக்கிறோம். அதன் விளைவாக அன்னியச் செலாவணி பெற்றுத் தருகிற மாவட்டமாக இந்த மாவட்டம் இருந்தாலும் எந்தவிதமான தொழில் வாய்ப்பும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே இல்மனைட்டிலிருந்தும், மோனசைட்டில் இருந்தும் பொருள்கள் உற்பத்திச் செய்யக்கூடிய முறையிலே 1973 ஆம் ஆண்டிலே ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான குறிப்பாணையை மத்திய அரசு மாநில அரசுக்கு அனுப்பியும் கூட அதை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் இது வரையிலும் எந்த அரசும் எடுத்துக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில்துறை என்று சொல்கிற போது 1981–82 ஆண்டிலே ஒரு நூற்பு ஆலை உருவாக்கப் போவதாகச் சொன்னார்கள். ஆனால் எதுவும் நடைமுறைக்கு வராத நிலை இருக்கிறது. இரண்டாவது மூலப் பொருள் அந்த மாவட்டத்திலே கிடைக்கும் ரப்பர். இந்த மாநிலத்திலேயே அங்கே அதிகமாகக் கிடைக்கக் கூடிய அந்த ரப்பரை பயன்படுத்த போக்குவரத்துத் துறையின் பேருந்துகளுக்கும், அரசாங்க ஜீப்புகளுக்கும் வேண்டிய டயர், டியூப் போன்றவற்றை உற்பத்தி செய்து கொண்டால் நூற்றுக் கணக்கான தொழிலாளர்களுக்கு அதன் மூலமாக வேலை வாய்ப்புக் கிடைக்கும். அரசாங்கத்தினுடைய தேவைக்கேற்ப டயர், டியூப், இருக்கைகள் இவற்றை உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பு அங்கே இருந்தும்கூட அதைச் செய்யவில்லை, இந்த நிதியாண்டிலே அந்தத் தொழிற்சாலை உருவாக்கப்படுவதற்கான வாய்ப்புப் பற்றிச் சொல்லவில்லை. ஆகவே இந்த நிதியாண்டிலே யாவது ஒரு டயர் தொழிற்சாலையை அரசாங்கத் துறையின் மூலமாகவோ அல்லது போக்குவரத்துக் கழகத்தின் மூலமாகவோ ஆரம்பிக்கப் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்த மூலப்பொருளாக அந்த மாவட்டத்திலே சொல்கிற போது தென்னை மட்டை, தென்னைமட்டை நாரிலிருந்து கயிறு, கயிறு பாய், கயிறு மெத்தை போன்ற பொருட்களை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அவைகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு நடவடிக்கை எடுத்தால் நூற்றுக் கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும், அதை யாவது செய்கிறார்களா என்றால் அதுவும் குறைவாகத்தான் இருக்கிறது. அந்த மாவட்டத்திலே மூலப்பொருட்களான மணலும், ரப்பரும், கயிறும், இது போன்று பனைப் பொருள்களும் ஏராளமாகக் கிடைக்கின்ற நிலையிலே கூட நல்ல முறையிலே

பயன்படுத்திக்கொள்கின்ற நிலைமை இல்லை. பனை மரத் தொழிலிலே 15 ஆயிரத்திற்கு அதிகமான தொழிலாளர்கள் ஈடுபடுகின்றனர். ஆகவே இந்தப் பனைப் பொருட்களை வைத்து பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்கின்ற முயற்சியிலே ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உணவுப் பிரச்சினை சம்பந்தப்பட்ட மட்டில் அரசாங்கத்தினுடைய உணவுக் கொள்கையை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. நாங்கள் ஏற்கனவே பலமுறைகள் வற்புறுத்தியிருக்கிறோம். பெரும் நிலப்பிரபுக்களிடமிருந்தும் நடுத்தர விவசாயிகளிடமிருந்தும், வெளி மார்க்கட்டிற்கு வருகின்ற நெல்லைப் பூராவையும் நேரடியாக கொள்முதல் செய்தால் தான் அரசாங்கத்திடம் போதுமான நெல்லும், அரிசியும் கையிருப்பில் இருக்கும் என்று சொல்லி வருகிறோம். குமரி மாவட்டத்திலே 7 சாக்கு 10 சாக்கு விற்பனை செய்கின்ற சிறிய வியாபாரிகளிடமிருந்து லெவி கொள்முதல் செய்யக்கூடிய நிலைமை பற்றி புகார் வந்து கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு தமிழகத்திற்குத் தேவையான நெல், அரிசி, உற்பத்து பெருகியும் கூட விளவங்கோடு, கல்குளம் மலையோரப் பகுதிகளிலும் பிளாண்டேஷன் பகுதிகளிலும் இரண்டு தாலுக்காக்களிலே என்ன முறை கையாளப்படுகிறது என்றால் ஒரு நபருக்கு ஒரு வாரத்திற்கு ஒரு கிலோ அரிசி என்ற முறையில்தான் கொடுக்கப்படுகிறது. ஒரு வாரத்திற்கு 7 நாட்களிலும் தினம் மூன்று வேளை வீதம் 21 வேளைகளுக்கு மொத்தம் 7 கிலோ அரிசிதான் கிடைக்கிறது என்ற நிலையில் பார்க்கிற போது ஒரு வேளைக்கு கொடுக்கப்படுகிற அரிசியை எண்ணிப் பார்த்தால் 400 அரிசிதான் இருக்கும். தமிழ் நாட்டிலே எங்களுடைய தாலுகாவிலே பற்றாக்குறை இருக்கிறது, அதே நேரத்திலே அடுத்த மாநிலம் அதைவிடப் பற்றாக்குறையாக இருக்கின்ற காரணத்தினாலே அங்கே உற்பத்தியாகிற நெல் அடுத்த மாநிலத்திற்குச் செல்கிற பேரபாயம் இருந்து கொண்டிருக்கிறது. வாரத்திற்கு ஒரு நபருக்கு ஒரு கிலோ என்பதை மாற்றி ஒருவருக்கு ஒரு வாரத்திற்கு 2 கிலோ அரிசியாவது தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதியிலே அரிசி வழங்கப்படுகிற ஏற்பாட்டைப் பார்க்கிற போது சங்கரக்கடவு என்ற இடத்திலே இருக்கின்ற மாதிரிக் கடையிலே விநியோகம் செய்த அரிசியில், நாற்றமடிக்கின்ற, புழுக்கூடு கட்டிய 4 மூடை அரிசி கொடுத்தார்கள். அந்த அரிசி இப்படித்தான் இருக்கிறது (கையிலே அரிசியைக் காட்டினார்). நாற்றம் எடுக்கக்கூடிய மட்டைப் பிடித்த உதவாக்கரை அரிசியாகத்தான் இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதை எடுத்துவிட்டு கஞ்சிக்கு சாப்பாட்டிற்கு இலாயக்கான அரிசி வேண்டுமென்று கேட்டால் நல்ல அரிசி தராத நிலைமைதான் நீடிக்கிறது.

அடுத்து, முக்கியமான ஒரு மூலப்பொருள் என்று சொல்லும் பொழுது முந்திரியைப் பற்றிச் சொல்லியாக வேண்டும். 1981-82ஆம் ஆண்டில் முந்திரிச் செடி பயிரிடுவதற்குக் கோடிக் கணக்கான ரூபாய் செலவு செய்வதைப்பற்றிச் சொல்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை யிலே அதன் அளவு குறைந்திருக்கிறது. 1981-82ஆம் ஆண்டில் குமரி மாவட்டத்திலிருந்து 20 கோடி ரூபாய்க்கும் அதிகமான முந்திரி வெளிநாட்டிற்கு ஏற்றுமதி ஆகியுள்ளது. ஆகவே, அந்த மாவட்டம் அயல் நாட்டுச் செலாவணி பெற்றுத் தரும் பகுதி என்பதால், அந்த முந்திரித் தொழிலை நம்பி கிட்டத் தட்ட 50,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அவர்கள் ஒரு ஆண்டில் ஒன்பது மாத காலம் வேலை செய்வ தற்கான வாய்ப்பை உருவாக்கி, நம்முடைய தமிழ்நாட்டிலே தேவையான முந்திரிச் செடிகளை நட்டு தன்னிறைவு பெறு கின்ற திட்டத்தை முறையாகக் கையாள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப் பகுதியில் வேலை செய்யும் அந்தத் தொழிலாளர் களுக்கு என்ன கொடுக்கிறார்கள் என்றால், ஒருநாள் வேலை செய்தால் இரண்டு ரூபாய் அல்லது இரண்டரை ரூபாய்தான் தருகிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளத்தை அமலாக்க வேண்டுமென்று 11 ஆண்டுக் காலமாக கோரிக்கை விடுத்தும் சமீபத்தில்தான் குறைந்த பட்சக் கூலி அளிக்கும் திட்டத்தைப்பற்றி ஆராய்வதற்காக ஒரு கமிட்டியை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதில் உள்ள சங்கடம் என்ன வென்றால், அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் சங்கம் சி.ஐ.டி.யூ சங்கம் மட்டுமே. அந்தச் சங்கத்திற்கு குறைந்த பட்ச சம்பளம் பற்றி ஆய்வு செய்கின்ற மினிமம் வேஜஸ் கமிட்டியில் பிரதி நிதித்துவம் இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே, நான் மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். குறைந்த பட்ச சம்பளத்தைக் கொண்டு வருவதுபற்றி ஆய்வு செய்கின்ற அந்தக் கமிட்டியில் சி.ஐ.டி.யூ. உறுப்பினர்களுக்கும் பங்கைத் தந்து, குறைந்த பட்ச சம்பள சட்டத்தை விரைவில் கொண்டு வந்து அமல் ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பனைபொருள் என்ற வகையில் பார்த்தால் அதில் பல்வேறு உற்பத்திப் பண்டங்களைத் தயார் செய்வதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். அதில் உள்ள சங்கடம் என்ன வென்றால், பனைமரத்திலிருந்து விழுந்து இறந்து போன தொழிலாளர்களின் குடும்பங்களுக்குப் பாதுகாப்பு நிதி என்று இன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த ப் பாதுகாப்பு நிதி—விபத்து நிதி என்பது தொழிலாளர்களின் குடும்பங்களின் கையில் வருவதில்லை. இடையிலே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதாவது உயரமான

மரத்திலிருந்து விழுந்துள்ளதாகச் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கின்ற சான்றிதழ் வழங்கப்படாததால் நிதி மறுக்கப்படுகிறது. அப்படியென்றால், அந்த மருத்துவ அதிகாரி, அந்தத் தொழிலாளி மரத்தின் உயரே ஏறி விழுந்து இறப்பதை நேரிலே பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்ற பொருள் பட ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 1981ஆம் ஆண்டில் 21 நபர்களின் குடும்பங்களுக்கு நிதி கிடைக்கவில்லை என்ற புகார்ப் பட்டியலைகூடக் கொடுத்திருக்கிறேன். ஆனால் இது வரையில் எந்தவிதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை. ஆகவே, அந்த விபத்து நிதி கிடைப்பதற்குக் குறுக்கே உள்ள அந்த ஆணையை மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறினார்கள். ஆனால் இப்பொழுது விதிமுறைகள் மாற்றப் பட்டு உடனடியாகப் பணம் கொடுக்கும் சூழ்நிலை உருவாக்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் யார் யாருக்குக் கிடைக்கவில்லை என்று தெரிவித்தால் உடனடியாகக் கிடைப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்து கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. மணி: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் ஏற்கனவே ஒரு பட்டியலை வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறேன். இன்னும் வேண்டுமானாலும் அந்தப் பட்டியலைத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன்.

அடுத்து, மீனவப் பகுதி மக்களைப் பொறுத்தவரையில் எங்கள் மாவட்டம் இதர மாவட்டங்களை விட வித்தியாசமான இயற்கை அமைப்பைக் கொண்ட ஒரு மாவட்டம் என்பதை உங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். குறிப்பாக இந்த மாவட்டத்தின் கடைசிப் பகுதியாக இருக்கின்ற நீரோடியிலிருந்து குளச்சல் வரையில் அலைகள் அதிக மாகவும், கொந்தளிப்பு அதிகமாகவும் உள்ள பகுதி. 1980, 1981லிருந்து கடல் கொந்தளிப்பின் காரணமாக நூற்றுக் கணக்கான வீடுகள் அடித்துச் செல்லப்பட்டு, அவர்களுக்கு மீண்டும் வீடுகளைக் கட்டிக் கொடுக்காமல் இருக்கிறோம். அந்தக் கல்லரிப்பைத் தடுப்பதற்காக இப்பொழுது சில ஏற்பாடு களைச் செய்து வருகிறார்கள். கடலரிப்பைத் தடுப்பதற்காக கற்களைப் போடுவதால் மீன்பிடி தொழிலாளர்களின் வாழ்க் கைக்குக் குந்தகம் ஏற்பட்டிருக்கிறது. காரணம், அந்தப் பகுதி யிலுள்ள மீன்பிடித் தொழிலாளர்கள் தங்களுடைய வலையை

கடலில் விரித்துவிட்டு வலையின் இருமுனைக் கயிறை இழுத்து வலையைக் கரை ஏற்றுகின்ற ஒரு நிலை இருக்கிறது. இதற்கு கம்பாவலை என்று சொல்லுவார்கள். அந்தக் கம்பாவலையை இழுத்து ஏற்ற முடியாத நிலை இன்றையதினம் அந்தக் கடற்கரைப் பகுதியில் உருவாக்கியிருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், அண்டை மாநிலமான கேரள கடற்கரைப் பகுதியில் கடலரிப்பைத் தடுப்பதற்காக இரண்டு முறைகளைக் கையாள்கிறார்கள். அதாவது, அந்த மீனவத் தொழிலாளர்களின் மொழியில் சொல்ல வேண்டுமென்றால், ஆண்டு என்று சொல்ல வேண்டும். அந்த முறை ஒன்று. இன்னொரு முறை, கடல் அரிப்பைத் தடுப்பதற்குச் சுவர் கட்டுவது, இந்த இரண்டு முறைகளை அங்கே கையாண்டு வருகிறார்கள். அந்த முறையைக் கையாண்டால்தான் அந்தப் பகுதியிலேயிருக்கிற கடலரிப்பை முறையாகத் தடுக்க முடியும்.

(பிற்பகல் 12·30)

அது மட்டுமல்ல, அந்த மீனவத் தொழிலாளர்கள், தாய்மார்கள் 12, 13 மைல் நடந்துதான் சந்தைக் கடைகளுக்கு மீனைக் கொண்டு வர வேண்டிய ஒரு நிலை அந்த மாவட்டத்தில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த மீனவப் பெண்கள் மீண்டும் திரும்பி வருகின்றபொழுது, மீண்டும் 12 மைல் நடந்து வர வேண்டிய நிலையிருக்கிறது. எனவே, அவர்களை ஏற்றிச் செல்வதற்கு தனி வாகன வசதி, போக்குவரத்து வசதி செய்து கொடுத்தால்தான் உதவியாக அமையும். ஏற்கனவே சரக்குகளை, காய்கறிகளை, ஏற்றி வர சில பகுதிகளில் சில பேருந்துகளைக் கொடுத்திருக்கிறார்கள்— வசதியாகவும் உள்ளது. அதுபோன்று ஆத்தூர் இரயுமன் துறையிலும், தேங்காய் பட்டணத்திலும் இருந்து சந்தைக் கடைகளுக்கு மீனை ஏற்றி வருவதற்கு வாகன வசதியைச் செய்து கொடுத்தால்தான் அந்த மீனவத் தொழிலாளிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். அதற்கான வழிவகை செய்து தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய போக்குவரத்துத் துறை சம்பந்தமாக, குறிப்பாக நாங்கள் ஏற்கனவே, இதற்கு முன்னாலே, பல தடவை கிளப்பியிருக்கிறோம், நம்முடைய குளச்சல் துறைமுகத்தை விரிவுபடுத்துவது பற்றி. இந்தத் துறைமுகத்தை வேகமாக விரிவுபடுத்தினால், மணலை ஏற்றுமதி செய்வதற்கும் கயிறை ஏற்றுமதி செய்வதற்கும், முந்திரியை ஏற்றுமதி செய்வதற்கும், இதர பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கும், அதனால் தமிழகத்திற்கு வரக்கூடிய அயல்நாட்டுச் செலாவணியை சம்பா

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

த்துக் கொள்வதற்கும், அந்தச் சம்பாதியத்தின் அடிப்படையில் மத்திய சர்க்காரிடமிருந்து நமக்கு உரித்தான பங்கைப் பெறவும் முறையாக பேரம் பேசுவதற்கு நமக்கு வாய்ப்பிருக்கும். ஆகவே, அந்தத் துறைமுகத்தை விரைவாக விஸ்தரித்து வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் இரண்டுமூன்று பிரச்னைகளைப்பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். நாங்கள் நீண்ட நெடுங்காலமாக ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறோம். அது ஒரு முக்கியமான பிரச்னையாக இருக்கிறது. பள்ளிக்கொட்டம் அணைககட்டு ஒன்று. அதனுடைய ஆய்வுப் பணிகள் முடிவடைந்துள்ளன. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பார்க்கும்போது அதற்கு இடம் இருக்கிறதா என்பது சந்தேகமாக இருக்கிறது. இரண்டாவது மடிச்சல் கால்வாய். மூன்றாவது, விளாத்துறை லிப்ட் இரிகேஷன் ஸ்கீம். இப்படிப்பட்ட இரிகேஷன்ஸ் ஒருபுறத்திலே இன்னொன்று, சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னாலே அமைக்கப்பட்ட பேச்சிப்பாறை நீர்த்தேக்கம். இன்று அதனுடைய நான்குபுறம் ரப்பர் பிளான்டேஷன்கள் வந்துள்ளதன் விளைவாக அந்த நீர்த்தேககத்திலே 15, 20 அடிக்கு மேல் மண் நிரம்பி, இன்று அதன் கொள்ளளவு குறைந்து போயிருககிறது. ஆகவே, அதனை தூர் வாராமல் இருந்தால் பலன் பெற முடியாது. குறிப்பாக, குமரி மாவட்டத்திலே, நீண்ட நெடுங்காலமாக விவசாயிகளுக்குத் தண்ணீர் சப்ளை செய்கின்ற ஒரு பெரிய நீர்த்தேககம் என்கின்ற முறையிலே, அதில் தூர் வாரச் வேண்டும். அதுபோன்று மடிச்சல் காலவாயிலும், அதுபோன்று நெய்யாறு இடதுகரை கால்வாயிலும், சிமெண்ட் லைனிங் இல்லாத காரணத்தாலே, சப்ளைக்கு வருகின்ற தண்ணீர் வீணாகின்ற ஒரு நிலை தொடர்ந்து இருக்கிறது. ஆகவே, இரிகேஷனுக்குத் தூர் வாரும்போது, குமரி மாவட்டத்திலே இருக்கிற பெரிய குளங்கள், 20 ஏக்கர், 100 ஏக்கர்களுக்குப் பாசன வசதி அளிக்கக் கூடிய குளங்களில தூர் வாரி, கரையிலே அவற்றைப் போடாமல், அப்புறப்படுத்தினால் மட்டும்தான் குளத்தின் கொள்ளளவு குறையாமல் பாதுகாக்க முடியும். ஆகவே, அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டு அந்தப் பணியினை செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரு பிரச்னையை மட்டும் நான் கவனத்திற்குக் கொண்டு வந்து முடித்துக் கொள்கிறேன். எங்களுடைய மாவட்டத்தில் 100 ஆண்டுக் கால வரலாற்றைப் பரிசீலித்தால் எந்தவிதமான மதக் கலவரங்களும் இல்லை. ஜாதிக் கலவரங்களும் இல்லை, ஆனால், 1980 இறுதி வாக்கில் இருந்து ஆர்.எஸ்.எஸ். என்ற ஒரு ஸ்தாபனம் உருவானதிலிருந்து 1981லும், 1982லும் பல்வேறு சண்டைகள், சச்சரவுகள், மதக்

கலவரங்கள் ஏற்பட்டுள்ளன. மத கலவரங்கள் ஏற்பட காரணமாக இருக்கிறது ஆர்.எஸ்.எஸ். என்ற அந்த ஸ்தாபனம். ஏற்கனவே 1980ல் அரசினுடைய கவனத்திற்கு, இந்த ஆர்.எஸ்.எஸ். ஐச் சேர்ந்தவர்கள், நம்முடைய அறநிலையத் துறையின் அதிகார வரம்பிற்குள்ளே இருக்கிற கோயில் வளாகங்களுக்குள் ஆயுதப் பயிற்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று, சுட்டிக் காட்டியிருக்கிறேன். ஆனால், எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதிலே, நான் சொல்லிக் கொள்வதெல்லாம், அந்த மாவட்டத்தில் இருக்கிற அறநிலையத் துறைத் தலைவர், அதுபோன்று * * * *

(அமைச்சர் குறுக்கீடு)

அது தவிர்க்கப்படவில்லையென்றால், ஆர்.எஸ்.எஸ்.னுடைய ஆயுதப் பயிற்சி போன்ற நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வில்லையென்றால், அங்கு மதக் கலவரங்கள் தொடர்ந்து நடக்கும். அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் மாற்றப் பட்டாக வேண்டும்.

அடுத்து ஒரு முக்கியமான பிரச்சினையைப் பற்றிச் சொல்லி முடித்து விடுகிறேன். ஏற்கனவே 2 மாதங்களுக்கு முன்னால், சுசீந்திரம் கோவிலில் இருந்து 7 கிலோ தங்கத்தை எடுத்து வந்து சென்னையிலே விற்பனை செய்ததாக தகவல் வந்திருக்கிறது. (அமைச்சர் குறுக்கீடு)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்த ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினுடைய தூண்டுகோலராக அங்கே இருக்கின்ற * * * * என்ற ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறார். அது அவ்வளவு பொருத்தமாக இருக்குமா ? இன்னறயதினம் நடந்து கொண்டு இருக்கின்ற அந்த நிலைமையில் ஒரு கட்சியினுடைய பொறுப்பிலே இருக்கக் கூடிய ஒருவரை அதோடு சேர்த்து பேசுவது என்பது சரியாக இருக் காது. அப்படி இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை சட்டசபையிலே சொல்வதை விட, அதைத் தலைவரிடத் திலோ அல்லது காவல் துறையினரிடத்திலோ சொன்னால் அதை ஆராய்ந்து எது உண்மை என்று பார்ப்பதற்கு சரியாக இருக்கும். அதை சட்ட சபையில் சொல்வது சரியாக இருக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையிலே இல் லாத ஒருவரைப் பற்றிப் பேச வேண்டாம். அந்த வாக்கியங்களை நீக்கவேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

**** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. டி. மணி : ஏற்கனவே அந்த மாவட்டத்திலே இருக்கின்ற நிலையைப் பற்றிதான் சொன்னேனே தவிர, வேண்டும் என்றோ அல்லது குற்றம் சாட்டுகின்ற முறையிலோ நான் சொல்லவில்லை. அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் இந்தத் தங்கத்தை விற்பனை செய்துள்ளார்கள். அது பகிரங்கமாக விற்பனை செய்யப்பட்டதா அல்லது ஏலம் விடப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, 100 கோடி ரூபாயிலே குழந்தைகளுக்கு உணவளிக்கும் திட்டத்தை சொல்லி இருக்கிறீர்கள். அதை வரவேற்கிறோம். அதை எப்படி அமுலாக்கப்போகிறீர்கள் எனபது தான் பிரச்சினை. அந்த 100 கோடி ரூபாய் சொல்லக்கூடிய அதே நேரத்தில்தான் 100 கோடி ரூபாய்க்கு 3 கப்பல்கள் வாங்கப் போவதாக செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது. அது சரிதானா, அதை ஏன் இந்த பட்ஜெட்டிலே தெரியப்படுத்தவில்லை என்று கேட்டு, எங்கள் மாவட்டத்திலே இருக்கின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அவசரமான நடவடிக்கைகளை மேற்கொள் வேண்டும் என்று கோரி விடைபெறுகிறேன்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, அரசியல் வழிமுறையில் நடப்பவர்களும், நாட்டில் கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டை, வழிமுறைப் படுத்தி, நிலைநிறுத்த முடியும் என்பதை இந்த மன்றத்தின் வாயிலாக இந்த நாட்டிற்கும் எடுத்து உரைத்த பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு ஜூன் 17 ஆம் நாள் அன்று தனது முதல் வரவு-செலவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, 'வரவு-செலவுத் திட்டம் இன்றைய அரசின் குறிக்கோள்களை நிறைவேற்றும் ஒரு கருவியாக விளங்கும் வண்ணம் உருவாக்கும் போது நமது கூட்டாட்சி அமைப்பில் எத்தகைய வரம்புகளுக்கு உட்பட்டு மாநில அரசுகள் இயங்கவேண்டியுள்ளன என்பதை நாட்டத்திற்கொள்ளுதல் வேண்டும். அரசியல் அமைப்பின் விதித் துறைகள் மத்திய அரசுக்கு ஊட்டங்கள் கொடுக்கும் முறையிலே அமைந்திருப்பது ஒரு புறமிருக்க, கடந்த காலங்களில் திட்டமிட்ட பொருளாதார அமைப்பின் கீழ் எழுந்த நெறி முறைகளும், வளர்ந்த மரபுகளும், மாநிலங்களை மெலியச் செய்து, மத்திய அரசினை மேலும் வலுவூட்டும் போக்கில் அமைந்துள்ளன.

அயல்நாட்டு வாணிபம், நாணயச் செலாவணிக் கொள்கை கடன கொள்கை முதலியன குறித்து அரசியல் அமைப்பில் வகை செய்துள்ள அதிகாரங்களின் கீழ், தமது பொருளாதாரம் முழுவதையுமே நெறிப்படுத்தும் பொறுப்பு மத்திய அரசிற்கே உரித்தாக்கப்பட்டுள்ளது, என்ற கருத்தைக கூறி அரசியல் அமைப்

பில் ஏற்படுத்தவேண்டிய மாற்றங்களையும், நிதிக் கமிஷன் என்று சொல்லப்படுகிற அந்த நிதிக் குழு, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை கூடி, மாநிலங்களுக்கு வேண்டிய நிதி ஆதாரங்களைப் பற்றி விவாதிப்பதை, ஆண்டுக்கு ஒரு முறை கூடவேண்டும் என்று வலியுறுத்தியதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன். அதைத்தான் நமது நாவலர் அவர்கள் அளித்திருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையில் மத்திய அரசாங்கத்தினுடைய நன்மை தீமைகள நமது மாநிலத்தையும் வந்து தாக்குகிறது என்று எடுத்துக்கூறி இருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தினுடைய நன்மைகளில் நாம் பெறுகிற நன்மைகளைக் காட்டிலும் மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்கிற இடர்பாடுகளைத்தான் நாம் அதிகமாக தாங்கிக்கொள்கின்ற நிலை இருக்கிறது என்ற நிலையை உணர்த்துவதற்கு இந்த நிதிநிலை அறிக்கையில் இது சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது என்பதை இங்கே குறிப்பிடுவது எனது கடமை என்று கருதுகிறேன்.

293 ஆவது அரசியல் சட்டப் பிரிவின் கீழ் நேரடியாகவும் ரிசர்வ் வங்கி மூலமும் மாநில அரசாங்கத்தினுடைய நிதி திரட்டும் அதிகாரங்களைக் கூட, பாதிக்கின்ற மத்திய அரசாங்கத்தினுடைய இந்த அதிகாரம் மறுபரிசீலனைக்கு உரியதாக இருக்கும் என்ற கருத்தினை இன்றாவது நாட்டை ஆண்டு கொண்டிருக்கின்ற அரசு உணரவேண்டும் என்று அண்ணா அவர்கள் கருத்தினை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12.40).

இருக்கின்ற நிதி ஆதாரங்களைக் கொண்டு தமிழக அரசு தனது சீரிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இயன்ற அளவிற்கு முயற்சி செய்து தீட்டியிருக்கிற திட்டம் தான் இந்த பட்ஜெட் என்பதை மாற்றுக் கருத்து உடையவர்களும் ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். எத்தகைய கொள்கைகளை நாம் ஏற்றுக்கொண்டோமோ, எந்தக் கொள்கைகளை முன் வைத்து இம்மாநில ஆட்சியை ஏற்று நடத்தும் பொறுப்பை இந்த அரசு ஏற்றுககொண்டதோ, அந்தக் கொள்கைகளை இயன்ற அளவுக்கு இத்தகைய வரைமுறை இருப்பினும், இத்தகைய இடர்பாடு இருப்பினும்— அதை உளமாற செயல்படுத்தவேண்டும் எனகிற இந்த அரசின உளமார்ந்த நம்பிக்கையின் விளைவுதான் இன்றியமையாத திட்டங்கள் என்று நாங்கள் கருதுவதை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்து இருக்கிறோம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதை, இன்றைய புரட்சித் தலைவர் அவர்கள அரசு நிறைவேற்றும் வகையில் முயற்சிகளை எடுத்துககொண்டு இருக்கிறது என்பதை இந்த நிதிநிலை அறிக்கை நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

இந்த நீதி நிலை அறிக்கையில் நீதிக்குத் தலைவணங்கும் புரட்சித் தலைவர் அவர்கள் சமுதாய நீதியை அளிக்க முன்வந்து இருக்கிறார்கள். நீதி என்பது நீதிமன்றங்களில் வழங்குவது மட்டுமல்ல. மக்கள் மன்றத்தில் நீதியைப் பெற்றுத்தான் நாம் இங்கே வந்து இருக்கிறோம். அந்த நீதிககுத் தலைவணங்குகிற தன்மையில் தான், அந்த அடிப்படையில் தான் மக்களுக்கு ஏற்படுத்த வேண்டிய, முறைப்படுத்தவேண்டிய நீதியை வழங்குவதற்குத்தான் இந்தத் திட்டத்தில் பல நல்ல அம்சங்களைச் சேர்த்து இருக்கிறோம் என்பதை மாற்றுக்கருத்து உடையவர்கள் தயவு செய்து அருள் கூர்ந்து உணரவேண்டும்.

இன்றைக்கு நடைமுறைப்படுத்த இருக்கிற திட்டங்கள், ஏழைகளுக்கு உணவு அளிப்பதும், வயது முதிர்ந்தவர்களுககு உதவி தொகை அளிப்பதும் இன்று ஒரு வேளை உணவுக்குககூட வழி இல்லாமல் இருக்கிற ஏழை தாய்மார்களுக்கும் அவர்களுக்கு இருக்கின்ற குழந்தைகளுக்கும் உணவு வழங்க வேண்டும் என்ற வகையில் ஒரு திட்டத்தைக கொண்டு வந்து சமுதாய நீதி வழங்குவதற்கு முன்வந்து இருக்கிறார்கள். இந்த நேரத்தில் நான் நீதியைப் பெறுவதற்காகச் செல்கின்றவர்களைப் பற்றி குறைவாக எதையும் சொல்ல நான் விரும்பவில்லை. ஆனால் நீதியை மதிப்பவர்கள், நம்முடைய அரசின் தரப்பில் இருப்பவர்கள், புரட்சித் தலைவர் அவர்கள் என்பதை மட்டும் நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். மாண்புமிகு உச்சநீதி மன்ற நீதிபதி கைலாசத்தைப் பற்றிக் குறிப்பிடுகிற போது குடும்ப நீதிபதி என்றும், மாண்புமிகு நீதிபதி சதாசிவத்தைப் பற்றிக் குறிப்பிடும்போதும், பேசும்போதும், எழுதும் போதும் 'ஆஸ்தான நீதிபதி' என்றும், நீதிபதிகளை இழிவு படுத்துகின்ற அந்த எண்ணம், அந்த மனப்போக்கு எள்ளளவும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இல்லை என்பதை நாட்டு மக்கள் உணர்ந்து இருக்கிறார்கள் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு இந்தியாவிற்கு அத்தியாவசியத் தேவை என்று சொல்லி பாரதப் பிரதமர் அவர்கள் 20 அம்சத் திட்டத்தை அறிவித்து இருக்கிறார்கள் அதிலே பல நல்ல அம்சங்கள் உள்ளடங்கியிருக்கின்றன. அந்த 20 அம்சத் திட்டத்திலே இருக்கின்ற திட்டங்களை நிறைவேற்றுகின்ற வகையில் இந்த நிதிநிலை அறிக்கையிருக்கிறது என்று சொன்னால், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வேறுவிதமாகச் சொல்லக்கூடும். மக்களுக்கு நீதி வழங்க எந்தத் திட்டம் அவசியம் என்று மைய அரசு கருதுகிறதோ அதையே மாநில அரசுகளும் நிறைவேற்றத் தன்னைத் தயார் படுத்திக்கொண்டு இருக்கிறது என்பதால் இரண்டு கருத்துகளும் ஒன்றாயிருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

இருபது அம்சத் திட்டத்திலே முதல் அம்சம்

" Inerease irrigation potential, develop and dissemiuate technologies and inputs for dry land agriculture. "

என்று இருக்கிறது. இதை நாம் தயவு செய்து கருத்தில் கொள்ளவேண்டும். கோவை, இராமநாதபுரம் மற்ற வரண்ட மாவட்டங்கள் எல்லாம் இன்று நீரின்றி தவித்துக்கொண்டு இருக்கின்றன. அந்தப் பகுதி விவசாயிகளின் நிலையை தயவு செய்து காங்கிரஸ் கட்சி நண்பர்கள் நினைவில் எடுத்துக்கொள்ள வேண்டும். இன்றைக்கு ‘ட்ரை’ கல்டிவேஷனுக்கு’ நீர் பெற்றுத் தரும் பொறுப்பு, மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளில் இருந்து நீர் வீணாகிச் செல்வதை நமக்குப் பெற்றுத் தரும் பொறுப்பு மைய அரசுக்கு இருக்கிறது. அந்த வகையில் கோவையில் இருக்கின்ற பாண்டியாறு-புன்னம்புழா திட்டமாக இருந்தாலும், பவானி நொய்யலாறு இணைப்புத் திட்டமாக இருந்தாலும், அந்தத் திட்டங்களை வழிமுறைப்படுத்த அந்த 20 அம்சத் திட்டத்தில் முதல் அம்சமாக உள்ள இந்தத் திட்டங்களை நிறைவேற்ற, அந்த 20 அம்சத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு இருக்கிறவர்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதனால்தான் தமிழ்நாடு முன்னேற முடியும்; தமிழ்நாட்டில் இருக்கிற வறட்சிப் பகுதிகள் வளம்பெற முடியும். ஆகவே, உங்களுடைய 20 அம்சத்தைத்தான் நாங்கள் செயல்படுத்துகிறோம் என்று சொல்லுகிற அதே நேரத்தில் அந்த அம்சத்தைக் கொண்டிருக்கிற நீங்கள் அதிக அக்கறை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல 4-வது அம்சத்தில்

Implement agricutural land ceilings, cistrybute surplus land and eomplete compilation for land records by removing all administratiie and legal obstacles.

என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, நீதித் துறையின் மூலம், கோர்ட்டுகள் மூலம், நிர்வாக சிக்கல்கள் காரணமாக தடைப்படுத்தப்பட்ட நில உச்ச வரம்புச் சட்டத்தின் முழு பலனையும் பெற்று தர வேண்டுமென்பதுதான் இந்த 4-வது அம்சம். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்களுக்கு இதை நினைவூட்ட விரும்புகிறேன். இந்த 4-வது அம்சத்தை நிறைவேற்றுவதில் இந்த அரசுக்கு எவ்வளவுஙூரம் மத்திய அரசு உதவி இருக்கிறது என்பதை நீங்கள் உணரவேண்டும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[திரு. மா. சின்னராசு] [1982 மார்ச் 3

1958-வது ஆண்டுச் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற சில ஓட்டை உடைசல்களை வைத்துக்கொண்டு அதை தங்களுக்கு சாதகமாக்கிக்கொண்டு அந்த நிலபுலன்களின் உடைமையைக் காப்பாற்றிக்கொண்டார்களே அவர்களை நாம் அடையாளம் காட்டி, எந்த நோக்கத்திற்காக நாம் சட்டம் கொண்டு வந்தோமே அந்த நோக்கம் ஈடேறுகின்ற வகையில், இப்போது அந்தச் சட்டத்திற்கு இருக்கிற தடை 'அட்மினிஸ்ட்ரேட்டிவ்' தடையாக இருக்குமானால் அதை நீக்குவதற்கு நீங்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டும். இது உங்களுடைய 20 அம்சங்களில் மிக முக்கியமான அம்சம்.

அதைப்போல நான் இன்னொரு அம்சமும் இருக்கின்றன. அதாவது 15-வது அம்சம். இந்த நிதிநிலை அறிக்கையில் அந்த 15-வது அம்சம் இடம் பெற்றிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் திருமதி யாசோதா அம்மையார் அவர்கள் கூட பார்க்கவில்லை என்று கருதுகிறேன். அதனால்தான் இதிலே நூல் இல்லை, வால் இல்லை என்று எல்லாம் சொன்னார்கள்; கேட்க அழகாகத்தான் இருந்தது. 15-வது அம்சத்தில்

" Accelerate programmes of welfare for women and children and nutrition programmes for pregnant women, nursing mothers, specialy in Tribal Hill and Backward areas."

என்று இருக்கிறது. ஆக ஏழை எளிய தாய்மார்களுக்கு சத்துணவு ஊட்டுவது உங்களுடைய 15-வது அம்சம். அந்த அம்சத்தைக் கூட நிறைவேற்றுவதற்கு இந்த அறிக்கையிலே 100 கோடி ரூபாய் திட்டத்தைச் சொல்லியிருக்கிறோம். நீங்கள் அறிவித்தத் திட்டத்தை. நாங்கள் ஏற்றுக்கொண்டோம் என்று சொல்ல வில்லை. நீங்கள் அறிவித்து, நீங்களோ நிறைவேற்ற வேண்டுமென்று எண்ணியிருக்கிற அந்த "நீட்ரீஷியஸ் புட்" திட்டத்தை நாங்கள் நிறைவேற்றுகின்ற முறையில் 100 கோடி ரூபாய்த் திட்டத்தை எங்கள் புரட்சித் தலைவர் அரசு தீட்டியிருக்கிறது.

இதை எல்லாம் திட்டம் இல்லை என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சொல்கிறார்கள் என்றால் அதைப்பற்றி நாங்கள் அவ்வளவு அக்கரையோடு சிந்திக்க மாட்டோம். ஆனால் காங்கிரசில் இருக்கிற உறுப்பினர்கள் இதில் ஒன்றும் இல்லை என்று சொல்லும்போதுதான் என்னைப் போன்றவர்களுக்கு வருத்தமாக இருக்கிறது. 100 கோடி ரூபாய் திட்டத்தில் குழந்தைகளுக்கு, அதுவும் 2 முதல் 10 வயதுவரையுள்ள குழந்தைகளுக்கு சத்துணவு அளிப்பது என்றால் அது உங்களுடைய அம்சத்தில் வருகிற ஒன்றுதான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1982 மார்ச் 3] [திரு. மா. சின்னராசு]

அதைப்போலவே உங்களுடைய 20 அம்சத்தில் 17-வது அம்சத்தை நிறைவேற்றுகின்ற நல்ல திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள் என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பப்ளிக் டிஸ்டிரிபியூஷன் பற்றி 17-வது அம்சத்தில் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு இந்த நிதிநிலை அறிக்கையில் வழிவகைச் செய்யப்பட்டிருக்கிறது.

அதைப்போல தொழில் துறை முன்னேற்றத்திற்கும் நல்ல பல திட்டங்கள் இருக்கின்றன. அதைப் பொறுத்தவரையில்

B, improving public enterprise and increasing the capacity utilisation to generate more internal resources.

என்று இருக்கிறது. இப்போது பொது நிறுவனங்களை இலாபகரமாக நடத்துதவற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது நம்முடைய போக்குவரத்துத் துறை. இந்தத் துறையில் அண்மை காலத்தில் நடந்திருக்கிற அபாரமான சாதனைகள் இந்திய துணைக் கண்டத்திற்கே எடுத்துக்காட்டாக இருக்கிறது.

அதைப்போலதான் பவர் ஜெனரேஷனும். பவர் ஜெனரேஷன் ஒரு முக்கியமான அம்சம். மின்சார உற்பத்திற்கு இன்று நாம் பெருமளவில் செலவு செய்வதுதான் இன்றைக்கு நாம் பற்றாக்குறை பட்ஜெட் சமர்ப்பிப்பதற்கான ஒரு முக்கிய காரணமாகும். மின்சார உற்பத்திற்கு பல கோடிக்கணக்கில் செலவு செய்கின்ற மத்திய அரசு, அதை ஒரு முக்கிய அம்சமாக ஏற்றுக் கொண்டிருக்கிற மத்திய அரசு, நம்முடைய மின்சார உற்பத்தித் திட்டங்களுக்கு ஏன் உதவி அளிக்கக்கூடாது? இன்று காலையிலே கூட அது பற்றி இங்கே சுட்டிக்காட்டினார்கள்.

(பிற்பகல் 12.50)

அதை மானியமாகக் கொடுக்காமல் தனது திட்டத்திலே இருந்து பிடித்துக் கொள்கின்றது. மத்திய அரசு. அதனுடைய முக்கியமான ப்ரொடக்ஷன் ஓரியன்ட் திட்டமான பவர் ஜெனரேஷனுககாக மேலும் நிதியுதவி அளிப்பதற்கு முன்வர வேண்டும். அந்த நிதியை நிச்சயமாகப் நமது அரசு பெறுவதற்கு முயற்சி செய்யும். மாநில அரசினுடைய திட்ட அளவு என்றும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டில் உயர்ந்தபட்சக் குறியீடாகப் பெற்று வந்த நமது அரசு நிச்சயமாக வருகின்ற காலங்களில் அந்த முயற்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் என்பதில ஐயமிலலை. அந்த ஈடுபாட்டுக்கோ, அந்த முயற்சிககே மத்திய அரசினை ஆளுகின்றவர்களும் மத்திய அரசினுடைய பிரதிநிதியாக இங்கே இருககிறவர்களும், நாட்டு நலனில் அக்கறை கொண்டவர்களும் இன்று ஒன்று சேர்ந்து பாடுபடவேண்டும். தமிழக மக்கள் எதிர்ப்பார்ப்பதெல்லாம் உற்பத்தி பெருகவேண்-

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

டும், வேலைவாய்ப்பு ஏற்பட வேண்டும், எல்லோரும் உண்கின்ற அளவுக்காவது உணவைப் பெருக்கி வேலைவாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான். இந்த ஒட்டுமொத்த நன்மைகளை கூட மனதில் கொள்ளாமல், நம்முடைய கொள்கைகளைக் கூட வரவேற்பதில்லை. ஆகவே இப்படிப்பட்ட நிலைமையினை உணர்ந்து எந்த கட்சிக்காரர்களாக இருந்தாலும் பவர் ஜெனரேஷனுககாக மத்திய அரசிடத்திருந்து நிதி உதவி பெறுவதாக இருந்தாலும், நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்காக திட்டங்களானாலும் ஒகேனக்கல் போன்ற நதி நீர்த் திட்டங்களாக இருந்தாலும் எல்லோரும் ஒன்றுபட்டு மத்திய அரசுக்கு வேண்டுகோள்விடுக்கவும் பெறுவனவற்றை நமக்கு உரிய உரிமையோடு பெறுவதற்கும் நம்மை நாம் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அந்த வகையிலே நல்ல நெறி முறையிலே அறிஞர் அண்ணா அவர்கள் நமக்கு காட்டிச் சென்ற நெறியிலே மாநில அரசுகளுக்கு உரிய அதிகாரங்களைப் பெருகின்ற அதே நேரத்தில மாநில மக்களுக்கு வேண்டிய சமூக நிதியையும் வழங்குவதற்கு நாம் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வருகின்ற பட்ஜெட்டுகளில் அதற்குத் தர வேண்டிய முன்னுரிமைகள் எல்லாம் மறுக்கப்படுகின்றன. அது முன்னேறிவிட்ட மாவட்டம் என்பதால் தொழில் துறையிலே சிறந்த ஒரு மாவட்டம் என்பதால் பல சலுகைகள் அதற்கு சில காலங்களாக இல்லாமல் இருந்து வருகின்றது. தொழில் துறையிலே முன்னேறிய மாவட்டம் என்பது உண்மை, தொழிற்சாலைகள் நிறைய உள்ளன என்பதும் உண்மை. ஆனால் அந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் தனிப்பட்டவர்கள் நடத்துகின்ற தொழிற்சாலைகள். அதிலே வேலைபார்க்கின்றவர்கள் எல்லாம் பெருமளவில் பெரும்பாலும் தொழிற்சாலை நடத்துகின்றவர்களின் உறவினர்களாகத்தான் இருப்பார்கள். ஆகவே அங்கேயும் வேலையில்லாத் திண்டாட்டம் மற்ற மாவட்டங்களில் எப்படி இருக்கிறதோ அதே நிலையில்தான் இருக்கிறது. இதை என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் உணர்ந்திருக்கிறோம். அந்த மாவட்டத்திலுள்ள பெருவாரியான மக்கள் தொகையினை மனதில் கொண்டு அங்கே அரசு ஒரு பெரிய தொழிற்சாலையைத் துவக்க முன்வரவேண்டும். மத்திய அரசும்கூட திருச்சியிலும் சென்னையிலும் இருப்பது போன்ற பெரிய தொழிற்சாலைகளை அங்கே அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டால்தான் பெருகி வரும் அந்த மக்களுக்கு வேலைவாய்ப்பினைத் தருகின்ற வாய்ப்பு ஏற்படும்.

அடுத்து அங்கே கரும்பு நிறைய சாகுபடி செய்கிறார்கள். அப்படி என்னுடைய பகுதியிலே நிறைந்த அளவிலே கரும்பு சாகுபடி செய்கின்ற விவசாயிகளுக்கு உவவு

கின்ற வகையிலே அங்கே ஒரு சர்க்கரை ஆலை இல்லை. தற்போது பெரியார் மாவட்டத்திலே மேலும் ஒரு சர்க்கரை ஆலையினை ஏற்படுத்துவதற்குரிய முயற்சிகள் பற்றி நாம் கேள்விப்படுகிறோம். ஆனால் கோவை மாவட்டத்திலே என்னுடைய பகுதி யிலே விவசாயிகளின் நிலத்திலே விளைந்த கரும்பை ஆலையின் கூலி ஆட்களே வந்து வெட்டி எடுத்துக்கொள்ளுங்கள் என்று கூடச் சொல்லிவிட்டார்கள். ஆனால் அதற்கு அவர்கள் கட்டுபடியாகாது என்றும் நாங்கள் எடுத்துக்கொள்ளமாட்டோம் என்று சொல்கின்ற அளவுக்கு அந்த விவசாயிகளின் நிலைமை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தற்போது சித்தூரில்தான் ஒரு சர்க்கரை ஆலை இருக்கின்றது. கேரள மாநிலத்தில் ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக அவர்கள் கரும்பை எடுக்க தயாராக இல்லை. அமராவதிக்கு வெளி இடங்களில் இருந்து கரும்பு வந்துகொண்டுஇருக்கின்றன. ஆகவே அங்கே அத்தியாவசியத் தேவையாக இருக்கிற சர்க்கரை ஆலையினை இந்த நிதியாண்டிலேயாவது ஏற்படுத்த அரசு முயற்சிக்க வேண்டும் என்று நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கி-றேன்.

அடுத்து கொங்கு நாட்டிற்கு சிறப்பினைத் தருவது கோவை மாநகரம். மாநகராட்சியாக நமது புரட்சித் தலைவர் அவர் களால் அறிமுகப்படுத்தப்பட்டதற்கு பின்னர் அந்த நகரத்தி னுடைய வளர்ச்சியையும் அதனுடைய மக்கள் தொகையையும் கருத்தில் கொண்டு அதற்காக ஒரு சிறந்த திட்டத்தை, மெட்ரோபாலிட்டன் டெவலப்மென்ட் அத்தாரிட்டி என்று சென்னையிலே இருப்பது போல் அந்த இடத்திற்காகவும் ஒரு திட்டத்தை தீட்டி அந்த மாநகரம் சிறந்த முறையிலே வளர்ச்சி அடைவதற்கு நமது அரசு உதவவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறுவாணி நீர் பெறுகின்ற அந்த மாநகரத்தோடு இணைக்கப் பட்ட ஏரியா என்று சொல்லப்படுகின்ற தங்கநீர் போன்ற பகுதிகளும் குடிநீர் பெறுகின்ற வகையிலே ரிவைஸ்ட் எஸ்டி மேட் போட்டிருக்கிறார்கள். அதன்படி 16 கோடியில் இருந்து 22 கோடியாகக் கூட்டி இருக்கிறார்கள். அந்த 22 கோடிக்கும் உடனடியாக அங்கீகாரம் தந்து இணைக்கப்பட்ட பகுதியில் இருக்கின்ற மக்களும் நல்ல நீரினைப் பெறுவதற்கு அரசு விரை வாக முயற்சி எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். தற்போது கோடை காலம் வருகின்றது. அந்தக் காலத்திலே அங்கே நீர் கிடைக்கவில்லை என்றால் அங்குள்ள மக்கள் ஓரளவுக்கு ஆத்திரத்திற்கு ஆட்படுவார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி, அதற்கான முயற்சிகளை எடுத்து நமக்குப் பெருமையைத் தேடித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது உரையை முடிக்கின்ற நேரத்தில்

"ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்".

என்று சொல்லிய வள்ளுவனின் வாக்குப்படி, பசியை அடக்கிக் கொள்ளக்கூடிய ஆற்றலைப் பெற்றவர்களைக் காட்டிலும், பிறர் பசியைப் போக்குகிறவர்களே சிறப்பான பெருமையை உடையவர்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக, நாட்டில் உள்ள அனைத்து மக்களின் பசியையும் போக்குவதற்கு இயலாவிடினும் ஏழைக் குழந்தைகளின் பசியையாவது ஒரு வேளை போக்கலாமே. என்ற நல்ல எண்ணத்தின் காரணமாக முயற்சி செய்து புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த 100 கோடி ரூபாய் திட்டத்தினை, தயவு செய்து, புரிந்துக் கொள்ளாமல் யாரும் குறைகூறிவிடாதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிக் குறைகூறுவதின் மூலம், அந்தத் திட்டம் தடுத்து நிறுத்தப்பட்டு விடுமோ என்று ஏங்கிக் கொண்டிருக்கிற ஏழைத் தாய்மார்கள், அடப்பாவிகளே, இந்த நல்ல திட்டத்தை நிறைவேற்றுவதற்குக் கூட முடியாமல் தடை செய்வதற்கு முயற்சி எடுக்கிறீர்களே என்று கேட்டு விடக்கூடும், ஆகவே அதற்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய 1982–83-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்று நான் கருதுகிறேன். அந்தப் பட்ஜெட்டில் சுமார் 204·44 கோடி ரூபாய் அளவிற்கு பற்றாக்குறை இருப்பதாக கூறப்பட்டுள்ளது. பற்றாக்குறை பட்ஜெட்டாக இருந்தாலும் கூட பரவாயில்லை—ஆனால் அந்த பட்ஜெட்டிலே கூறப்பட்டிருக்ககூடிய பல்வேறு அம்சங்களை பற்றி பார்க்கிறநேரத்தில், விவசாயிகளுடைய பிரச்னைகளைப் பற்றியோ, அரசு ஊழியர்களுடைய ஊதியம் குறித்த பிரச்னைகளைப் பற்றியோ, வேலையில்லாத பட்டதாரி இளைஞர்களுக்கு நிவாரணம் வழங்கக்கூடிய பிரச்னைகளைப் பற்றியோ, இந்தப் பட்ஜெட்டிலே எதுவும் சொல்லப்படாதது மிகவும் வருத்தத்திற்குரியதாக இருக்கிறது.

அதேபோல தனியார் துறையில், தொழில் அதிபர்கள் அதிகமான லாபத்தை சம்பாதிப்பதற்காகவும் அரசு துறைகள், கூட்டுறவுத் துறைகள், மற்ற அரசு நிறுவனங்களுக்கெல்லாம் ஊக்கம் அளிக்கக்கூடிய பட்ஜெட்டாக இல்லாமல், தனியார் துறையில்

இருக்கக்கூடிய தொழில் அதிபர்கள் தங்களுடைய லாபத்தை அதிகப்படுத்திக் கொள்வதற்குமான வழி வகைகளை இந்தப் பட்ஜெட்டிலே செய்திருப்பதாகவும்தான் நாங்கள் கருதுகிறோம்.

மேலும் விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் போன்றவைகளுக்கெல்லாம், மத்திய அரசாங்கத்தினுடைய பட்ஜெட் வெளியீடுதான் முக்கிய காரணமாக இருந்தாலும் கூட, மாநில அரசும் தன் பங்குக்கு இதில் நிவாரணம் காண முழு முயற்சியோடு ஈடுபட்டிருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். சமீபத்தில் மத்திய அரசாங்கம் சமர்ப்பித்திருக்கக்கூடிய பட்ஜெட்டானாலும் சரி அல்லது இப்பொழுது மாநில அரசு தயாரித்து அளித்திருக்கக்கூடிய பட்ஜெட்டானாலும் சரி, பற்றாக் குறை பட்ஜெட்டுகளாகவே அவைகள் இருக்கின்றன.

நம்முடைய இந்திய சர்க்காரைப் பொறுத்தவரை, இது வரையில் அரசு கொடுத்திருக்கக்கூடிய கணக்கின்படி 15,000 கோடி ரூபாய் வரையில் நம் நாடு வெளிநாடுகளிலிருந்து கடன் பெற்றிருக்கிறது. இன்டர்நேஷனல் அமைப்புகளிடமிருந்து 5,000 கோடி வரையில் கடன் பெற்றிருக்கிறார்கள். மற்ற இடங்களிலும் கடன் வாங்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒட்டு மொத்தமாக 15,000 கோடி ரூபாய் அளவில் கடன் பெற்றிருக்கிற காரணத்தால், இந்திய நாடு முழுவதும் பெரும் வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டமும், ஏற்பட்டு, பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாக, வறுமை கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுடைய எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே போகிறது என்பதோடு, விலைவாசி ஏற்றத்தை தடுப்பதற்கான சூழ்நிலையே இல்லாமல் இருந்து வருகிறது.

ஆனாலும், விலைவாசி ஏற்றத்தைக் குறைப்பதற்கு மத்திய அரசாங்கம் அதிகமான அளவில் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் என்பது இருந்தாலும்கூட, அவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை, ஆகவே இந்தச் சூழ்நிலையில் மாநில சர்க்கார் எதுவும் செய்ய முடியாது என்று சொல்வதை நாங்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கிறோம். மாநில சர்க்காருக்கும் விலைவாசிக் குறைப்பதில் பங்கு உண்டு. இந்த சர்க்காரும் சில பல நடவடிக்கைகளை அதன் காரணமாக எடுக்கவேண்டும். ஆனால் அப்படி நடவடிக்கைகளை எடுக்க இந்த அரசு தவறி இருக்கிறது என்று நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், மத்திய அரசாங்கத்தினுடைய தொழில் கொள்கையின் காரணமாக—அதில் இருக்கின்ற பிரிவுகள் காரணமாக—தமிழகத்தில் பெரிய

பெரிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படாமல் தடுக்கக் கூடிய ஒரு சூழ்நிலை நிலவி வருவதைப் பார்க்கிறோம். வட நாட்டில் தான் பெரிய பெரிய தொழிற்சாலைகள் துவங்குவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றனவே தவிர, தமிழகத்தில் துவங்குவதற்கான அனுமதி தரப்படுவதில்லை என்பது போன்ற ஒரு தொனி இந்தப் பட்ஜெட்டிலே காணப்படுகின்றது.

மத்திய அரசானாலும் சரி, மாநில அரசானாலும் சரி, பட்ஜெட்டில் மத்திய தர வர்க்கத்தினருக்கும், ஏழை விவசாயிகளுக்கும் பாதிப்பு ஏற்படக் கூடிய வகையில் தான் வரிகள் போடப்பட்டிருக்கின்றனவே தவிர, கொள்ளை லாபம் அடிக்கக் கூடிய முதலாளிகள், தனியார்கள், ஆகியோருக்கு அவர்கள் அடிக்கக்கூடிய கொள்ளை லாபத்திற்கு ஒரு வரம்பு கட்ட எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதற்கு இந்த இரண்டு அரசுகளும் தயாராக இல்லை. என்பதோடு, அவர்கள் அடிக்கக்கூடிய அந்த கொள்ளை லாபத்திற்கும் அனுமதி அளித்திருக்கிறார்கள். தொழிலாளர்கள் போராட்டம் நடத்தினால், அந்தப் போராட்டத்தை தடை செய்ய சட்டம் கொண்டு வந்து வரம்பு கட்டுகிறீர்கள். போனஸ் உயர்வு கேட்டால், அப்படிக் கேட்பதை தடை செய்ய சட்டம் கொண்டு வருகிறீர்கள். இப்படி இதற்கெல்லாம் வரம்பு கட்டுகிறீர்களே தவிர. முதலாளிகள் அடிக்கக்கூடிய கொள்ளை லாபத்திற்கு வரம்புக் கட்டக்கூடிய நடவடிக்கைகளை நீங்கள் எடுக்கவில்லை என்று சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1.00)

மதிப்பிற்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட கடந்த ஆண்டு நடைபெற்ற பட்ஜெட் கூட்டத்தில் கூடச் சொன்னார்கள். விவசாயிகள் வாங்கியிருக்கக்கூடிய கடன்கள் முழுவதையும் நாங்கள் ஆட்சியில் இருக்கக்கூடிய காலத்தில் ஆண்டுக்கு ஒரு தொகை வீதம் கழித்து அவர்கள் வாங்கியுள்ள கடன்கள் முழுவதையும் ரத்து செய்து விடுவோம் என்று அறிவித்தார்கள். ஆனால் இந்த ஆண்டு பட்ஜெட்டில் அவ்விதம் விவசாயிகளுக்காக எந்த விதமான சலுகையும் தெரிவிக்கப்படவில்லை. விவசாயிகள் மிகவும் அல்லலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே அவர்கள் வாங்கியிருக்கக்கூடிய கடன்களில் ஒரு சிறிதளவாவது தள்ளுபடி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்திருப்பீர்களானால் நிச்சயமாக விவசாயிகள் பாராட்டியிருப்பார்கள். ஆனால் அந்தநிலை இந்தப் பட்ஜெட்டில் சொல்லப்படவில்லை.

அடுத்து, வட மாலநிலங்களில்தான் பெரிய பெரிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்கக்கூடிய நிலை இருக்கக்கூடிய இந்த நேரத்தில் தமிழ்நாட்டில் ரெயில்பெட்டித்தொழிற்சாலை அமைக்க

மத்திய அரசு ஒரு உத்தரவு போட்டும் கூட, பல்வேறு இடங்களில் அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டும் தமிழகத்தில் ஆரம்பிக்க இருந்த அந்த ரெயில் பெட்டித் தொழிற்சாலை வட மாநிலத்திற்கு மாற்றப்பட இருப்பதாகத் தெரிய வருகிறது. என் தொகுதியாகிய அவினாசித் தொகுதியில் வஞ்சிப்பாளயத்தில் பூர்வாங்க வேலைகள் எல்லாம் நடைபெற்று, அந்தத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான இடமெல்லாம் தேர்ந்தெடுக்கப்பெற்றும் இறுதியில் அதை வட மாநிலத்தில் ஆரம்பிக்க முடியாத சூழ்நிலை இருப்பதாகவும் அறிகிறேன். ஆகவே இந்தத் தொழிற்சாலை தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும். இப்படி இந்த ரெயில்பெட்டித் தொழிற்சாலை ஆரம்பிப்பதால், மத்திய அரசு கொடுக்கக்கூடிய புள்ளிவிவரப்படி கிட்டத்தட்ட பத்தாயிரம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க முடியும். எனவே பூர்வாங்க வேலைகள் முடிந்திருக்கக்கூடிய நிலையில், அவினாசித் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் இந்த ரெயில் பெட்டித் தொழிற்சாலையை ஆரம்பிக்க தமிழக அரசு மத்திய அரசை அணுகி அதற்காக வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என் தொகுதியான அவினாசித் தொகுதியில், நீண்ட மலைப் பிரதேசமாக இருப்பதால், ஐந்தாண்டுகளுக்கு முன்னால் அங்கு கிடைக்கக்கூடிய பாறைகளைப் பரிசோதனை செய்து இந்தப் பாறையில் உள்ள கற்களைக் கொண்டு சிமெண்ட் செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று அதிகாரிகள் முடிவெடுத்திருக்கிறார்கள். அந்தக் கற்களைக் கொண்டு அந்தப் பகுதியில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு வசதி இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்டதொரு தொழிற்சாலையை என் தொகுதியில் ஆரம்பிக்கவேண்டும் என்று தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறித் தொழிலாளர்கள் சம்பந்தமாக ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த ஆண்டு கொண்டுவரப்பட்ட பட்ஜெட் உரையில் கூட கைத்தறி நெசவாளருக்கு 4,000 வீடுகள் கட்டிக் கொடுப்பதாக சொல்லப்பட்டிருந்தது. ஆனால் இந்த பட்ஜெட்டில் கைத்தறி நெசவாளருக்கு கடந்த ஆண்டு சொல்லப்பட்டிருந்ததைப்போல் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டதா அல்லது கட்டாமல் இருப்பதற்கான அடிப்படைக் காரணம் என்னவென்றோ சொல்லப்படவில்லை. எனவே கடந்த ஆண்டு சொல்லப்பட்டிருப்பதற்கிணங்க கைத்தறி நெசவாளர்களுக்கு 4,000 வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு இந்த ஆண்டாவது அதை நடைமுறைப்படுத்த வேண்டும். கைத்தறிக்குத் தேவையான நூலை அரசு மார்க்கட்டிங் சென்டர் ஆரம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பித்து குறைந்த விலையில் வினியோகிக்கவும், உற்பத்தி செய்யும் துணிகளை விற்பனை செய்வதற்கும் அரசு பொறுப்பெடுத்துக் கொள்ளவேண்டும். இடைத்தரகர்களிடம் கொடுத்தால் கைத்தறி நெசவாளர்கள் செத்துப் பிழைக்கக்கூடிய ஒரு நிலை ஏற்படும். எங்கெங்கே கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்களோ அங்கேயெல்லாம் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும். எந்தெந்த மாவட்டங்களில் கூட்டுறவு நூற்பாலைகள் இல்லையோ அந்தயிடங்களில் 32 கூட்டுறவு நூற்பாலைகள் ஆரம்பிப்பதாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் பட்ஜெட்டில் சொல்லப்பட்டிருந்தது. அந்த அடிப்படையில் என் தொகுதியில் 10,000-க்கு அதிகமான கைத்தறி நெசவாளர்கள் குடும்பங்கள் இருப்பதால் அங்கே ஒரு கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையில் மத்திய மாநில அரசுகள் கொடுக்கும் மானியத்தைப் பயன்படுத்திக் கொண்டு தனியார் கல்லூரிகள், பள்ளிகள் அவற்றை வியாபார ஸ்தலங்களாகப் பயன்படுத்திக்கொண்டு வருகின்றன. ஆசிரியர்களுக்கு சம்பளம் சரியாகக் கொடுப்பதில்லை. மாணவர்களிடம் நன்கொடை என்ற பெயரால் கட்டணம் வசூலிப்பதினால் ஏழை மாணவர்கள் படிக்கமுடியாது பாதியில் நிறுத்திவிடும் நிலை உள்ளது.

எனவே, தனியார் கல்லூரிகள், பள்ளிகளை அரசு மேற்கொள்ள வேண்டும். ஆசிரியர்களுக்கு அவசர கால நிலையில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள 'அட்டா' போன்ற பணத்தை திருப்பிக் கொடுக்காமல், வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணத்தை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல், ஆதித்திராவிடர்களுக்கு இந்த பட்ஜெட்டிலே ஒதுக்கி இருக்கக்கூடிய தொகை குறைவாக இருக்கிறது. தமிழகத்தின் முழுவதிலும் இருக்கக்கூடிய ஆதி திராவிடர்களுக்கு பல்வேறு நிலைகளில் பட்டா வழங்கப்பட்டு வருகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால், கொடுத்த பட்டாவில் இருக்கக்கூடிய இடத்திற்குப் போய் பார்த்தால், அந்த இடமே இல்லாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, தமிழகத்திலே இருக்கக்கூடிய ஆதித்திராவிடர்கள், மலை ஜாதியினர் இன்னும் தாழ்த்தப்பட்ட மக்கள் ஒட்டு மொத்தமாக எத்தனை பேர்கள் இருக்கிறார்கள், அப்படி இருக்கக்கூடிய அத்தனை பேர்களுக்கும் வீட்டு மனை இருக்கிறதா, அதற்கான என்ன நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் தமிழக சர்க்கார் தயவு செய்து பார்த்து, தமிழகத்திலே இருக்கக்

கூடிய அத்தனை ஆதித்திராவிட மக்களுக்கும் வீட்டு மனைப் பட்டா கொடுப்பதற்கான உத்திரவாதத்தினை ஏற்படுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். வீட்டு மனைப் பட்டா இல்லாத ஒரு நிலையில், அரசு அறிவித்திருக்கின்ற கடனை வாங்கி, அவர்கள் வீடுகளைக் கட்டிக் கொள்ள முடியாத நிலையிலே இருக்கிறார்கள். இப்போது அவர்கள் வீடுகளைக் கட்டிக் கொள்வதற்கு பணமாக ரூ. 3,500 கடனாக வழங்கப்படுகிறது. இந்த ரூ. 3,500-ஐ ரூ. 5,000 ஆக உயர்த்திப் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிவாசிகள் என்னுடைய தொகுதியாகிய அவினாசிப் பகுதியிலும், தொண்டாமுத்தூர் பகுதியிலும், நீலகிரி மாவட்டப் பகுதியிலும் இன்னும் பெரியார் மாவட்டம், தாளவாடி போன்ற பகுதிகளிலும் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். இந்த இடங்களில் அவர்கள் காலம் காலமாக தொடர்ந்து இருந்துக் கொண்டு வருகின்றார்கள். அந்தப் பகுதியில் இப்படி வாழக்கூடிய ஆதிவாசிகளை, இப்போது அரசின் காட்டிலாகா அதிகாரிகள் அந்தப் பகுதியை ரிசர்வ்ட் பாரஸ்ட் என்று சொல்லி, பரம்பரையாக வாழ்ந்து வந்த ஆதிவாசிகளை, அவர்கள் உழுதுவந்த நிலங்களை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் நிலையில், அவர்களை அப்புறப்படுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. வரைமடைப் பகுதியில் இருக்கக் கூடிய ஆதிமத்தை என்னுமிடத்தில் ஆதிவாசிகள் வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். நூறாண்டு காலமாக அங்கே வாழ்ந்து கொண்டு வரும் ஆதிவாசிகளை, அந்தப் பகுதி ரிசர்வ்ட் பாரஸ்ட் என்று சொல்லி அப்புறப்படுத்தும் நிலையும், அவர்கள் அங்கே வாழ முடியாமல் தவிக்கும் நிலையும் இருக்கிறது. எனவே, அப்பேர்ப்பட்ட நிலையைப் போக்கி, அவர்களுக்கு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தி, அவர்கள் அங்கே வீடு கட்டுவதற்கும், பல்வேறு கல்வி அறிவு பெறுவதற்கும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர் நலனைப் பொறுத்தவரையில், இதற்கு முன்னாலே கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், கோவை மாவட்டத்தில் இன்றைக்கு பல தொழிற்சாலைகள் மூடப்படும் அபாய நிலை இருக்கிறது. நலிந்த ஆலைகளை அரசு மேற்கொள்ளாமல் இருப்பது, நல்ல கொள்கை அல்ல. தொழிற் தகராறை உடனடியாக தீர்க்கின்ற முறையில், அதற்கான மாற்றம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கோவையில் ஜோதி மில்ஸ், இராதா கிருஷ்ணா மில்ஸ், தமிழ்நாடு டெக்ஸ்டைல் மில்ஸ், ஜெய

லட்சுமி மில்ஸ், கண்ணபிரான் மில்ஸ் போன்ற பல மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. இந்த ஆலைகளிலே இருக்கின்ற தொழிலாளர்கள் 2 நாட்களாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு முன்னால் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, 3 மாதங்கள், 6 மாதங்கள் என்று காலம் கடத்தாமல், இந்தத் தொழிலாளர் களுக்கு பாதுகாப்பு கொடுக்கின்ற முறையிலே, அரசே தமிழ் நாடு டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் மூலம் எற்று, நடத்தி அவர் களுக்கு பாதுபாப்பு கொடுக்கவேண்டும். தவிர, அவர்களுக்கு உதவி அளிக்கும் முறையில் மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர் கள் நிதியிலிருந்து அந்தத் தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் குறைந்த பட்சம் 1,000 ரூபாய் நிவாரணத் தொகையாகக் கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. நான் பல்வேறு காலக் கட்டங்களில் என்னுடைய தொகுதி வறட்சியான பகுதி என்று பேசியிருக் கிறேன். அங்குள்ள விவசாயிகள் கஷ்டத்திற்கு உள்ளாக்க பட்டிருக்கிறார்கள். மழையை நம்பித் தான் வாழ வேண்டிய சூழ்நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள். பல்வேறு கால கட்டங்களில் பாண்டியாறு—புள்ளம்புழா திட்டத்திற்கான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், இதிலே அந்த திட்டத்தைப் பற்றிய எந்தவிதமான குறிப்பும் இல்லை என்பதைப் பார்க்கும்போது வருந்த வேண்டி யிருக்கிறது. இந்த பாண்டியாறு—புள்ளம்புழா திட்டத்தினால் அவினாசி பகுதி மட்டுமல்ல ; கோவை மாவட்டத்திலுள்ள பிற பகுதிகளும், பெரியாறு, சேலம் மாவட்டங்களிலே இருக்கின்ற விவசாயிகளும் இதனால் பயன் பெறுவார்கள். லட்சக்கணக் கான ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் பாய்க்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, உடனடியாக தமிழக சர்க்கார், மத்திய அரசாங்கத்தோடும், கேரள சர்க்காருடனும் பேச்சு வார்த்தை கள் நடத்தி, இந்த திட்டத்தை அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒட்டுமொத்தமாக இந்த பட்ஜெட்டில், அபிவிருத்தித் திட்டங்கள் என்று சொல்லக்கூடிய திட்டங்கள் எதுவும் இல்லை. ஏழைகளுக்கு ஒரு வேளை உணவு வழங்கப்படும் என்று இந்த பட்ஜெட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது ; அதை நான் வர வேற்கிறேன். ஆனால் அந்த, ஏழைகளுக்கு எப்படி ஒரு வேளை உணவு வழங்கப்படும் என்பதைப் பற்றி தெளிவாகச் சொல்லப்படவில்லை. அதற்கான திட்டம் என்ன என்பதைப் பற்றியும் இதிலே குறிப்பிடவில்லை.

1982 மார்ச் 3] [திரு. எம். ஆறுமுகம்]

எனவே இந்த பட்ஜெட் பணவீக்கத்தையும், விலை வாசியையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் அதிகரிக்கும் முறையில் செயல்பட்டிருக்கிறது. எனவே வளர்ச்சித் திட்டங்கள் இல்லை. எனவே வளர்ச்சி திட்டங்கள் இல்லாமல் இருப்பதால், தொழிற்சாலைகள் வளர்வதற்கும், வளர்ச்சித் திட்டங்கள் அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

(பிற்பகல் 1.10)

*திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள 1982–83ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை சொல்வதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையிலும் ஏழை மக்களின் இன்னலை போக்கும் பல நல்ல திட்டங்களைத் தீட்டி அவர்களை வாழ வைத்துக் கொண்டிருக்கிற இந்த அண்ணாவின் அரசு இந்த ஆண்டும் யாரும் எதிர்பார்க்காத அளவில், வேறு எந்த மாநில அரசும் செய்யாத ஒரு சிறப்பான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. ஒரு வேளை உணவிற்காக தவிக்கும் லட்சோப லட்ச ஏழைக் குழந்தைகளின் மதிய உணவிற்காக ரூபாய் நூறு கோடியில் ஒரு திட்டம். தாய்மை உணர்வில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. தமிழகத்திலே உள்ள தாய்மார்கள் அனைவரும் ஒட்டு மொத்தமாக ஏற்றுக் கொள்ளும் அருமையான திட்டமிது. விவசாயத் தொழிலாளர்கள், ஏழை எளிய மக்களின் பாதுகாவலனாக இருக்கிற புரட்சித் தலைவர் இங்கே முதியோர்கள், ஆதரவற்ற விதவைகள், நல் வாழ்விற்கான மருந்தாக இருக்கிற எங்கள் புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மலையன்றி வேறு யாரால் இப்படிப்பட்ட நல்லத் திட்டங்களை கொண்டு வந்து சாதனை செய்ய முடியும்.

இந்திய துணைக் கண்டத்தில் எந்த மாநில அரசும் நிறைவேற்றாத தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டு வந்து எல்லா கிராமங்களுக்கும் குடி தண்ணீர், சாலை, பள்ளி, பாலம், கிராம மருந்தகம், தாய்சேய் நல விடுதி போன்ற பல்வேறு கிராம அடித்தள திட்டங்களை சிறப்பாக நிறைவேற்றி வந்திருக்கிற இந்த அரசை எவ்வளவு பாராட்டினாலும் தகும். தமிழுக்காக போராடுவோம் என்று வாய் பேச்சில் வீரர்களாக காலம் கழித்தவர்கள் பலர். ஆனால் எங்கள் இதய தெய்வம் புரட்சித்

தலைவர் தஞ்சையிலே தமிழ் சங்கம் கண்டார்கள். உலகத் தமிழ்ச் சங்கம் காண துடித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த அண்ணாவின் அரசு 69 ஒன்றியங்களிலே 1 80-81ஆம் ஆண்டி லேயும், 150 ஒன்றியங்களிலே 1981க82 ஆம் ஆண்டிலேயும் தன்னிறைவுத் திட்டங்களின் கீழ் பல்வேறு திட்டங்களை நிறை வேற்றி உள்ளது. 5,400 கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்வதற் காக 31.42 கோடியும், 11,581 கிலோ மீட்டர் கிராம இணைப்புச் சாலைகள் போடுவதற்காக 29.8 கோடியும், 7,954 சிறு பாலங்கள் கட்டியதற்காக 16 கோடியும், ஆதி திராவிடர்கள் சுடுகாட்டிற்கு செல்ல 9,432 கிலோ மீட்டர் சாலை அமைப்பதற்காக 1.12 கோடியும், 270 தாய்சேய் நலவிடுதி கட்டுவதற்காக 2.93 கோடியும், ஊரக மருந்தக கட்டிடங்கள் 97 கட்டுவதற்காக 47 லட்சமும், பள்ளிக் கட்டிடங்கள் 1,300 கட்டியதற்காக 11.34 கோடியும் செலவு செய்து 239 ஊராட்சி ஒன்றியங்களிலே தன்னிறைவுத் திட்டப் பணிகள் சிறப்பாக நிறைவேறியுள்ளன. இப்படிப்பட்ட வளர்ச்சி தமிழகத்தில் எந்தக் காலத்திலும் நடைபெற்றதில்லை.

தமிழகத்தில் கிராமப் பகுதிகளை உள்ளடக்கிய 3,874 புதிய தடங்களில் பேருந்துகள் விடப்பட்டதும், இதன்மூலம் 21,494 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டதும் இந்த அரசின் மிகப் பெரிய சாதனையாகும். ஒரு காலத்தில் பேருந்து போக்குவரத்தில் பெரிய நஷ்டம் ஏற்பட்டதும், தற்போது அதிகப் பேருந்துகள் விட்டப் பிறகும் லாபம் கிட்டியதும் நினைவு கூறத்தக்கதாகும்.

அதேப்போல 1982–83 நிதிநிலை அறிக்கையில் தமிழக மக்களை வாழ வைக்கக்கூடிய பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப் பட்டுள்ளன. இந்த அரசுக்கு மேலும் புகழ் சேர்க்கும் வண் ணம் இந்த நிதிநிலை அறிக்கையில் 2 முதல் 7 வயது வரையில் உள்ள ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவிற்காக 100 கோடி யில் திட்டம் தீட்டப்பட்டது இந்தியாவிலேயே முதலாவது ஆகும். தமிழகத்திலே உள்ள தாய்மார்களின் உள்ளங்களை நெகிழ வைக்கும் சிறப்பான திட்டமிது. கிராம மக்களின் பல் நோயினை போக்க இலவச பற்பொடி வழங்குவதும் எந்த மாநில அரசும் எண்ணிப் பார்க்காத திட்டமாகும். மண்ணையும், சாம்பலையும் வைத்து பல் துலக்கும் மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம் ஆகும்.

முதியோர்கள், ஆதரவற்ற விதவைகள் வாழ்வதற்காக உதவித்தொகைகளை வாரி வழங்கிய இந்த அரசு தற்போது உள்ள 25 ரூபாயை 35 ரூபாயாக ஆக்கியது அவர்கள் வாழ்வில் ஒளியேற்றுவதாகும். அதைப்போலவே அரசு ஊழியர்கள் ஒய்வூதியத் தொகையை 125 ரூபாய் ஆக உயர்த்தியதும் பாராட்

டுக்குரியதாகும். காங்கிரஸ் தியாகி மறைந்த பெரியவர் திரு. கக்கன் அவர்களுக்கு கொடுத்துவந்த உதவியை அப்படியே அவர்களுடைய துணைவியாருக்கு ஒதுக்கியது வரவேற்றுப் பாராட்ட வேண்டிய அண்ணா காட்டிய மரபாகும். கல்வி வளர்ச்சியில் உள்ள அக்கறையின் காரணமாக 1,000 நடு நிலை ஆசிரியர்கள் பதவிகள் ஏற்படுத்தப்படும் என்ற அறிவிப்பும் பாராட்டுக்குரியது. ஏழைகள் ரிக்ஷாக்களை காலால் மிதித்து கஷ்டப்படும் நிலையை உணர்ந்து 1,000 ரிக்ஷாக்களுக்கு மோட்டார் பொருத்தப்படும் என்ற அறிவிப்பு ஏழை ரிக்ஷா தொழிலாளர்களை வாழ வைக்கும் திட்டமாகும். பட்டுக்கோட்டை அஞ்சா நஞ்சன் அழகிரிசாமி நேசமணி, ஜீவா ஆகிய தியாகிகளின் பெயரால் புதிய பேருந்துக் கழகங்கள் ஏற்படுத்துவது அவர்கள் இந்த நாட்டிற்கு ஆற்றிய அரும் பணியை மக்கள் மறந்துவிடவில்லை என்பதை நினைவு படுத்துவதாகும். மண்ணெண்ணெய் வரிக்குறைப்பு ஏழை எளியவர்கள் வீடுகளில் இருள் அகற்றுவது ஆகும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற கருத்திற்கிணங்க இளமையிலேயே நோயை அறவே அகற்றுவதற்காக 1 முதல் 5 வயது பூர்த்தியடைந்த குழந்தைகளைப் பரிசோதித்து அட்டை வழங்கும் திட்டம் தமிழகத்திலே தான் முதன் முதலாகக் கொண்டு வரைப்பட்ட சிறந்த திட்டமாகும். தமிழகத்திலே நீண்ட நாட்களாக கிடப்பில் போடப்பட்டுள்ள சேது சமுத்திரத் திட்டத்தினால் மேற்குக் கடற்கரையிலிருந்து சென்னைக்கு வரும் கப்பல் தூரத்தில் 600 கிலோ மீட்டர் குறையும், ஒன்றரை நாள் எரிபொருள் மிச்சமாகும், இதனால் 80 சதவீதம் அன்னியச் செலாவணி இந்திய அரசுக்குக் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. தமிழகத்திலே உள்ள துறைமுகங்களை பெரிய வளர்ச்சியடையவும் இலங்கையிலே உள்ள தமிழ் மக்கள் நல் வாழ்வு பெறவும் உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்தி மாநில அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே சென்னையிலிருந்து ராமேஸ்வரம் வரை செல்லும் கடற்கரைச் சாலை நெடுஞ்சாலைத் திட்டம் முடிவு பெறாத நிலையில் உள்ள பாலங்களைக் கட்டி சென்னைக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையே நேரடிப் போக்குவரத்து ஏற்படுத்துவது சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற எடுத்துக் கொள்ளப்படும் ஆரம்பப் பணியாகும். ஆகவே அந்தத் திட்டத்தையும் செயல் படுத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாயூரத்திலிருந்து காரைக்குடி வரை லட்சக்கணக்கான கீழ்க் கடற்கரை ஓரத்திலுள்ள மக் ள் சென்னைக்குச் செல்வது என்றால் சுமார் 15 மணி நேரம் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. இந்த நிலையினைப் போக்க சீரான ரயில் போக்குவரத்து அமைய திருத்துறைப்பூண்டி பட்டுக்கோட்டை, பேராவூரணி, அறந்தாங்கி வழியாக சென்னையிலிருந்து காரைக்குடி வரை எக்ஸ்பிரஸ் ரயில் விடுவதற்கு மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சுமார் 7 லட்சம் மக்கள் வாழும் தொகுதியின் மத்தியில் உள்ள தாலுக்கா அரசு மருத்துவ மனையில் எக்ஸ்ரே.

ரத்த பரிசோதனை வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை, எக்ஸ்ரே எடுக்க வேண்டுமென்றால் 30 மைல் தொலைவில் உள்ள புதுக்கோட்டைக்கோ 50 மைல் தொலைவில் உள்ள தஞ்சாவூருக்கோ தான் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே இந்த நிதியாண்டிலே எக்ஸ்ரே, ரத்த பரிசோதனை நிலையம் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பேராவூரணியில் உள்ள மகளிர் உயர் நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் பெருமகளூரில் உள்ள ஆண்கள் உயர் நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாகவும் ஆக்கித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இரண்டாம் புளிக்காட்டிலேயும் பெருமகளூரிலேயும் சார்பதிவாளர் அலுவலகங்கள் ஏற்படுத்தித்தர வேண்டுமேன்று கேட்டுக் கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

* திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982–83 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது காந்தி காமராஜ் தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

'' வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை ''

என்ற வள்ளுவப் பெருந்தகையினுடைய குறளை அடிப்படையாகக் கொண்டு இந்த அரசு ஏழை எளிய மக்களுக்கு உதவ வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு இந்த பட்ஜெட்டை கொண்டு வந்திருக்கிறது. உங்களுக்கு நிரம்ப ஆசை இருக்கிறது, ஏழை எளிய மக்களுக்கு உதவிடவேண்டுமென்று. ஆனால் நீங்கள் அளித்து இருக்கின்ற அத்தனை திட்டங்களும் ஏழை மக்களுக்குப் போய்ச் சேருமா ? அதற்கான சரியான அதிகாரிகள் இருக்கிறார்களா ? தன்னலமற்ற அதிகாரிகள், பொது மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று கருதுகின்ற அதிகாரிகள் மலிந்து கிடந்தால் தான் இத்தகைய காரியங்களைச் செய்ய முடியும். ஆனால் இன்றைக்கு அத்தகைய அதிகாரிகள் மலிந்து கிடக்கவில்லை, மாறாக நலிந்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதைத் தான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

கணவனும் மனைவியும் ஒரு இடத்திலே வேலை பார்க்க வேண்டுமென்பது அரசு ஆணை. ஆனால் திருநெல்வேலியிலே கணவனும் மனைவியும் வேலை பார்த்தால் திடீரென்று கணவரையோ அல்லது மனைவியையோ தென் ஆற்காட்டிற்கு மாற்றி விடுவார்கள். பிறகு அவர்கள் இங்கே வந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கண்டு பேசி என்ன நடக்கிறதோ மறுபடியும் திருநெல்வேலிக்கு மாற்றுதல் உத்திரவு வாங்கிச் செல்கிறார்கள். இப்படித்தான் அதிகாரிகள் இருக்கிறார்கள்.

உணவு நிலைமையைப் பொறுத்தவரையில் உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம். 1982-83 ஆம் ஆண்டிலே நெல் உற்பத்தி 68 லட்சம் டன் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் 1981-இல் பொதுப் பங்கீட்டுக்கு 6.7 லட்சம் டன் தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், பொதுப் பங்கீட்டு முறையால் மட்டுமே தமிழ்நாட்டு மக்கள் வாழ்ந்து விட முடியாது; வெளி மார்க்கெட்டிலும் வாங்கிச் சாப்பிட்டால்தான் அவர்கள் தங்களது வாழ்க்கையை ஓட்ட முடியும் என்ற நிலையைத் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். பொதுவாகக் கிராமப் புறங்களில் காலை 9 மணிக்கு வயல்களுக்கு வேலைக்குச் செல்கிறார்கள். மாலை 6 மணிக்குப் பிறகுதான் வீட்டிற்குத் திரும்புகிறார்கள். பொதுப் பங்கீட்டு முறையில் காலை 10 மணிக்கு கடையைத் திறந்துவிட்டு 12 மணிக்கு அடைத்துவிட்டு, மறுபடியும் $2\frac{1}{2}$ மணிக்குத் திறந்து மாலை 5 மணிக்கு அடைத்து விட்டுப் போய்விடுகிறார்கள். ஆகவே, பொது மக்கள் எப்பொழுது பொருள்களை வாங்க முடியுமோ அப்பொழுது அந்தக் கடைகள் திறந்திருப்பதில்லை; பொது மக்களும், விவசாயிகளும் வேலைக்குச் சென்றிருந்த நேரத்தில் கடைகள் திறந்திருக்கின்றன.

(பிற்பகல் 1-20)

ஆனால் அதே நேரத்திலே பொதுப் பங்கீட்டு முறையிலே செய்யாமல் வியாபாரிகள் தனிப்பட்ட முறையிலே செய்கின்ற வியாபாரத்திற்குக் கூட இப்பொழுது மிகவும் சங்கடமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது லெவி என்ற பெயரால். லெவி என்ற பெயரிலே நீங்கள் கட்டாயமாக வியாபாரிகளிடம் கொள்முதல் செய்யும்பொழுது எந்த அளவிற்குப் பாதிக்கப்படுகிறது என்பதைப் பற்றி இதற்குமுன் பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள். பொதுப் பங்கீட்டு முறைக்கு உணவுப் பொருள்கள் தேவை என்றால் பெரிய பெரிய மடாலயங்களில் இருக்கின்ற பொருள்களை கொள்முதல் செய்யலாமே? அறக்கட்டளை என்று 300 ஏக்கர், 400 ஏக்கர் வைத்துள்ளவர்களிடம் நீங்கள் நெல்லை அரசுக்குத்தான் அளிக்க வேண்டும் என்று உத்தரவு போட்டு அந்த முறையிலே செய்யலாமே. ஆனால் இன்றைக்கு அந்த வியாபாரி

களிடம் வாங்குவதால் வியாபாரிகள் இன்னலுக்கு உள்ளாகும் சூழ் நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மையைப் பொறுத்தவரையில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களைப் பற்றிப் பார்த்தால் 62 கிடங்குகளை 62 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப் போவதாகச் சொல்லி யிருக்கிறீர்கள். ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களிலும் இதே முறைதான் நடக்கிறது விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் விளை பொருட்களை ஒழுங்கு முறை விற்பனைக் கூடத் திற்குக் கொண்டு வர வேண்டுமென்றால் காலை 6 மணிக்கு வண்டியைக் கட்டிக் கொண்டு வந்தால் 7 மணி $7\frac{1}{2}$ மணி அளவிற்கு அந்த இடத்திற்கு வந்துவிட முடியும். ஆனால் அந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் வேலை பார்க்கின்றவர் களோ $10\frac{1}{2}$ மணி, 11 மணி அளவிற்குத்தான் அங்கே வருகிறார் கள். அவர்கள் வரும் வரைக்கும் அந்த வண்டிக்காரர்களை அங்கேயுள்ள இடைத்தரகர்கள் காக்க வைத்திருக்க மாட்டார்கள், அவர்களே அந்த நெல்லைக் கொள்முதல் செய்து விடுவார்கள். இப்படிப்பட்ட நிலைமைதான் அங்கேயிருக்கிறது என்று தெரி வித்துக் கொள்கிறேன்.

